


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 3 - ஜூன் - 2018*

கௌரவ ஆசிரியர்

முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
**இணைய தள முகவரி: www.keetru.com**

**தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00**
**மாணவர்களுக்கு ₹ 300.00 அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00**

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் - 4

பழந்தமிழ் அடையாளங்கள்
ராஜ் கௌதமன் - 9

எழுத்துல ஜீவன கொண்டுட்டு வந்துருக்கன்...
சி.எம்.முத்து - 17

ஈழத்தில் சமூகப் பண்பாட்டு வரலாற்று சக்திகள்
சி.ஆர்.ரவீந்திரன் - 23

திரு.வி.க. பார்வையில் பௌத்தம்
அ.மார்க்ஸ் - 29

கேரள மலைப்புலயர் தமிழில் சொல்வளம்
ஆ,கார்த்திகேயன் - 35

அலெக்ஸி டால்ஸ்டாயின் சித்திர நடை எழுத்து
எஸ்.ஆர்.கே. - 40


மயிலாப்பூர் சிங்காரவேலர் எனும் சமூக அறிவியலாளர்
வீ.அரசு - 49

பழந்தமிழ் இலக்கியங்களில் பெண் நிகழ்த்துநர்கள்
கோ.பழனி - 59

வரலாற்றின் பொய்முகம்
ஏ.எம்.சாலன் - 64

அறம் பிறழும் அறிவுத்துறை
அரிஸ்டார்கஸ் - 68


குழந்தை இலக்கியத்தில் 'காமிக்ஸ்'
சுகுமாரன் - 71



# படித்துப் பாருங்களேன்...

ஆ. சிவசுப்பிரமணியன்




**பீகாரில் இருந்து தீகார் வரை**

கன்னையா குமார் (2016)

**From Bihar To Tihar** -

Kanhaiya Kumar

Juggernaut Books, New Delhi - 110 049

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஏஸ்எப்ஐ-இன் சார்பில் தாம் பயிலும் துறையின் கவுன்சிலர் பதவிக்கு கன்னையா குமார் போட்டி யிட்டார். மார்ச் 2012-ல் நடந்த இத்தேர்தலில் எஸ்எப்ஐ-யும் ஏஎஸ்எப்ஐ-ம் கூட்டுச் சேர்ந்து ஓரணியாகப் போட்டியிட்டன. எதிரணியில் ஏபிவிபியும் அகில இந்திய மாணவர் அமைப்பும் (AISA) தனித்தனியாகப் போட்டியிட்டன. குறைந்த அளவு உறுப்பினர்களே ஏஸ்எப்-பில் இருந்தமையால் முதலாமாண்டு மாணவராக இருந்தபோதிலும் இவர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்டார். இது முதல் அனுபவமாக அமைந்தது. வாக்குச் சேகரிக்க மாணவர் விடுதிக்குச் செல்லும்போது தமக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்காமல் அறைகளில் இருந்த புத்தகங்களையும் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது தேர்தல் பொறுப்பாளராகச் செயல்பட்ட மாணவர், இவரை வாக்கு கேட்கும்படித் தூண்டுவார். அதன் பிறகு தமக்கு வாக்களிக்கும்படி வேண்டிவிட்டு, பின் அமைதியாகி விடுவார். இது நகைப்பிற்கிடமாக அமைந்தது.

ஒவ்வொரு துறையிலும் தேர்தலுக்கு முன் அத் துறை மாணவர்களின் பொதுக்குழுக் கூட்டம் நடை பெறும். அக்கூட்டத்தின் மாணவர் பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் உரையாற்றுவது வழக்கம். முதல் முறையாக இவர் ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது ஏபிவிபி-யைத் தோற்கடிக்க வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். இது நல்ல வரவேற்பைப் பெற்றது. என்றாலும் அத்தேர்தலில் இவர் தோல்வியுற்றார்.

### 2014 நிகழ்வுகள்

2014 பொதுத்தேர்தலில் பாஜக ஆட்சிக்கு வந்ததும் ஜேஎன்யூ வளாகத்தில் சில எதிர்மறையான மாற்றங்கள் நிகழத் தொடங்கின. கல்விக் கட்டண உயர்வு, மானியக் குறைப்பு, விடுதிக் கட்டண உயர்வு என்பன நிகழ்ந்தன. கல்வி உதவித் தொகை உயரவில்லை.

தனி மனித உரிமைகள் மீதான தாக்குதல்கள் தொடங்கின. உணவு விடுதியில் மாட்டிறைச்சி தடை செய்யப்பட்டது. மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி குறித்துப் பேசும் மாணவர்கள் நிர்வாகத்தால் குறி வைக்கப்பட்டனர். ரம்ஜான் மாதத்தின்போது குளிர்நீர் வழங்கும் கலனில் மது கலக்கப்பட்டது.

2014-இல் பிரதமர் மோடி, பிரதமராகப் பதவி யேற்கும் நாளில் ஒரு நிகழ்வு நிகழ்ந்தது. 2002-ல் அவர் குஜராத் முதல்வராக இருந்தபோது குஜராத்தில் உள்ள கோவில் ஒன்றில் பயங்கரவாதிகளின் தாக்குதல் ஒன்று நடைபெற்றது. இத்தாக்குதலுக்காக ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். 11 ஆண்டுகள் கழித்து அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் பொய்யென்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். உச்சநீதிமன்றம் குஜராத் காவல்துறையைத் தன் தீர்ப்பில் விமர்சனம் செய் திருந்தது. அப்பாவிகள் சிலரைப் போதிய சான்றுகள் இல்லாமல் சிறையில் வைத்திருந்தமை பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனெனில் இவர்களில் பலர் இளைஞர்கள். செய்யாத குற்றத்திற்காகத் தமது இளமைப் பருவத்தைச் சிறையில் கழிக்க நேர்ந்தது. குஜராத் காவல் துறையைக் கண்டித்து டெல்லியில் உள்ள குஜராத் பவன் முன் ஆர்பாட்டம் நடத்த ஜேஎன்யூ மாணவர்கள் திட்டமிட்டார்கள். இதன் பொருட்டு பேருந்தில் ஏறி புறப்படும் முன், காவல்துறையினர் இவர்களைத் தடுத்து நிறுத்தினர். ஐந்து காவல்துறை வாகனங்களில் வந்த காவலர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் நுழைந்து மாணவர்கள் எங்கும் செல்லக் கூடாது என்றார்கள். மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் அவர்களால் தடுக்க முடியவில்லை. இதனால் மாணவர்கள் ஏறிய பேருந்தைக் கடத்தி, டெல்லியில் அரசியல் எதிர்ப்புக் கூட்டங்கள் நிகழும் ஜந்தர் மந்தார் என்ற இடத்திற்கு கொண்டுசென்று விட்டார்கள். அங்கே இவர் ஆற்றிய உரை காவலர்களையும்கூட ஈர்த்தது.

இந்நிகழ்வு நடந்த அன்று, பாசிச எதிர்ப்பு, மதவாத எதிர்ப்பு என்ற இரண்டையும் நோக்கமாகக் கொண்ட அணி ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்தைப் பலர் முன்மொழிந்தார்கள். இதனை ஏற்று இடதுசாரி முற்போக்கு அணி (எல்பிஎப்) என்ற அமைப்பை ஏஸ்எப்ஐ உருவாக்கியது. இடதுசாரி அமைப்பு மாணவர்கள், சமூகநீதிக்கான மாணவர் அமைப்பினர், எந்த அமைப்பையும் சாராதோர் எனப் பல்வேறு தரப்பு மாணவர்கள் இவ் அமைப்பில் இணைந்தனர். "**ஜெய் பீம், லால் சலாம்**" என்பது இதன் முழக்கமாக அமைந்தது.

இம்முழக்கமானது இரண்டு இயக்கங்களை இணைப்பதாக அமைந்தது. சாதியற்ற சமுதாயத்தை அமைக்கப் போராடும் தலித் அம்பேத்கரியர்களின் முழக்கமாக "ஜெய் பீம்" என்ற முழக்கம் அமைந்தது.

சமத்துவ சமூக அமைப்பை உருவாக்குவதற்குப் பாடுபடும் கம்யூனிச இயக்கத்தின் முழக்கமே "லால் சலாம்" ஆகும். இவ்விரு முழக்கங்களும் ஒன்றுட னொன்று நெருக்கமானவையாக அமைந்தன. இவ் வியக்கம் ஜேஎன்யூவின் புதிய அரசியல் உருவாக்கத்தின் அடையாளமாக அமைந்தது. என்றாலும் 2014-ல் நடந்த மாணவர் தேர்தலில் ஏபிவிபி-யே அதிக இடங்களில் வெற்றி பெற்றது.

அடுத்து வந்த தேர்தலில் மாற்றம் ஏற்பட்டது. பல்கலைக்கழகத்தின் மாணவர் தலைவராகக் கன்னையா குமார் தேர்வு செய்யப்பட்டார். இவரது பேச்சாற்றலும் விவாதத் திறனும் இவ்வெற்றியில் துணைநின்றன.

•••

பிஜேபி ஆட்சிக்கு வந்தபின் பல்கலைக்கழகங்கள் உயர் ஆய்வு நிறுவனங்கள் என்பனவற்றில் நிகழ்ந்த நியமனங்கள் பண்பாட்டு நிறுவனங்களைக் கைப்பற்றும் குறுகிய நோக்கிலேயே அமைந்தன.

புனேயில் உள்ள திரைப்படத் தொலைக்காட்சி நிறுவனம், இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகம் (ICHR), இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT) என்பனவற்றில் நிகழ்ந்த உயர்பதவி நியமனங்கள் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தச் சார்புடையனவாக அமைந்தன. சென்னை ஐஐடியில் பயிலும் மாணவர்கள் உருவாக்கிய அம்பேத்கர் பெரியார் ஆய்வு மையம் நிர்வாகத்தின் அடக்குமுறையை எதிர்கொண்டது. உதவித்தொகை வழங்குவதில் நிகழ்ந்த விதிமுறை மாறுதல்கள் அடித்தட்டு மக்களின் கல்வி பயிலும் உரிமையில் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதை எதிர்த்துப் பல்கலைக்கழக மானியக் குழுவின் வளாகத்தினுள் ஜேஎன்யூ மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அமைப்பாளர்கள் கற்பனை செய்யாத வகையில் திரளான மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். அமெரிக்காவின் வால்தெரு எதிர்ப்பில் நிகழ்ந்த போராட்டம் போல் இது அமைந்து 'Occupy UGC' என்ற புதிய முழக்கம் உருவாகி நாடு தழுவிய இயக்கமானது. மனிதவளத் துறையின் அமைச்சரான ஸ்மிருதி ராணி தன் அறையை விட்டு வெளியில் வந்து மாணவர்களிடம் மனுவை பெற்றுக்கொண்டார். இது குறித்து 'ஏராளமான ஊடகவியலாளர்கள் வெளியில் காத்திருந்தமைதான் இதற்குக் காரணம். புகைப்படக் கருவியும் அதன் வெளிச்சமும் அவருக்கு முக்கிய மானதாக இருந்தது. ஏழை மாணவனின் வாழ்வில் வெளிச்சம் ஏற்படுத்துவது அவரது திட்டங்களில் இடம்பெறவில்லை' என்கிறார் கன்னையாகுமார்.

Occupy UGC படைப்பு தன்மையுடன் கூடிய போராட்டமாக பரிணமித்தது. பாடல்கள், கவிதைகள், ஓரங்க நாடகங்கள் என்பன அரங்கேறின. ஜேஎன்யூவில் இருந்தும் பிற நிறுவனங்களிலிருந்தும் வந்த ஆசிரியர்கள் அங்கு வகுப்பு நடத்தினர். நாள் முழுவதும் மாணவர்கள் அங்கு அமர்ந்து முற்றுகையில் ஈடுபட்டனர்.

ஒரு சிறு விவாதத்தின் காரணமாக காவல் துறையினர் மாணவர்கள் மீது தடியடி நடத்தினர். இப்போராட்டத்தின் போது பல முறை தடியடி நிகழ்ந்து மாணவர்கள் பலர் காயமடைந்தனர். ஒரு டஜனுக்கு மேற்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்கள்.

அதிர்ச்சியூட்டும் வகையில் ஆண் காவலர்கள் மாணவிகளைத் தாக்கினர். அடக்குமுறையின் உச்ச கட்டமாக இது அமைந்தது. ஜேஎன்யூவில் மாணவர்கள் தம் கொள்கைக்காகப் போராடுவார்கள். ஆனால் அது காவல்துறைக்கோ அரசுக்கோ எதிரான சதி அல்ல. தம் உரிமைகள் ஏன் பறிக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளவே அவர்கள் விரும்புவர். ஆனால் காவல் துறையும் அரசும் தம் எதிரிகளாக மாணவர்களைப் பாவித்தனர்.

இந்த நாட்டின் மாணவர்களாக அல்லாமல் நாட்டின் எல்லையில் வந்து நிற்கும் எதிரிகளாகப் பார்த்தது. 'உலகமே ஒரே குடும்பம்' என்று கூறும் அரசு தன் சொந்த நாட்டுமக்களையே கொடூரமாக அடிக்கிறது. இந்நிகழ்வுகளை இவர் குறிப்பிடுகிறார்.

இப்போராட்டம் மாணவர்களிடையே ஒருங் கிணைப்பை ஏற்படுத்தியது. பல்கலைக்கழக வாழ்க் கையில் ஒவ்வொரு மாணவரும் தமக்கென ஓர் உலகை உருவாக்கிக்கொண்டு அதில் வாழ்ந்து வந்தனர். இதனால் அவர்களை ஒன்றாக இணைப்பது எளிதாக இல்லை. ஆனால் இப்போது பா.ஜ.க. அரசானது கல்விக்கும் அரசியல் அமைப்பு மக்களாட்சிக் கோட்பாட்டுக்கும் எதிரானது என்பதை உணர்ந்துகொண்டனர்.

இதனால் அவர்களை ஒருங்கிணைப்பது எளிதாக இருந்தது. பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த வேறு பாடான சித்தாந்த சார்பைக் கொண்ட மாணவர்கள் சாலையோரத்தில் ஒன்றாக அமர்ந்தார்கள். தார்பாய் களில் படுத்து உறங்கினார்கள். நெருப்பின் முன் அமர்ந்து குளிர் காய்ந்தார்கள்.

தசரா பண்டிகையன்று ராவணனின் கொடும் பாவியை எரிப்பது வழக்கம். செங்கோட்டை அருகே நிகழும் கொடும்பாவி எரிப்பில் கலந்துகொள்ள பிரதமர் மோடி இவர்களைக் கடந்து சென்றார். இது அவர் களுக்குப் புதிய போராட்ட வழியைக் காட்டியது. இதன்படி மத்திய அரசை உருவகப்படுத்தி கொடும்பாவி ஒன்றைச் செய்து அதைக் கொளுத்தினார்கள். நள்ளிரவில் காவல்துறையினர் இவர்களைத் தாக்கினார்கள். வலுக்கட்டாயமாகப் பேருந்துகளில் ஏற்றிச்சென்று காவல்நிலையம் ஒன்றில் இறக்கினார்கள். அங்கிருந்த காவலர்கள் இவர்களை நன்றாக நடத்தியதுடன் குளிர் காயவும் உதவினார்கள்.

•••

Occupy UGC - போராட்டத்தின்போது பீகார், ஜார்கண்ட், மேற்குவங்கம் ஆகிய மூன்று மாநிலங் களுக்கு கன்னையா குமார் பயணித்தார். பீகாரில்



எதிர் பார்த்த்துபோலவே ஆதரவு கிட்டியது. ஜார் கண்டில் ஏபிவிபியினர் எதிராக நின்றார்கள். இப் போராட்டத்தின்போது டில்லி பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஏபிவிபி மாணவர்கள் இரவு நேரத்தில் கற் களை எறிந்தார்கள். ராஞ்சி பல்கலைக்கழகத்திலும் இதே செயலை நடத்த முன்வந்தார்கள். என்றாலும் போராட்டத்தில் ஈடபட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தமையால் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. பீகாரிலும் மேற்கு வங்கத்திலும இதே நிலைதான்.

இப்பயணத்தில் ஏராளமான ஆசிரியர்களையும் மாணவர்களையும் இவர் சந்திக்க நேர்ந்தது. இச்சந்திப்பு பல உண்மைகளை இவர் உணரும்படிச் செய்தது. பல பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் கல்வி பயில சரியான விடுதி வசதிகள் இல்லை. லட்சக்கணக்கில் மாணவர்கள் இருக்க ஆயிரக்கணக்கான மாணவர்கள் மட்டுமே தங்குவதற்கு விடுதிகள் இருந்தன. கல்வி உதவித்தொகை பெறுவதிலும் இடர்ப்பாடுகள் இருந்தன. பல ஏழை மாணவர்கள் உதவித்தொகை பெறாமலேயே பயில நேரிட்டது. இட ஒதுக்கீட்டில் பல்கலைக்கழக மாணவர்களில் சிலர் புதிய சிந்தனைப் போக்குகளை வெளிப்படுத்தினர். இது வகுப்பறைகளில் எதிரொலித்தது... சான்றாக வரலாற்றுப்பாடம் பயிலும் ஓர் ஆதிவாசி மாணவன் ஆதிவாசிகளின் வரலாறு கற்பிக்கப்படவில்லை என்பதை உணர்கிறார்.

தலித், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாண வர்கள் தங்கள் ஜாதி ஆங்கிலேயர்களால் உருவாக்கப் பட்டதல்ல என்றார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டு களாக இந்தியப் பண்பாட்டின் ஓர் அங்கமாக இது இருந்துவருகிறது என்று வாதிட்டனர்.

காந்தி, மார்க்ஸ் என்போருடன் அம்பேத்கரையும் மாணவர்கள் பயிலத் தொடங்கினர். இடதுசாரி இயக்க மாணவர்கள் அம்பேத்கரிய மாணவர்கள், ஐதராபாத் மத்திய பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் என பல தரப்பினரும் ஒன்றிணைந்து ஏபிவிபியை எதிர்த்துப் போராடத் தொடங்கினர்.

•••

2013ல் முசாபர் நகரில் நிகழந்த வகுப்புக்கலவரம் குறித்த ஆவணப்படத்தை திரையிடுவதைத் தடுக்கும் முயற்சியில் ஏபிவிபியினர் ஈடுபட்டனர். டில்லியில் இப்படத்தைத் திரையிடும்போது தாக்குதல் நடத்தினர். ஐதராபாத்தில் ரோஹித் வெமுலா என்ற மாணவர் உட்பட ஐந்து மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். இச்செயலில் மத்திய அரசின் மனிதவளத்துறையின் பங்களிப்பும் இருந்தது.

ஐதராபாத் மாணவர்களுக்கு ஆதரவாக டில்லியில் மனிதவளத்துறை அலுவலகம் எதிரில் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டது. அதற்கு முந்திய நாளான ஜுலை 17ல் அதிர்ச்சி தரும் நிகழ்வு ஒன்று நிகழ்ந்தது. ஐதராபாத் மத்திய பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ரோஹித் வெமுலா தற்கொலை செய்துகொண்டார்.

இதனால் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற திட்டமானது, ஓர் இயக்கமாக மாற்றமடைந்தது. ரோஹித் வெமுலாவுக்கு நீதி கேட்டு, நாடு முழுவதும் ஏராளமானோர் திரண்டார்கள். அறிமுகமில்லாத பலரிடமிருந்தும் ஆதரவு கிட்டியது. பக்கோடா விற்பவர் ஒருவர், போராடும் மாணவர்களுக்குப் பக்கோடா வழங்கினார். காவலர்களாலும் சங்க் பரிவாரக் குண்டர்களாலும் தாக்கப்பட்டவர்களுக்கு மருத்துவர் ஒருவர் கட்டணமின்றி சிகிச்சை அளித்தார்.

ஓர் இயக்கமானது மக்களின் உணர்வுகளைத் தொட்டு, அவர்களின் பிரச்சினைகளை சரியான முறையில் சரியான நேரத்தில் பேசினால் அது பேரியக்கமாக மாறும். கடந்த காலங்களில் பிரமாண்டமான மக்கள் இயக்கங்கள் வலுவான தலைமையில் நிகழ்ந்தன. தற்போது வேறுபாடான முறையில் இயக்கங்கள் நடக்கின்றன. பல்வேறு இடங்களில் சிறு இயக்கங்கள் ஒன்றிணைந்து மக்கள் இயக்கங்களாக உருவெடுக்கின்றன.

எல்லா இடங்களிலும் மக்களுக்கென்று குறிப்பிட்ட பிரச்சினைகள் உள்ளன. ஆனால் இவை தலைவர்களால் கண்டுகொள்ளப்படுவதில்லை. இக் கண்டுகொள்ளாமையே வட்டார அளவிலான சிறு இயக்கங்களை உருவாக்குகின்றன. ஆனால் இவற்றிற்கு முக்கியத்துவம் கிடைப்பதில்லை. இவ்வியக்கங்களை முன்னெடுத்தும் செல்லும் மக்கள், தங்களைப் போலவே இப்பிரச்சினைகளை எதிர்கொள்வோர் இருப்பதை உணர்கிறார்கள். இருதரப்பினருக்கும் ஒரே எதிரிதான் இருக்கிறார் என்பதைக் கண்டறியும்போது அவர்கள் ஒன்றிணைகிறார்கள். இயக்கம் விரிவடைய மக்கள் ஒன்றிணைவது அவசியமான ஒன்று.

இரண்டாவதாக அதிக எண்ணிக்கையில் ஒன்றாக வசிப்பவர்கள் மாணவர்கள்தாம். இவர்களில் பலர் இட ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகை வாயிலாக உயர் கல்வியைப் பெறுகிறார்கள். கல்வியைத் தனியார் மயமாக்கல், நிதி நல்கையைக் குறைத்தல் என்பன, தாம் உறுதியற்ற தளத்தில் நிற்கிறோம் என்ற உணர்வைப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்த உடனேயே மாணவர்கள் உணரும்படி செய்துவிடுகின்றன.

அதே நேரத்தில், தம் குடும்பப் பின்புலத்தையும், தம் சொந்த சமூகத்தையும், தம் கல்வி, ஆய்வு நோக்கு ஆகியவற்றின் துணையுடன் ரோஹித் வெமுலா போல் பார்க்கத் தொடங்கி விடுகிறார்கள். இதுவே தெருவுக்கு வந்து போராடும்படி, அவர்களைத் தூண்டி விடுகின்றது.

தம் சொந்த சமூகத்துடன் அவர்கள் இணைந்திருப்பதால், அவர்கள் கிளர்ந்து எழும்போது அவர்களது சமூகமும் அதில் இணைந்துகொள்கிறது. இதனால் மாணவர் இயக்கம் சமூக இயக்கமாக மாறுகிறது. இதன் விளைவாக நம் நாட்டின் உயர்கல்வி நிறுவனங்கள், குறிப்பாகப் பல்கலைக்கழகங்கள் போர்க்களங்களாகி விடுகின்றன. மாணவர்களுக்கும் ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கும் இடையிலான ஒற்றுமையை அரசு விரும்புவது இல்லை. இதில் தொடர்புடையவர்களைத் தண்டிக்கப் பட வேண்டியவர்கள் பட்டியலில் அரசு சேர்த்து விடுகிறது. இவ்வகையில், குறிப்பாக ஜேஎன்யூ, அவர்கள் தாக்குதலுக்கு உரியதாக உள்ளது. பயங்கரவாதிகள் வாழும் இடமாகக் குறிப்பிடப்படுகின்றது.

ரோகித் வெமுலாவின் மரணத்திற்கு நீதி கேட்டுத் தொடங்கிய இயக்கம் குறித்து கன்னையா குமார் விரிவாகக் கூறிச் செல்கிறார்.

- தொடரும்

“

ஒரு காலத்தில் எனக்கு ரிக்ஷாக்காரர்கள், விபசாரிகள், எச்சில் பீடி பொறுக்கிகள், ரௌடிகள், பிக்பாக்கட்காரர்கள் முதலிய எத்தனையோ பேர் நெருங்கிய நண்பர்களாயிருந்திருக்கின்றனர். அதனால் தானோ என்னவோ எனக்கு அவர்களின் மீது வெறுப்பே உண்டாவதில்லை; அவர்களிடம் ஒரு ஈடுபாடு இருக்கிறது. சில சமயங்களில் இவர்களில் யாரேனும் ஒருவராய் மாறி வாழ்ந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமே என்று கூடத் தோன்றுகிறது. உண்மையாகவே அவர்கள் வாழ்வில் ஒருவித லயிப்பு எனது இளமைப் பிராய மனத்திலேயே ஏற்பட்டு விட்டது; கூடவே வெறுப்பும் பிறந்ததை எப்படி மறைப்பது? நடுத்தர வர்க்க ரெண்டுங்கெட்டான் வாழ்வைவிட அவர்கள் வாழ்வில் ஒரு வெறித்தனமாவது இருக்கிறதே!

- ஜெயகாந்தன்

”



# பழந்தமிழ் அடையாளங்கள்

## ராஜ் கௌதமன்

மனிதர்கள் வாழ்வியல் சார்ந்தும், இயற்கைப் பொருட் களைச் சார்ந்தும் தங்களுடைய 'அடையாளங்களை' கட்டமைத்து வந்துள்ளனர். விலங்குகளுக்கு அடிப் படையில் ஆதார நிலையில் உள்ள அடையாளங்கள் ஓர்மையற்ற விதங்களில் உருவாவதுபோல, இயற்கையி லிருந்து கடந்து எழுந்து வந்த மானிட இனத்திற்கு அவை உருவாகவில்லை; அவர்களுடைய அடையாளங்கள் அவர்களுடைய தன்னிலையாக்கங்களோடும் வாழ் விருத்தலின் உந்துதல்களோடும் ஓர்மையோடு கட்டமைக்கப்பட்டு வந்துள்ளன. பொருள்சார்ந்த உலகிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மாந்தரின் - மாந்தர்க்கான அடையாளங்கள், மாந்தரையும், பொருட்களையும் கட்டுப்படுத்தி வந்துள்ளன.

மானிட நாகரிக பரிணாம வளர்ச்சியில், மானிடக் குழுக்களுக்கு இடையிலான அதிகார அரசியலும், இதற்குரிய மதிப்பீடுகளும், அவ்வக்காலகட்டங்களின் வர்க்கங்கள், இனங்கள், தேசங்கள், மதக்குழுக்கள், சாதிக்குழுக்கள் ஆகியவற்றிற்கிடையிலான போராட்ட வடிவங்களாக, புனைவுகளாகக் கருத்தியல் நியாயங்களை வழங்கி வந்தன. ஒவ்வொரு மானிடக் குழுவின் இருத்தலுக்கான இந்த நியாயங்களை அந்தந்தக் குழுவின் 'அடையாள அரசியல்' முன்னெடுத்துச் சென்றது. கருத்தியல் தளங்களை நோக்கிய அடையாளப்படுத்துதலும், அடையாள மீட்டுருவாக்கமும், அடையாள மேலாதிக்கமும் 'வரலாற்றில்' தொடர்ந்து வந்தன. அடையாளங்கள் புதுப்பிக்கப்படலும், அடையாள உருவாக்கமும் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

ஆதிக்க அரசியல் தளத்தில் அரசியல் ஆதிக்கம் சார்ந்த அடையாளங்களால் உலகெங்கும் இன்று தனிமனித அளவில் பலமற்றவராயினும், சார்ந்த அடையாளங்களால் அதிகாரம் பெற்றுவிடுவதைக் காணலாம். இருபதாம் நூற்றாண்டு முதல், 'பருண்மை யான' முதலாளிகளையும், தொழிலாளிகளையும் எங்குத் தேடினாலும் நேருக்கு நேராகக் காண இயலாது. அவர்களுடைய வேலை - தொழில்தனங்களின் அடையாளங் களைத்தான் காண இயலும். கண்களுக்கும், மனங் களுக்கும் முன் பருண்மையான ஆலை மேலாண் மையையும், தொழிற்சங்க மேலாண்மையையும் பார்க்கலாம். வேறு வார்த்தைகளில் கூறினால் முதலாளி - தொழிலாளி வர்க்கப் போராட்டங்களை அந்தந்த வர்க்கங்களுடைய நலன்களே / அடையாளங்களே நடத்துகின்றன.

நவீன அடையாளங்கள் பல்வேறு வடிவங்களில், அடுக்குகளில் துரிதமாக - தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கின்றன. நவீன தகவல் தொழில்நுட்ப அறிவியல் சாதனங்களால் வேகமாக உற்பத்தியாகின்றன. ஒன்று பலவாக, உள்முரண்களோடு கிளைத்துப்பரவு கின்றன. எ.கா. இந்தியன் - தமிழன் - மதத்தினன் - சாதியினன் - வர்க்கத்தினன் - பால் அடையாளத்தினன் - திராவிடன் - ஆரியன் - நடுத்தர வகுப்பினன் - பிற்பட்டவன் - தலித் - பெண்... ஆகிய அடை யாளங்கள் எல்லாம் ஒருவரிடமே சகவாழ்வு நடத்திக் கொண்டிருக்கின்றன. இவற்றில் இருமை எதிர் இணைகளாக ஆண் - பெண், இந்து - இஸ்லாம், திராவிடன் - ஆரியன், முதலாளி - தொழிலாளி, தலித் அல்லாத சாதிகள் - தலித் சாதிகள் என்பவை முரண் பட்ட அடையாளங்களாக முரண்பட்டவாறு உள்ளன. இவற்றை மேலும் விரித்துக்கொண்டே போகலாம்.

தமிழகத்தின் பழம்பெரும் அடையாளங்கள் நவீன காலக் கதைப்பிற்கு அவ்வப்போது பங்காற்றி வந்தாலும், அந்த அடையாளங்கள் இனிமேல் எதார்த்த வாழ்விற்கு உரிமையாகுமா அல்லது புனைவுகளாகப் போய் மறையுமா என்பதைக் காலம்தான் வரையறுக்கும். எனவே அடையாள அரசியலைத் தாண்டி, இன்றும் இனியும் வரலாறு எழுதலும் (Historiography), நவ வரலாறு (Neohistoricism), வம்சா வழித்தடவியல் (Genealogy) மட்டுமே சாத்தியமாகலாம்.

அடையாளங்களாக எவை தங்கள் தங்கள் சமூகங்களை அடையாளப்படுத்தினவோ அவற்றை அந்தக் குழுக்கள் தங்களுடைய ஆதிபத்தியத்தை முன் வைத்து, அவற்றின் பெயரால் போராடுகின்ற வழக்கம் மாந்த இனத்திற்குரியது மொழி (ஒலி), சைகை, சிலை (கல் முதலிய உலோகங்கள், கனிமங்கள்), சின்னம் (பூ, பொருள், இயற்கை), மதம் (புராதன மாந்திரீகம்) முதலான அடையாளங்கள் ஒரு காலக் குலக்குறிகளாக (totems) அல்லது விலக்குகளாக (taboos) தமிழில் சூர் அரமளிர் வதியும் பூ நீராடும் அருவி விரும்பும் மாங்கனி ஆகியன ஈராயிரம் ஆண்டுகளுக்கு வெகு முன்பு மானிடர்க்கு விலக்குகளாகத் தடைசெய்யப்பட்டு, அவை பின்னர் தெய்வீகத் தகுதி பெற்று, வழிபடு சக்தியாகின (வைதீகப் புராணங்களில் இவை ஏராளம்); அடையாளப்படுத்தப்பட்டு, பிற்காலங்களில், விக்கிரக வழிபாட்டு அடையாளங்களாகி வைதீக ஆதிக்கம் பரவிய காலங்களில் புனிதமான, வலிமை தருகிற சக்திகளாக, அடையாளங்களாக இயற்கையின் பிடியைக் கடந்து வராத ஓர் 'அறிவு வட்டத்தின்' ஆதிக்க அடையாளங்களாக வழிபடலாயின. வரலாற்றில் பெரும்பாலும் போட்டியாளர் குழுக்கள், பகைக் குழுக்கள், அவற்றை எதிர் கொள்ளுகிற - சிறுபான்மைக் குழுவின் அடையாளங்களைத் தீர்மானிக்கின்றன.

இவ்வாறு அடையாளங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கிற அடையாளங்கள் மாறி மாறி முன்னிறுத்தப் படுகிறபோது 'ஒப்பீட்டளவில் தொடர்ந்து தாமாகவே உற்பத்தியாகி (தொல் புராணகால அசுவமேதயாகம், நவீன ரத பவனியாக - உலாக்காட்சியாக உற்பத்தியாவது போல) எதிரான அடையாளங்களை உடைக்கின்ற உத்திகளை மேற்கொள்ளுகின்றன.

இது நவீன காலத்தில், பழைய - புராதன - தொல் குடிக்காலத் தொன்மங்கள் கலந்த அடையாளங்களாக மீட்டுருச் செய்யப்படுகின்றன. கல்வி அறிவும், வாழ்க் கைக்கு இன்றியமையாத தேவைகளும் பற்றாக்குறையாக உள்ள கலாச்சாரங்களில் காணப்படுகிற அடையாளங்கள் 'அறியாமை'யை மூலதனமாகக் கொண்டுள்ளன. வளர்ச்சி பெற்ற நாகரிகங்களில் இத்தகைய மௌபீகமான அடையாளங்களைவிட அறிவியல் அடையாளங்கள் மேல் நிலை பெற்றுள்ளன. நவீன குடியரசுக் கொண்டாட்டங் களில் அறிவியல் ஆயுதங்களின் ஊர்வலம் நவீன கால அடையாளமாக பவனிவருகின்றதைப் பார்க்கலாம். இதில் புராணிக அடையாளங்களும், அறிவியல் வல்லாண்

மையைப் பிரகடனப்படுத்தும் அடையாளங்கும் கைகோத்துக் கொள்ளுகின்றன.

மரபான அடையாளங்கள் நவீன அடையாளங் களுக்கு ஊட்டமாகச் செயல்பட்டுக்கொண்டிருக் கின்றன. இவ்விரண்டிற்கும் இடையே தொடர்ச்சியான ஊடுறவு இயங்கிக்கொண்டே இருக்கும்; இருக்கின்றன. 'அடையாளம்' என்பது, மாந்த இனத்தின் தன்னிலை உருவாக்கத்தோடு சம்பந்தப்பட்டது. வலுவான தன்னிலையின் அடையாளம், அந்தத் தன்னிலையின் சுயம் சார்ந்த, நிர்ணயம் செய்கிற ஆற்றலோடு உறவு கொண்டதாக உள்ளது. மானிட சாயத்தின் சுதந்திரமான இருத்தல் சார்ந்தது. இது சாத்தியமற்ற போது சிக்கல்கள் ஏற்படுகின்றன. இத்தகைய அடையாளங்கள், மனித சுயம் தன்னிலை என்ற உளவியல் நிலைபாடுகள் நிலைப்படுகிற போது தோன்றுகின்றன; இவை ஓரினம் - சமூகம் வாழ்வதற்கும் ஆள்வதற்குமான போராட்டங் களை நியாயப்படுத்துகின்றன. இந்தப் போராட்டத்தின் தொடக்கநிலையை மொத்த இயற்கையின் ஓர் அங்கமாக இருந்த 'மாந்த இனம் தனது வாழ்வியல் நிர்ப்பந்தத்தால், அதிலிருந்து பிரிந்து தானும், இயற் கையும் ஒன்றோடு ஒன்று உறவாடுகின்ற தனித்தனி எதார்த்தங்களாகிய போதே மாந்த இனத்தின் நாகரிகம் ஆரம்பமாகியது. இயற்கையின் மீது கொண்ட பௌதீகச் சார்பு நிலையிலிருந்து கடந்து, அதற்குக் காரணமாகப் பிறப்பால் இயற்கை சார்ந்து உருவாகியிருந்த பால், இனம், குழு, குருதி உறவு (சாதி) ஆகிய தளைகளைத் தாண்ட வேண்டிய கட்டாயம் இருந்தது. இதிலிருந்து விடுபட்டுப் புதிய கலாச்சார, நாகரிக அடையாளங்களை உருவாக்கிய 'வரலாறு' மாந்திரீகத் தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகிறது; மாந்திரீகம், சடங்கு, தொன்மம், கதைகள், நம்பிக்கைகள், புராணங்கள், உற்பத்தி முறைகள், கருவிகள், குடும்பம், மொழிக் குறியீடு... முதலானவற்றை உருவாக்கிப் புதிய அடையாளங்களைக் கட்டமைக்க வேண்டியதிருந்தது.

இயற்கையின் மாதிரிகையிலமைந்த ஆள்வோர் - ஆளப்படுவோர் என்ற ஏற்றத்தாழ்வான உறவு முறை இயற்கையானதாகக் கருதப்பட்டாலும், மாந்த இனத்தின் தனித்துவமான பரிணாமம் வளர்ச்சி இதனை மறுத்தது. பாதிக்கப்பட்டவர்களும் பாதித்தவர்களும் தங்களுடைய இனந்தெரியாத பொற்காலங்களைப் புனைந்து போராடினார்கள். அடையாளங்கள் பெருகின. இன்றைய ஆதிக்க அடையாளங்களை உறுதிப்படுத்தி நீட்டிக்கவோ, அல்லது இழந்துபோன ஆதிக்க (அல்லது சமத்துவ) நிலையை மீட்கவோ அல்லது பழைய கலாச்சாரப் புனைவுகளை அடையாளங்களாக இனம் கொண்டு புதிப்பித்து நவீனகாலத்தில் விடுதலைக்கு ஏற்ற ஆயுதங்களாக மாற்றவோ முனைகிறார்கள். இந்தியா போன்ற வேறுபாடுகள் மிகுந்த கலாச்சார - நாகரிக - இயற்கையமைப்பு - மக்கள் தொகைப்பெருக்கம் ஆகியவை கொண்ட நிலப்பரப்பில் வாழுகிற மக்கள் இனக்குழுக் கலாச்சாரத்தின் பகிர்ந்துண்ணும் பண்பு, வீரம் (மாந்திரீகம் - புனைவுகள்) பெண் வளம், மனித வளம், உடைமைக்காக இயற்கையை அழிக்காத உற்பத்தி முறை, ஆகியவற்றின் நியாயப்பாட்டை வலியுறுத்துகிறார்கள். இது இந்த புவிக்கோளை வளப் படுத்துகின்ற அரசியலாக உலக மாந்தர் அனைவரும் ஒப்புக்கொள்ளுகிற திட்டமாக இருக்கின்றது.

சுயம் சார்ந்த ஓர்மை கொண்ட தன்னிலை சாத்தியப் படாத காலகட்டங்கள் பழம்பெரும் இனக்குழுக் களுடைய காலகட்டங்களாகும். இயற்கையோடு கொண்டிருந்த பெரும் உயிரியல் பிணைப்பை 'மனித இனம்' உடைத்து சுயமாக இயங்கவில்லை. தனித்த இயற்கைக்கு இணையான ஓரினமாகத் திரளுவதற்கு சுயம் - தன்னிலை - ஆளுமை ஆகியவை உருவாக வேண்டும். இதனை ஈடுபடுவதற்கு மானிட இனங்கள் இயற்கையோடு இயற்கையாக உறவுகளைக்கொண் டிருந்த கட்டத்தைக் கடந்து மேற்செல்லுவதற்கு உடனடித் தேவை இருந்தது. இதற்கு மாற்று வழி வெளியே கிடைக்காத போது மனிதர் உள்ளே உருவாக வேண்டியதிருந்தது. இயற்கை வேறு, தான் - நான் - சுயம் - தன்னிலை இவற்றின் புதிய அடையாளங்கள் வேறு என்னும் ஓர்மைகள் ஓர்மை இன்மையிலிருந்து மேற்கிளம்பியாக வேண்டிய நிலை இருந்தது. அதாவது இயற்கையின் பிடியிலிருந்து விலகி விடுபட்டு, இயற்கையை மாந்தர்க்கு உரிய வாழ்வாதாரமாக மாற்றுவதற்கு மனித இனம் இதுவரை இல்லாத அளவிற்கு அதன் அகத்திலும், புறத்திலும் புதிதாக உளவியல் அறிவியல் உடலியல் மாற்றங்களை அடைய வேண்டியதிருந்தது. அவ்வேளையில், இந்தத் தேவை களுக்கு இயற்கையின் கட்டமைப்பு சாதகமாக இல்லாத போது அதனை மானிட வாழ்வியல் தேவைகளை நிறை வேற்றும் பொருட்டு உற்பத்தி - மறு உற்பத்தி செய்கிற ஆதாரமாக மாற்ற வேண்டியதிருந்தது. இதனால் தொடர்ந்து ஏற்பட்ட பல்வேறு பாதிப்புகளை அகற்ற இன்றுவரை மாந்த இனம் போராடிக் கொண்டு இருக் கின்றது. இந்த மாபெரும் இருத்தலியல் போராட்டத்தில் அங்கம் பெற்றவையே அடையாளங்கள்; அடையாளக் கோளாறுகள். இவற்றின் வழித்தடங்களைப் பற்றிய ஆய்வுகளில் ஒன்றுதான் அடையாளங்களின் தேடல். அடையாளங்களில் மாந்தரைப்போலவே சமத்துவம் இல்லை. இவை இயங்கியல் உறவில் பகை - நட்பு ஆகியவற்றிற்கிடையில் உறவாடிக்கொண்டிருக்கின்றன.

மனித இனம், இயற்கையின் பிரபஞ்ச அளாவிய பரிணாமத்தின் பலவீனமான இனம்; இப்படிப்பட்ட ஓரினம், தான், சுயம், தன்னிலை, ஆளுமை, ஆள்வினை ஆகிய பரிமாணங்களின் உருவாக்கத்தின் பலத்தில்,

தன்னுடைய மேலாதிக்கத்தை நாகரிக மேம்பாட்டை - அறிவு மனம், கருத்தியல், சிந்தனை, புத்திக்கூர்மை, ஆயுதம் ஆகிய 'கருவிகளால்' பெற்று வந்திருக்கின்றது!

வாழ்வதற்கும், கிடைத்தவற்றைக் கட்டி ஆள் வதற்கும் வேண்டி, நீண்ட நெடும் போராட்டங்களின் நியாயப்பாடுகளால் உருவான புத்தடையாளங்களோடு, புதிய படிமுறைச் சமூகங்களாக மாந்தர் உருமாறுவதற்கு முயற்சி செய்தனர். இயற்கையோடு பூண்டிருந்த பௌதீக சார்பு நிலைகளையும், அவற்றிற்குக் காரணமான பிறப்பின் காரணமாக இயற்கையோடு சார்ந்த பல்வேறு 'அடையாளங்களை'யும் (பால், இனம், இனக்குழு, கிளை, குருதி உறவு (சாதி) - அதாவது பூர்வீக அடையாளங் களைக் களைந்து வென்றெழுந்து, இவற்றை நீட்டித்திடச் சாதகமான சமூக ஒழுங்கை - அமைப்பை - நிறுவனத்தை - கலாச்சாரக் கட்டமைப்பை ஏற்படுத்தி நாகரிகத்தை உருவாக்கி வந்தார்கள். இவற்றை விளக்கினால் பெருகி விடும்.

கிடைக்கப் பெற்றுள்ள தொன்மை வாய்ந்த அகவல் அக/புறப் பாடல்களின் தொகுப்புக்களில் அடையாளங்கள் பதிவாகியுள்ளன. (எட்டுத்தொகை - 2372 பாடல்கள்; பத்துப்பாட்டு, முருகாற்றுப்படை நீங்கலாக - 3215 அடிகள்) இப்பாடல்கள் பொதுவாக நாடக மரபில் ஆண்பால், பெண்பால் பற்றிய அக, புறப் பாடல்களாகும். இவை தோன்றிய காலம் முந்தியது; கி.மு.200 முதல் கி.பி. 250 வரை என்பார்கள். தொகுக்கப் பட்ட காலம், நூலாக்க காலமாகும்; களப்பிரர், புதிய பாண்டியர் காலமாகும். (கி.பி. 250 முதல் கி.பி. 550-600 வரை ) இதில் பாண்டிய நாட்டின் மதுரை முக்கியப் பங்கு வகித்தது. இவற்றிற்குத் திணை - துறை இலக்கணம் எழுதுவதை நிறைவு செய்தவர் தொல்காப்பியர். இவருக்கு முன்பே இலக்கண ஆக்கங்கள் நடை பெற்றிருந்தன. மதுரையில் சமணமுனிவர்களுடைய தமிழ்ச்சங்கமாகிய 'திரமிளசங்கம்' இருந்தது; இதனை மாதிரியாகக் கொண்டு மதுரை வைதீக இலக்கண / உரையாசிரியர்கள், புலவர்கள் வைதீகச் சார்பில் சங்க இலக்கியப் பாடல்களை முன்னிறுத்தினார்கள். பத்துப் பாட்டில், திருமுருகாற்றுப்படை என்ற வைதீகமய மாக்கப்பட்ட முருகனைப்பற்றிய நெடும் புராண மயமான பாட்டை வைதீகப் புலமையாளர்கள். இதன் தொடர்ச்சியாகப் பிற்பட்ட பாண்டியர் காலத்தில் 'கந்தபுராணம்' உருவாக்கப்பட்டது; இது இராமாவதாரக் கதையை முன் மாதிரிகையாக வைத்து எழுதப்பட்டது; சேக்கிழாரின் 'பெரிய புராணம்' சமணர்களுடைய மஹாபுராணத்தை முன்மாதிரியாக வைத்துப் புனையப் பட்டது.

கி.மு. 200 முதற்கொண்டு பாணர் என்ற இசைக் குடியின் மூலம் வாய்வழி மரபாகவும், 'சான்றோர்' எனப் பட்ட புலவர்கள் வழியாக எழுத்து மரபாகவும் தொடர்ச்சி கண்ட பழைய அகவல் பாடல்களுக்கு கி.பி. 11-14 ஆம் நூற்றாண்டு வரை வைதீக, சமண உரையாசான்கள் தத்தம் சமயம் சார்ந்த உரைகளை எழுதினார்கள்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பின்னர் தொகுக்கப்பட்ட அகவல்பாடல்கள் (கலித்தொகை, பரிபாடல் என்ற இரண்டு தொப்புப் பாடல்களும் மதுரையில் கி.பி. 500-600 வாக்கில் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களால் கலி, பரி பாடல்கள் என்ற இசைப்பாடல்களாக இயற்றப்பட்ட மதுரைப்பாடல்கள். 'மதுராபுரிச்சங்கம் வைத்தும்' என்று மதுரைச் சங்கம் பற்றிச் சின்னமனூர் கல்வெட்டு பின்னாளில் இதை உறுதிப்படுத்துகின்றது. இங்கே பாடல்கள் இயற்றப் பட்டதோடு வைதீக நூல்கள் சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழியாக்கம் பெற்ற பணியும் நடந்தது).

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு அகவல் பாடல்கள் வழியாக அன்றைய தமிழகம் கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் கடல்களாலும், வடக்கிலும் மேற்கிலும் உயர்ந்த மலைகளாலும் சூழப்பட்டிருந்தது தெரிகிறது. இவ்வாறு எல்லைகளை வரையறுப்பதில் வைதீகத்தின் பிரபஞ்சவியல் இமயமலைத் தொடரிலிருந்து தொடங்கும்!

ஆண்கள் ஆள்வினையின் பொருட்டு (உடைமை சேகரிக்கும் வினையே ஆள்வினை) வடக்கு நோக்கி இயங்குகிறார்கள். அவர்களுடைய பெண்கள் வீடுகளில் உறைகிறார்கள். இயக்கமும் இயக்கமின்மையும் ஆண் பெண் 'அடையாளங்கள்'; பாலியல் அடியொற்றி இந்த 'அடையாளங்கள்' ஏற்பட்டன. தந்தை வழி ஆட்சிமுறையில் தமிழ்ச்சமூகம் இயங்கியது; ஆயினும் புராதனமான தமிழ் இனக்குழுக்கள் உடைமை நாகரிகத் திற்கு முந்தைய கலாச்சாரத்திலும் நாகரிகத்திலும் இயங்கின. இசைக்குடிகள், கலைக்குடிகள் என்ற வரையறைக்கு உட்பட்ட பாணன், பறையன், கடம்பன், துடியன் மற்றும் கூத்தர், பொருநர், கண்ணுளர், கோடியர், பெரும்பாணர், சிறுபாணர் முதலான குழுக்கள் கூட்டங்கூட்டமாகப் புதிய உடைமை யாளரான வேந்தர் முதலான புரவலர்களைத் தேடி 'பழு மரம் தேடும் பறவைகள்' போல இயங்கினார்கள். இடத்தையும் வெளியையும் விட்டு வடக்கிருந்து வந்தேறிய வைதீகம், வேறொரு பிரபஞ்சவியலை அடையாளப் படுத்தியது. 1. வடக்கே 'பனிபடு நெடுவரை' 2. தெற்கு 'உரு கெழு' குமரி 3. கிழக்கே கடல் 4. மேற்கே 'தொன்று முதிர் பௌவம்' (பெருங்கடல்) 5. கீழே மூன்றடுக்குகள் கொண்ட பாதாளம், 6. மேலே தேவர் உலகம் (மேல் - நிலம் - பாதாளம், என்ற மூவுலகம் ஒவ்வொன்றும் ஏழு பிரிவுகளைக் கொண்டதால் மூவேழ் உலகம்). தமிழகத்தை 'ஜம்புத்தீபம்' - நாவலந்தீவு என்றது. இது மூவேந்தரான சேர, சோழ, பாண்டியர்க்கு உரியது. சேரர் சேரமான் என்றழைக்கப்

பட்டனர், இப்பெயரை வடமொழியில் (பாலி / பிராகிருதம்) அசோகன் 'கேரளபுத்திரர்' (சேர - மான்; சேர கேரள மான் - மகன், புத்திரன்) என்றும் 'அதியமான்' வம்சத்தை 'சதியபுத்திரர்' என்றும் குறிப்பிட்டான்.) ஆக, இமய (பனி) மலையிலிருந்து, தேவர் (புத்தேள்) உலகம் வரை பரந்த 'பிரபஞ்சம்' வைதீக பிரபஞ்சவியலின் சொல்லாடலாகும்.

சிரமண மார்க்கங்களான சமணமும் பௌத்தமும் வட இமயப்பரப்பிலிருந்து தமிழகம், கருநாடகம், ஈழம், கடாரம், சாவகம், மணிபல்லவம்... முதலான தீப கற்பங்கள், தீவுகள் வரை பரவியிருந்தன. (இது கி.மு. 300 ஆம் ஆண்டு எதார்த்த நிலை) அப்போது தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சிகளுக்கு அருகிலேயே தொன்மையான பெருங் கற்படை நாகரிகமும், நெடுகல் - நடுகல் - பதுக்கை - தாழி முதலான ஈம வழக்கமும், சகவாழ்வு நடத்தின. இனக்குழுவாழ்க்கை முறையில் வாழ்ந் தார்கள். நீர்ப்பாசன வசதிகள் பெற்ற மருத நிலங்களில் நெல் சாகுபடியும், பிற பகுதிகளில் தினை, வரகு, எள், உளுந்து, விவசாய உற்பத்திகள் நடந்தன. தமிழகம் தாண்டிய பண்டப் பரிமாற்றங்களும், கடல் வழி வாணிபமும் நடைமுறையில் இருந்தன. அரிய மணிகள் பவளம், முத்து, பொன் முதலியவை சேகரிக்கப்பட்டுச் செம்மை செய்யப்பட்டு வித்துக்களாக விந்தியம், கடாரம், கங்கைச் சமவெளி வரை எடுத்துச் செல்லப் பட்டன. சமண பௌத்தக் குகைகளும், பள்ளி பாளிகளும் இயங்கின. வைதீக நெறி ஆள்வோர் வட்டத்தில் செல்வாக்கு பெறத் தொடங்கியது. வைதீகத்தில் துறவு வாழ்நாள் இறுதியில் ஏற்பது; சிரமணத்தில் எந்த வயதிலும் துறவும், புலன் சுக மறுப்பும் போற்றப்பட்டன. வைதீகம் தனது 'எழுதாக் கற்பு' எனப்படும் வேதங்கள், சூத்திரங்கள், புராணங்கள், இதிகாசத் தொகுப்புக்கள், சாஸ்திரங்கள், வேள்விச் சடங்குகள், படிநிலையான சமூக அடுக்குகள், சடங்குகள், பரிகாரச் சடங்குகள், வழிபடும் இடங்கள் வழியாக ஆள்வோர்க்கு இறையாண்மையை வழங்கி, பல்வேறு தானங்களைப் பெற்றன. பார்ப்பனச் சேரிகளின் தனி அடையாளங்கள் பேணப்பட்டன. வேந்தருடைய ஆட்சி இறையாண்மைக்கு அவர்களுடைய பௌராணிக வம்சாவழிக் கதைகளை இட்டுக்கட்டின. தீட்டுக்கள், பரிகாரங்கள், அக்கினி காரியங்கள், இறந்தோரை எரிப்பது, அரச உரிமை மகளிர் கைம்மை நோற்பது, உடன்கட்டை ஏறுவது... போன்ற விதேசிச் சடங்கு களை, வேந்தர், ஆட்சியாளர் வழியாக நடைமுறைப் படுத்தியது. தமிழ் வீர மரபுகளை வைதீகச் சடங்கு மயமாக்கியது. ஆட்சியாளர்களுடைய ஆசியுடன் வைதீகம் ஆதிக்க அடையாளங்களைப் பெறத் தொடங்கின. சமண - பௌத்தம் வீழ்த்தப்பட்ட கி.பி. 7, 8ஆம் நூற்றாண்டுகளிலிருந்து தமிழகம் சாதி போற்றும் பூமியாகியது! நிலங்களின் உற்பத்தி சாதி வரிசைப்படி பகிர்ந்து அபகரிக்கப்பட்டது. உழைப்பாளர் சாதிகள் ஒடுக்கப்பட்ட சாதிகளாக்கப்பட்டன. இதில் சமணரும் பௌத்தரும் சாதி இறக்கம் செய்யப்பட்டார்கள். வைதீக அடையாள, அரசியலில் வைதீகத்திற்கு எந்த இழப்பும் இல்லை! சூத்திர - திராவிடரே இழப்பிற்கு ஆளான தமிழர்கள்.

தமிழரின் நீண்ட வரலாற்றில் உற்பத்தியான அடையாளங்கள் வைதீக ஊடுருவலால் பாரதூரமான கெடுதிகள் மக்களுக்கு ஏற்பட்டன. பிளவுகளுக்குப் பிறப்பும், கடவுள்களும் காரணகர்த்தாக்களாகக் கூறப்பட்டார்கள். இந்த மாபெரும் மோசடியைத் தமிழ்ச் சாதி இன்னும் நியாயம் என்று நம்புவதற்கு ஒரே காரணம் பாரதியார் கூறிய மிடிமை / மடமை / அறியாமை / உழைக்காமல் உடைமை சேர்க்கும் கயமை! இக்கட்டுரையின் நோக்கம் இதைப் பற்றியதன்று; சங்க இலக்கியம் என்று கூறப்படுகிற அகவல் (கலி /பரி) பாடல்களில் மேல்நிலைக்கு வந்த அடையாளங்களைப் பற்றிய ஒரு தொடக்கத்தை எடுத்துக் காட்டுவதுதான் இதன் நோக்கம்.

அப்பாடல்களில் தனிமனித அடையாளங்கள் கூறப்பட்டாலும் குழு சார்ந்த அடையாளங்களே பெரிதும் கவனம் பெற்றன. ஒரு சில எடுத்துக் காட்டுக் களைக் காணலாம். அன்று பெண்களை 'மனையுறை மகளிர்' என்று புலவர் மரபு கூறியது. அவள் மனைக்கு (குடி, வீடு, உறவு) விளக்குப் போன்றவள்; அவள் உலகம் வீடு; அவள் கணவனுக்கு உலகம் போர்க்களம்; வீரயுகத்தில் (வேந்தர், மன்னர் உருவான காலத்தில்) மொத்த சமுதாயத்தின் ஆண், பெண்களுடைய சமூக அடையாளங்கள் இவை. இதற்கு ஏற்றவாறு 'தனிமனித' அறங்கள் மதிப்பீடுகள் அந்த அடையாளங்களில் செறிக்கப்பட்டவை. இருப்பினும், இந்த அடிப்படை யான அமைப்பிற்குள் தொன்று தொட்டு இனக்குழு மரபினர் (இலக்கணத்தில் இவர்களைப் புலவர்கள் கருப் பொருளில் அடக்கினார்கள்) - அன்று பெரிதும் தமிழர்கள் - அவர்கள் காலமுறைப்படி குடி, குல அடையாளங்களால் இயங்கினார்கள்; எவற்றை விட்டு விட வேண்டும் என்று ஆரம்பித்தார்களோ அவற்றுக்குள் பிறப்பு, பால் அடிப் படையில் இயங்கினார்கள். ஆதாரமான தமிழ்ப்பரப்பின் உற்பத்தி சக்திகளாலும் உற்பத்தி உறவுகளாலும் இந்த இனக்குழு மரபினருடைய குழு அடையாளங்கள் தொடர்ந்து வந்தன. இவர்களுடைய, தமிழ்ச் சமூகத்தினுடைய அடை யாளங்கள் குலக்குறியைச் சார்ந்து விலங்கு அல்லது தாவரப் பொருட்களை இயற்கை உயிரினங்களைச் சார்ந்து அமைந்தன. இந்தக் குறிப்பிட்ட விலங்கு அல்லது தாவரத்தின் பூக்களோடு குடும்பக் கொடிவழி உறவு கொண்டவர்களாகத் தொன்மத்தைக்கொண்டு தமிழர்கள் தங்களை அடையாளப்படுத்தினார்கள் (குறவர் - மலைவாழ் குறிஞ்சிப்பூ; ஆயர் - மேய்ச்சல் நில

முல்லைப்பூ; பரதவர் கடற்கரையில் பூத்த நெய்தல் பூ; உழவர் - வயல் பரப்பில் வளர்ந்த மருதப் பூ; வீரமறவர் / வேடர் - பாலைமரப்பூ). இந்த ஐந்து இயற்கைப் பூக்களும் ஐவகை புவிப்பரப்புகளை அடையாளப் படுத்தின. இப்படியொரு கலாச்சார ஊறுவினையை நவீன மனிதரால் கற்பனை செய்ய முடியுமோ தெரிய வில்லை; ஆனால் கவிஞர்களால் இயலும். இதன் அடுத்த கட்டம், இந்தவித இனக்குழு மனோபாவம் கலையாத மக்களைத் தங்கள் 'குடிகளாக' ஆக்கிய குழுத்தலைவர்கள், நெடுந்தகைகள், வள்ளல்கள், தங்கள் மரபுகளைப் பூக்களோடு அடையாளப்படுத்தியதாகும். சேரர்குடிக்கு வஞ்சிப்பூ, சோழர் குடிக்கு ஆத்திப்பூ (ஆர்) பாண்டியர் குடிக்குப் பனம்பூ. இவர்கள் மேற்கொண்ட போர்களைக் குறிக்கவும் பூக்கள் அடையாளக் குறியீடுகளாக நிலைபெற்றன. ஆநிரைகளுக்காக நடந்த தாக்குதல் போருக்கு வெட்சிப்பூவும், தற்காத்து மீட்கும் போருக்குக் கரந்தைப்பூவும், மாற்றான் மண்ணை வெல்லும் தாக்குதல் போருக்கு வஞ்சிப்பூவும், தற்காப்புப் போருக்குக் காஞ்சிப் பூவும் (இது நிலை யாமையைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது), கோட்டையை வளைத்து முற்றுகையிட்டுப் புரியும் போருக்கு உழிஞைப்பூவும், அரணைக் காத்து நிற்கும் போருக்கு நொச்சிப்பூவும், இருபடைகளும் புரியும் இறுதிப்போருக்குத் தும்பைப்பூவும், வெற்றிக்கு வாகைப் பூவும் அடையாளங்களாகப் பாவிக்கப்பட்டன. தமிழர் கலாச்சாரத்தில் பூக்கள் முக்கிய இடம் பெற்றிருப்பதற்கு இன்றைய அபிமானிகள் பலரும் பல விளக்கங்களையும் புகழுரைகளையும் வழங்கினாலும், இதற்கு ஆயிரக் கணக்கான நூற்றாண்டு வரலாறு உண்டு; இதற்கான காரணங்களும் வேறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அன்றைய ஐவகை இனக்குழுக்கள் அவை தங்கி வாழ்ந்த நிலப்பரப்பின் அடிப்படையில், இயற்கைப் பூக்களின் பெயர்களால் அடையாளப்படுத்தப்பட்டன; அவற்றால் அந்த நிலப்பரப்புக்களும் அடையாளம் காணப்பட்டன.

இது பண்பாடுகள் தோறும் காணத்தக்க எதார்த்த நிலையாகும். இது உணவு சேகரிப்பு வாழ்நிலையி லிருந்த இனக்குழுக்கள், உணவு உற்பத்திக்கு மாறிய அடிப்படையான மாற்றத்திற்கு ஆதாரமாக விளங்கியது! இயற்கையிலிருந்து மனித இனம் தனி அடையாளங் களைப் பெற்று தனி இனமாக மாறிய அந்தக் கால கட்டம் நெடியது; எதார்த்தங்களும் கற்பனைகளும், மாந்திரீகமும் தொன்மக் கதைகளும், உலகெங்கிலுமுள்ள ஆதி மனித இனங்களின் ஞாபகங்களிலிருந்து வெவ்வேறு விதங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றை இன்றைய அறிவியல் சூத்திரங்களால் நேரடிப் பொருள் கொள்ள இயலாது.

இந்த அடையாளங்கள் நவீனமாந்தர்க்குச் சிக்கலாகத் தோற்றம் தருகின்றன. இவர்களுடைய தருக்கம் நேர்கோட்டுத் தன்மையில் நீளுகிறது; ஆனால் ஆதிமந்தா குழுக்களின் தருக்கம் சூழல் வட்டத் தன்மையில், நீர்ச்சுழி போல இயங்கியது. அன்று அடை யாளங்களால் இயங்கினார்கள்; இன்று அடையாளங் களால் அழிக்கிறார்கள்; அழிகிறார்கள். அன்றைய ஆழ் மனக் குழு உணர்வும், ஊட்டமும், கொண்டாட்டமும் இயற்கையிலிருந்து பிரிவுற்ற நிலைக்கு ஈடுகொடுத்தன. ஆனால் இயற்கையை அழிக்கவில்லை; இயற்கை அவர்களுக்கு மற்றொரு இனக்குழு மாதிரிதான். இயற்கையைத் தங்கள் மயமாக்கியதன் மூலமாகத் தாங்களும் இயற்கை மயமானார்கள்!

வளமான அடையாளங்கள், தனி உடைமை நாகரிக மயமாக்கத்தாலும், குழு வாழ்க்கைச் சிதைப்பினாலும், குரூரமான வைதீகக் கபடத்தாலும் வருண போதை யாலும் - வன்மத்தாலும் அழிக்கப்பட்டு வந்தன. குழு வாழ்க்கையில் சொத்துடைமை இல்லை, இயற்கை யோடு ஆரோக்கியமான உறவு இருந்தது. அன்றைய குழு அடையாளங்களில் மானிடமும் இயற்கையும், சடங்கு ரீதியாக, மாந்திரீக அரவணைப்பில் கலந்து முயங்கின; களிப்புற்றன. ஆனால் இயற்கையை, உடைமையை மரணத்தை வெல்ல வேண்டும் என்று நகர்ந்த போது, நகர்வதற்குத் தள்ளப்பட்டபோது, வளமான அடையாளங்கள் சிதைந்தன; எல்லாம் ஆரோக்கியத்தை இழந்தன; மனிதன் தன் சக உதிரத்தைச் சிந்த வைத்தன, இயற்கையைக் கொலை செய்தான் என்பதுதான் அதன் தாத்பரியம்.


இயற்கையோடு இயற்கையாக இருந்த போது இருந்த மனித இனம் வேறு; இயற்கையை விட்டுக் கடந்து மேல்நிலை பெற முயன்ற மனிதனுடைய முயற்சி அற்புதமானதாக இருந்தது. சர்வவல்லமை பெற்றவனாக, பெற்ற குழுக்களாக அவன் தன்னை அடையாளப்படுத்த முனைந்த போது தன்னையும், இந்த இயற்கையையும் இந்தப் புவியையும் அழிக்கத் தலைப்பட்டு விட்டான். தான் பொறுப்புள்ள ஒரு மனிதன் என்பதை மறந்து பல நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. எல்லாவற்றையும் ஆதிக்கம் செய்யும் நோயில் பீடிக்கப்படுவதற்குத்தான் அவன் இயற்கையின் பிடிப்பிலிருந்து வெளியேறினான் என்பது இன்று புரிந்து விட்டது. ஆனாலும், இதனை மாற்றத்தான் வேண்டும், காலம் கடந்துவிடவில்லை; காலம் கனியும் காலம்; மனிதர்கள் அதற்குத் தேவை இல்லை; மனித இனம் தூசியாகிப் போனபிறகும் காலத்திற்குக் கவலை இல்லை. வெளி இன்றிக் காலம் ஒரு சூனியம்; காலமின்றி வெளி வெறும் பாழ். ●

# உலகப் புகழ்பெற்ற வரலாற்று நாவல்

## சக்கரவர்த்தி பீட்டர்

அலெக்ஸி டால்ஸ்டாய்

தமிழில்: எஸ்.இராமகிருஷ்ணன்




**₹ ~~800/-~~**

சலுகை விலையில்

**₹ 600/-**

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைக்குள் முதலாளித்துவக் கூறுகள் தோன்றுவதையும் வளர்ச்சியடைவதையும், அதனால் ஆளும் வர்க்கமான நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கு உள்ளும் புறமும் நெருக்கடி உண்டாவதையும் காட்சி ரூபமாக வரைந்து காட்டும் நாவல் இது.

பீட்டர் தன்னுடைய காலத்தின் சூழ்நிலையை உணர்ந்து வரலாற்றின் இயக்கத்திற்குத் தடையாக நிற்காமல் அதன் வளர்ச்சிப் போக்கிற்கு இசைந்து போனதைப் போலவே, நம்மையும் போகச் செய்கின்ற அனுபவம். பீட்டரோடும் நூற்றுக்கணக்கான கதாபாத்திரங்களோடும் வாசகர்களையும் பயணம் செய்யத் தூண்டுகிறது இந்நாவல்.

# நியூ செஞ்சுரியின் மார்க்சிய நூல்கள்




## அரசும் புரட்சியும்

அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்


**வி.இ. லெனின்**


அரசும் புரட்சியும் என்னும் இந்நூல் சோவியத் புரட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில் வெளிவந்தது. ஒரு நூற்றாண்டு கடந்தும் திரும்பத் திரும்ப வாசிக்கப்படுகின்ற சகாப்தம் படைத்த நூல்களில் இதுவும் ஒன்று.

## கூலி விலை லாபம்

**கார்ல் மார்க்ஸ்**

மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் அடித்தளங்களில் ஒன்றான உபரி மதிப்பு கோட்பாட்டை மார்க்ஸ் முதன்முதலாக கூலி விலை லாபம் என்ற இந்நூலில் எடுத்துக் கூறினார்.




## கூலியுழைப்பும் மூலதனமும்


**கார்ல் மார்க்ஸ், தமிழில்: ரா.கிருஷ்ணையா**

இந்த நூலில், மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள் தெரியாதவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம், கூலியுழைப்பிற்கும் மூலதனத்திற்கும், தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான உறவை அடிப்படையாகக் கொண்ட இச்சமூகத்தைத் திறந்து காட்டுகிறார்.

## மார்க்ஸிய அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்

**எல்.லியான்டியாவ்,** தமிழில் **தா.பாண்டியன்**

மார்க்ஸிய அரசியல் பொருளாதார இயல். இந்த அறிவு இயலின் அடிப்படைகளை ஆழமாகவும் எளிமையாகவும் எடுத்துக் கூறுகின்றது இந்த நூல்.







## கம்யூனிஸ்டு அகிலம்

வரலாற்று சுருக்கம்

அ. சோபலெவ், கி. ஷிரினியா, ஃபி. ஃபீர்சவ், **தமிழில் ரா. கிருஷ்ணையா**

கம்யூனிஸ்டு அகிலம் 1919 முதல் 1943 வரை செயல்பட்டது. இந்தக் காலத்தில் உலகப் புரட்சி இயக்கங்கள் முகம் கொடுத்த சிக்கல்கள், அவை குறித்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய ஆழமான சித்திரத்தை இந்நூல் வழங்குகின்றது.

*தமிழ் இலக்கியப் பரப்பில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட மக்களின் வாழ்க்கையையோ, அடிப்படை ஆதாரத் தொழிலான வேளாண்மையையோ எழுதிய எழுத்தாளர்கள் மிகமிகக்குறைவு. அக்குறையைக் களையும் முகமாக வண்டல்நிலம் சார்ந்த, அம்மக்கள் வாழ்வு சார்ந்த அரிய நடையிலான எழுத்து கைவரப் பெற்ற எழுத்தாளர் சி.எம்.முத்து. தஞ்சை மாவட்ட வேளாண்மக்களின் அச்சு அசலான வாழ்க்கையை மையமாக வைத்து 'கறிச்சோறு', 'பொறுப்பு', 'வேரடி மண்' ஆகிய நாவல்களுடன், 300க்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். அவரின் 'மிராசு' நாவல் சமீபத்தில் வெளிவந்து பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது.*

*தஞ்சை பாபநாசத்திலிருந்து சாலியமங்கலம் செல்லும் சாலையில் திருக்கருக்காவூருக்குப் பக்கத்தில் இடையிருப்பு என்ற கிராமத்தைச் சேர்ந்த அவரை 'உங்கள் நூலகம்' இதழுக்காக அவரது வீட்டில் சந்தித் தோம். வெற்றிலை பாக்கு மணக்கும் சிவந்த உதட்டோடு உற்சாகம் பொங்க வரவேற்று விசாலமாகப் பேசினார். இந்திய விவசாயியின் எளிமையான தோற்றத்திலிருந்த அவர் விவசாயியாகவும் எழுத்தாளனாகவும் ஒருசேரக் களத்திலிருந்து வெள்ளந்தியாக இலக்கியம், விவசாயம் குறித்துப் பேசியவை உங்கள் பார்வைக்கு...*

*நேர்காணல்: ஜி.சரவணன்*



# எழுத்துல ஜீவன கொண்டுட்டு வந்துருக்கன்...

## சி.எம்.முத்து

**வணக்கம். 'கறிச்சோறு' நாவல் மூலமாக தமிழ் இலக்கிய உலகில் பெருஞ்சலனத்தை ஏற்படுத்திய நீங்கள் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து எழுதி வந்திருந்தாலும் சமீபத்தில் வெளிவந்திருக்கும் 'மிராசு' நாவல் பலராலும் பாராட்டவும் விவாதிக்கவுமாக தமிழிலக்கியத்தில் கவனிக்கத்தக்க மறுபிரவேசம் ஆகியிருக்கிறீர்கள். இதனை எப்படி உணர்கிறீர்கள்?**

*நான் எதிர்பார்த்ததைவிட நாவலுக்கு அதிகமான வரவேற்பு இருக்கு. தெனக்கிம் யாராவது ஒருத்தர் போன்ல பேசுறாங்க. ரிட்டயர்ட் ஜட்ஜ் ஒருத்தர் புத்தகத்த படிச்சிட்டு ரொம்ப நேரம் பேசுனாரு. நேர்ல வந்து பாக்கறதாவும் சொன்னாரு. சில எடத்துல விமர்சனக்கூட்டம் நடத்தறதாவும் சொல்லிருக்காங்க.*

**ஆரம்பத்தில் மிகவும் விரிவாக சொல்லப்பட்டு வருகிற கதையில் பாதிக்கு மேல் சடசடவென்று தாவித்தாவிப் போய் டக்கென்று நாவல் முடிந்துவிடுவதுபோலத் தெரிகிறதே...**

*நீங்க சொல்றது சரிதான். அத இன்னுங் கொஞ்சம் விரிவா கொண்டு போயிருக்கணும். ஆழமா எடுத்துட்டு போயிருக்கணும்னுதான் எனக்கும் ஆச. ஆனா நாவல் வாசிப்புங்கறது இவ்வளவு பக்கம் படிப்பாங்களாங்குற ஒரு கேள்வியும் எனக்குள்ள வந்ததுனால அத நான் கொறச்சிகிட்டு அந்த நாவல முடிக்கிற ஒரு சூழ்நிலை வந்துடுச்சி. இல்லன்னா இன்னொரு எரநூறு பக்கத்துக்கு அது போயிருக்கும். அப்டிப் போயிருந்தா இன்னமும் ஆழமா இருந்துருக்கும். அதுல மாற்றமே கெடையாது. அப்டிதான் கொண்டு போவணுமின்னு நெனச்சேன். இப்பவும் ஒண்ணும் இல்ல, அந்த விரிவான பகுதிய இன்னொரு நாவல்ல நான் சொல்லிடுவேன். ஏன்னா மனசுக்குள்ள இருக்குற அந்த விஷயங்கள் என்ன தொந்தரவு படுத்திகிட்டே இருக்கறத நான் நிச்சயமா இன்னொரு நாவல்ல சொல்லிடுவேன். ஏன்னா முழுமையா இருக்கும்போதுதான் அது நிறைவா இருக்கும் அப்டிங்கறது என்னுடைய மேன்மையான கருத்து. அத வந்து நான் சொல்லியே ஆகணும். எனக்குப் பிறகு உள்ள சந்ததிகள் அவர்களுக்குப் பிறக்க உள்ள பிள்ளைகள் அதை பூர்வாங்கமா அனுபவிக்கணும். அந்தத் தொந்தரவுகள் என்ன அப்படிங்கறத அவங்க புரிஞ்சிக்கணும். புரிஞ்சி கிட்டு தண்ணிய எவ்வளவு சேமிக்கமுடியும் அப்டிங்கற தெல்லாம் கருத்துல வச்சிகிட்டுதான் எழுதிருக்கேன். இனிமே நீரை சேமிச்சிதான் நாம வாழமுடியும் அப்படிங்கற ஒரு நெலமைக்கு வந்துட்டம். நீரை சேமிக்காம எதையுமே பண்ணமுடியாது. ஏன்னா இருக்குற நீர் கொஞ்சம்தான். அதக்கொண்டுதான் நாம எல்லாருமே வாழ்ந்தாகணும்.*

**தண்ணீர் என்று நீங்கள் சொன்னதால் கேட்கிறேன். அடிப்படையில் விவசாயியான நீங்கள் காவிரி உள்ளிட்ட நீராதாரப் பிரச்சினை பற்றிக் கூறுங்களேன்...**

*அதாவது நடுவர் மன்ற தீர்ப்பு வந்தும் தண்ணிக்காக விவசாயிங்க போராடுனாங்க. இப்ப மேலாண்மை வாரியம் அமைக்கணும்னு சொல்றாங்க. இந்தக் கூக் குரல்லாம் அந்த நீர இங்கக் கொண்டு வந்துருமாங்கிற கேள்வி ஒண்ணு இருக்கு. மேலாண்மை வாரியம் அமைக்கிறதோ நடுவர்மன்றத் தீர்ப்போ இதுனாலல்லாம் எதுவும் செய்யமுடியாதுன்னுதான் சொல்றன். ஏன்னா நீர வச்சி அரசியல் செய்யிற காலமா போச்சி. அதனால ஆட்சி செய்றவங்களுக்கு மனசு இருக்கணும். அந்த மனசு இருந்தாதான் மக்கள காப்பாத்தமுடியும். தமிழ்நாட்டு ஜனங்க அப்டிங்கறத வுட்டுருங்க. நீர்ங்கறது உலகத்துக்கே பொதுவானது அப்டிங்கறத நான் சொல்றன். அது ஒருத்தருக்கும் உரிமை இல்லாதது. ஆனா உரிமை உடையது. அதனால தாய்மனசோட அவங்க நமக்குத் தண்ணி தந்தாதான் உண்டு, இல்லன்னா எதுவும் பயன் கிடையாது. எல்லா ஜீவராசிகளும் நீர் இல்லாம ஒண்ணும் பண்ணமுடியாது; தாவரங்கள்லேருந்து நீரைக்கொண்டுதான் ஜனிக்க முடியும். நீர் இல்லன்னா ஒண்ணுமேயில்ல. இதுல அரசியல் பண்றதுக்கோ வியாபாரம் பண்றதுக்கோ அனுமதிக்கக்கூடாது. இந்தப் போராட்டமெல்லாம் விழலுக்கு இறைச்ச நீர்தான். இதத்தாண்டி அரசியல் காரர்கள் தாய்மனம்கொண்டு உலகத்தமிழர்களை யெல்லாம் ஒன்றிணைக்கும்போதுதான் அது நடக்கும்.*

**சரி. ஒரு அப்பட்டமான விவசாய வாழ்க்கையை உங்கள் அனுபவத்திலிருந்து நாவலாக எழுதியிருக்கிறீர்கள். அப்படி எழுதுவதற்கு உதவியாக இருந்த முன்னோடி இலக்கியங்கள் என்று எதையாவது சொல்லமுடியுமா?**

*எதுவும் இல்லை, இலக்கியங்கள்லாம் நான் படிச்சதே கிடையாது. எந்த இலக்கியத்தையும் நான் ஆழ்ந்து படிச்சதே கிடையாது. படிச்சாலும் எனக்குப் புரியப்போறது இல்ல. ஏன்னா கல்வி பலம் என்கிட்ட அதிகமா கிடையாது. அப்படிங்கறது மிகப்பெரிய காரணம். கல்வி பலம் இருந்தா அத நான் சுவைத்திருக்க முடியும். அது மூலமா நெறய விஷயங்கள தெரிஞ் சிருக்க முடியும். அந்த சக்தி என்கிட்ட கிடையாது. என்னுடைய குறைந்த படிப்பை வச்சிகிட்டுதான் என்னுள்ளேருந்து வர்ற அந்த விஷயங்களை, எனக்குத் தெரிந்த விஷயங்களை நான் சொல்றேன், அவ்வளவு தான். அந்தக் கால இலக்கியங்களைக் குறைச்சே மதிப்பிட முடியாது. அது மிகப்பெரிய தாக்கத்தைத் தமிழ்ல கொண்டுவந்துருக்கு. அது எனக்குப் போதாமை அப்டின்னு வரும்போது அத நான் பொருட்படுத்தறது இல்ல; பொருட்படுத்தவும் தெரியாது. அந்தச் சூழல்தான்*

எனக்கு வாய்த்தது. என்னுடைய அனுமானத்திலேர்ந்து இப்படிப் போனா நல்லாருக்கும், இப்படிப் போனா நல்லாருக்காது அப்புடிங்கறத மட்டும்தான் நான் வச்சிகிட்டு எழுதறேன்.

**சரி, உங்கள் எழுத்தின் வேர் என்று எதனைக் கருது கிறீர்கள்?**

அருமையான கேள்வி. அருமையான கேள்வி. என்னுடைய வேர்தான் என்னுடைய எழுத்தின் பலம். என்கிட்டயிருந்துதான் எல்லாம் வருது. பிறர்ட்டேருந்து அது வரல. பிறர்ட்டேருந்து அத நான் எடுக்கல. என் மூலமாகவே அது கிடைக்குது. சுயம்பான கலைஞன் மாதிரி என்கிட்டருந்துதான் அது வருது. நான் பார்த்த அனுபவங்கள், என்னுடைய கேள்வி ஞானத்தில் வந்த விஷயங்கள். பெரியவர்கள் சொன்ன எல்லாத்தையும் நான் உள்வாங்கிக்கறேன். அந்த மாதிரி சில விஷயங்கள் எனக்கு ஆச்சரியப்படத்தக்க விதமால்லாம் கிடைச் சிருக்கு. அது எல்லாம்தான் என்னுடைய நாவல்.

**நீங்கள் எழுதும்போது என்ன வரையறை வைத்துக் கொண்டு எழுதுகிறீர்கள்?**


நான் எனக்கு தெரிஞ்ச ஜனங்களோட வாழ்க் கையத் தான் எழுதுறன். உண்மையத் தவுத்து உயர்வான இலக்கியம் எதுவுமில்ல என்பது என்னோட கோட்பாடு. அதனால எனக்குத் தெரிஞ்ச மக்கள் நான் பொழங்கி கிட்டு இருக்குற அந்த விஷயங்களத்தான் நான் எழுத முடியும். வெறும் கற்பனையா ஒண்ண இட்டுக்கட்டி எழுதுறது அவ்வளவு ஆழமா இருக்காதுன்னு நினைக் கிறேன். இப்படித்தான் என்னுடைய எழுத்த முடிவு செஞ்சுக்கிறேன்.

**முப்பது வருடத்துக்கு மேல் தொடர்ந்து எழுதிக்கொண்டு வருகிறீர்கள். உங்களைத் தமிழ்இலக்கிய உலகம் போதுமான அளவு கண்டுகொள்ளவில்லை என்று நினைத்ததுண்டா?**

என்னக் கண்டுக்காதது பத்தி நான் கவலப்பட்டதே கிடையாது. இதுநாள் வரைக்கும் என் பெயரைச் சொல்லலியே அப்படின்னு நான் கவலப்பட்டதே கிடையாது. யாரும் என் பெயரைச் சொல்லணும்ங்கற அக்கறையும் எனக்கு இல்ல. என்னுடைய பெயரை உச்சரிப்பவர்கள் உச்சரிப்பார்கள் அப்டிங்குற ஒரு நம்பிக்கை இருந்தது. இந்த மிராசுவுடைய ஒரு பக்கத்தை எல்லாரும் சொல்லிட்டாங்க. அதாவது மிராசு என்றால் சாணிப்பால் அடி, சவுக்கடி இப்படிப்பட்ட ஒரு பிம்பத்த நம்பள்ட்ட தோற்றுவிச்சிருக்காங்க. அது உண்மையுங்கூட, அத நாம மறுக்கமுடியாது. அப்படித் தான் நடந்தது. ஆனால் நவீனகாலம் என்று வரும்போது அந்த பிம்பங்கள் உடைக்கப்பட்டன. 'மிராசு'வில் கம்யூனிஸ்டுகள் செவப்புக் கொடி பிடிச்சிகிட்டு 'உழுதவனுக்கே நெலத்த சொந்தமாக்கு', 'கூலி உயர்வு கொடு'ன்னு கேட்டு ஊர்வலம் வர்றாங்க. அதுக்கு முன்னாடி அந்த 'மிராசு'ல வர்ற காளிங்கராயரு தன்னுடைய இனத்துக்காரனையே உட்காரவச்சிப் பேசாம நின்னமேனிக்கே பேசிட்டு அனுப்பி வச்சிடுறாரு. ஆனா கம்யூனிஸ்ட் கட்சி வந்ததுக்குப் பின்னதான் அவரு தன்னுடைய நிலைமையை மாத்திக் கிறார். ஓகோ உலகம் இப்படில்லாம் போயிட்டிருக்கு, நம்மளயும் நாம மாத்திக்கணும், மனிதாபிமானத்தோட வாழணும்னு அவர் ஒரு நிலைக்கி வந்த பிற்பாடுதான் 'இவ்வளவு பெரிய பெஞ்சு கிடக்குல்ல, உக்காருங்க, காப்பி சாப்பிடுங்க' என்று எல்லாரையும் அரவணைக் கிறார். இந்த வரலாற்று மாற்றத்தைத்தான் நான் என் நாவல்ல சொல்லிருக்கேன்.

**நீங்கள் 'கள்ளர்' என்ற ஒரு சமூகத்தைப் பற்றி மட்டுமே தூக்கிப் பிடித்து எழுதுவதாக எழும்பும் குற்றச்சாட்டுகள் குறித்து என்ன சொல்கிறீர்கள்?**

நீங்க சொல்றமாறி இருக்கலாம், நான் இன்ன சாதிதான் ஒசத்தின்னு எங்கயும் எழுதியிருக்கனா, இல்லியே, எனக்குத் தெரிஞ்ச மக்கள அவங்க வாழ்க்கைய உண்மையா எழுதியிருக்கேன். சாதிப் பெருமைன்னு நான் எழுதல, இந்த சாதியில இருக்கிற சடங்குகளை, கலாச்சாரத்தை, பண்பாட்டை, திருவிழாக் களை எழுதியிருக்கிற மாதிரி இங்கருக்குற வன்மத்தை, மூர்க்கத்தை, துரோகத்தை, வப்பாட்டி வச்சிக்கறத, சாராயம் குடிச்சி வம்பளிஞ்சி போறதன்னு எல்லா பிரச்சினைகளையும்தான் எழுதிருக்கேன். இந்த சமூகத்துக்கான நாட்டார் தெய்வங்களப் பத்தியும் எழுதிருக்கேன்.



**முழுமையாக யதார்த்த இலக்கியத்தையே எழுதிவரும் உங்கள் பார்வையில் சிறந்த படைப்பாளிகளாக அன்றும் இன்றும் நீங்கள் கருதுபவர்களைப் பற்றி சொல்ல முடியுமா?**

சா.கந்தசாமி ஒரு இலக்கிய மேதை. அவரோட சாயாவனம் மிகப்பெரிய இடத்துக்கு அவர கொண்டு போச்சி. உண்மையை மட்டும்தான் எழுதணும்னு நெனச்சி அவர் எழுதுனாரு. ந.முத்துசாமி நல்லா எழுதுனாரு, அப்புறம் இசை, நாடகம்னு கலைகளுக்குப் போயிட்டாரு. கரிச்சான்குஞ்சு, கு.ப.ரா., எம்.வி.வி, தி.ஜானகிராமனல்லாம் ரசனை எழுத்துன்னு சொல்லலாம். எனக்கு எழுத்த சொல்லிக்கொடுத்த ஆசானா தஞ்சை பிரகாஷ் இருந்தாலும் சிறுகதைங்குற இடத்த அவர் கண்டுபுடிக்க முப்பது வருசம் ஆச்சி.

ஒரு சிறுகதையின் லட்சணம் என்னன்னா 'ஷணத்தில் தோன்றி ஷணத்துக்கு முன்னும் பின்னுமாய் உள்ள இடைப்பட்ட காலத்திலேயே ஒரு சிறுகதை முடிந்துவிடவேண்டும். அப்படி முடியாத ஒரு கதை சிறுகதையே அல்ல.' இப்ப நிறைய பேரு பம்மாத்தா எழுதிகிட்டு வர்றாங்க. ஆனா யார்மாதிரியும் நான் எழுதுறதுல்ல, எனக்குத் தெரிஞ்ச உண்மையைத்தான் எழுதறேன். என் எழுத்துங்கறது ஒரு தனிப்பட்ட வகை. என் ஜனங்களுக்கு ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கு நானறிஞ்ச வாழ்க்கையை சொல்லவேண்டிய தேவை இருக்குறதால நான் எழுதுறேன். எனக்கு முன்னயும் பின்னயும் யாரயும் நான் கருதல.

புதுத் தலைமுறையில சு.தமிழ்ச்செல்வி அவங்க நாவல்ல நாத்தாங்கால்ல நாத்து பறிச்சி வயல்ல நடுறதுக்கு முன்னாடி 'நாத்து மாலை' விடுறதப்பத்தி அற்புதமா எழுதிருக்காங்க. ஒரு உரையாடல் எப்டியிருக்கணும்ங்கறத ரொம்ப அனுமானிச்சி அவங்க எழுதியிருக்கிறத நான் ரொம்ப சிலாகிச்சிப் படிச்ச ஆளு. நான் ஒரு எழுத்தாளனா படைப்பாளியா இருந்தாலும் சு.தமிழ்ச்செல்வியோட வாசகன்னு சொல்லிக்கறதுல எனக்கு ஒண்ணும் வெட்கமே கிடையாது. அந்த சு.தமிழ்ச்செல்வி மறக்கடிக்கப்பட்டது, மறைக்கப் பட்டது எதனால்? அப்புடின்னு யாராவது கேக்கணும். ஜி.கார்ல்மார்க்ஸோட சிறுகதைத் தொகுப்ப சமீபத்துல படிச்சேன். அவரப் பாத்தா கட்டித் தழுவணும்னு தோணுது. அந்தக் கதையை வளைத்துக்கொண்டு செல்லும் நடை மிக அற்புதமா இருக்கு. புதுத்தலைமுறை எழுத்தாளரா அவரை நான் சொல்றதுன்னா நவீனத்துக்கு அருகாமையில நின்னு பழைய காலத்து நடைமுறை வாழ்க்கைக்கு அவர் போறாரு. அந்தக் கதைகளோட தோற்றப்பொலிவு மிக மிக அற்புதமா இருக்கு.



அப்புறம் ஜி.பி.இளங்கோவனோட ஒரு கவிதையைப் படிச்சேன்.

**வீடுதிரும்பும் குழந்தைகள்**
**வெள்ளரி விற்கும் அம்மா**
**கொத்து வேலைக்குப் போகும் அப்பா**
**கூடவே வருகிறது கோடை**
**ஒருவர் பின்**
**ஒருவராக...**

சத்தியமா சொல்றேன் அந்தக் கவிதை அப்டியே என்ன எங்கியோ கொண்டு போயிடுச்சி. நாலே நாலு வரிதான். அது சுருட்டி மடக்கி நம்மள அப்படியே உட்கார வச்சிடுது. அதயெல்லாம் சொல்லாம இருக்க முடியாது.

**பொதுவாக உங்கள் பாணி எழுத்துகள் பழமை வாதத்தைப் போற்றுவதாக எழும் குற்றச்சாட்டுகள் பற்றி சொல்லுங்களேன்...**

அதாவது மூலம்னு ஒண்ணு இருக்கு. மூலத்தைத் தவிர்த்து நம்ம கிடையாது. ஒரு குடியானவன் ரொம்ப கஷ்டப்பட்டு சிறுகச்சிறுகச் சேத்து ஒரு காளை மாடு வாங்குறான். அந்த மாட்ட கிராமத்துல நாலஞ்சி பேர் வந்து பாத்துட்டு 'நல்லாருக்குப்பா'ன்னு சொல்லிட்டுப் போயிடுறாங்க. அதே நேரத்துல ஒடன் பங்காளி ஒருத்தன் வாரான். அவன் வந்து 'ஏண்டா இத வாங்கின, இந்தக்காலத்துல ஏர்மாட்ட வச்சிகிட்டு யார் விவசாயம் பண்றா? இந்தப் பணத்த வச்சிகிட்டு ஒரு நூறு குழி ஒத்தி புடிச்சிருந்தீன்னா உனக்கு சோத்துக்கு ஆயிருக்கும். அத வுட்டுபுட்டு இதப்போயி வாங்கியிருக்கிறே'ன்னு கேட்டுட்டுப் போறான். இவனுக்கு அது உறுத்துது. இவன்ட்ட கலப்பை செய்யிறதுக்கு காசு இல்ல. அந்த பங்காளி வூட்டுக்குதான் போறான். அவர் வூட்டுல வெட்டிக் காஞ்சி கிடக்குற மரத்த 'அண்ணே எனக்குக் கலப்பை செய்யிறதுக்கு அந்த மரத்துண்ட கொஞ்சம் தரமுடியுமா'ன்னு கேக்குறான். ஆனா அந்தப் பங்காளி 'அந்த மரமெல்லாம் பீரோ கட்டில் செய்யிறதுக்காக வெட்டிப்போட்டுருக்கேன், அதெல்லாம் தர முடியாது'னு சொல்லி அனுப்பிடுறார். அப்புறம் ஒரு நாள் வயலுக்கு அண்டை வெட்டுற வேலக்கிப் போறான். அங்க ஒரு கருவ மரம் வயல் பக்கம் சாஞ்சாப்ல நிக்குது. அந்த மேகிளையை வெட்டிபுட்டா வயல்ல நிழலும் வுழாது. இவனுக்குக் கலப்பையும் தேறிக்கும்ன்னு கணக்கு பண்ணிகிட்டே வேலை செய்றான். அப்ப வயகாரரு கிட்ட 'எனக்கு கூலிகூட குடுக்கவேணாம்ங்க, இந்த பெரிய மரக்கிளையை நான் வெட்டிகிட்டன்னா கலப்ப செய்ய ஆவும்'ன்னு சொல்றான். அந்தாளு 'வெட்றதுக்கு ஆள் இல்லாமதான் அப்படியே கிடக்கு, நீ வெட்டி எடுத்துக்க, உனக்குக் கூலி குடுக்கறதக் குடுத்துர்றேன்' அப்டின்னு சொல்லிடுறாரு. வெட்டி எடுத்துகிட்டு வந்து கலப்பை செஞ்சுர்றான். அப்புறம் ஒருநாள் அந்தப் பங்காளி இவன்ட்ட வந்து 'தம்பி, தம்பி, உன் ஏர் மாட்ட ஓட்டிகிட்டு வாப்பா, என் நாத்தாங்கா ஏர் உழுவணும்'னு கேக்குறாரு. அதுக்கு இவன் 'நீங்கதான் டிராக்டர்லாம் வச்சி உழுதுருப்பீங்களே'ங்கிறான். அந்தப் பங்காளி 'இல்லப்பா சுத்தி எல்லா பக்கமும் நட்டுபுட்டான்ய்யா, டிராக்டர் போறதுக்கு வழியில்லய்யா, ஏர் மாடு இருந்தா தான் நாத்தாங்காலு உழுவமுடியும்' அப்டின்னார். இப்ப புரியுதா நான் மூலம்னு ஒண்ணு இருக்குன்னு சொன்னனே, எல்லா நவீனங்களின் எல்லைகளும் மூலத்தை நோக்கிதான் நகரும். அதுக்கான தேவை எப்பவும் இருந்துகிட்டுதான் இருக்கும். உணவு உற்பத்திங்கறது முக்கியம். நவீனமா இருந்தாலும் பழைய முறையா இருந்தாலும் எல்லாக் காலத்திலும் உணவு உற்பத்திங்கறது அவசியம். ஆக விவசாயங்கறது ரொம்ப ரொம்ப முக்கியம். இதப் பதிவு செய்யவேண்டியதுதான் எல்லா இலக்கியத்தோட நோக்கமாக இருக்கணும். என் எழுத்து அந்த வேலையைத் தான் செய்யிது.

**ஒரு எழுத்தாளனாக உங்களுக்கு சமூக மரியாதை உயர் வான அந்தஸ்து என்று ஏதும் கிடைத்திருக்கின்றனவா?**

இல்லை. அப்டில்லாம் எதுவும் கிடையாது. அத எதிர்பார்க்கிறவனும் நான் அல்ல. நிலம் நீச்சுன்னு வச்சிருக்கறதால அந்த மரியாதைக்கெல்லாம் எனக்கு ஒண்ணும் பஞ்சமில்ல.

**அப்படியென்றால் கலை, இலக்கியம், எழுத்து பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

எளிமையாக எழுதுவது, உண்மையை எழுதுவது, ரசனையோடு எழுதுவது அவ்வளவுதான். கலை, இலக்கி யத்தை விட வாழ்வாதாரம் மிக அவசியம். இன்னிக்கி அவனுக்கு சோறு வேணும், அதுக்கப்புறம்தான் கலை. அவன் வயிறு நிறைஞ்சாதான் அவனுக்குக் கலை. கரிச்சான்குஞ்சா இருந்தாலும் எம்விவியா இருந்தாலும் வயித்தப் பாக்காம அந்தக் கலையை நேசிக்கமுடியாது. வயிறு நெறஞ்சாதான் கலையைப் பத்தின சிந்தனையே வரும். வயித்துப் பிரச்சினைதான் மத்த விஷயங்களைப் பத்தி முடிவெடுக்க வைக்குதுங்கறதுதான் உண்மை. அது தீந்தா மட்டுந்தான் அவங்களால மத்த இடங்களுக்குப் போகமுடியுங்கறது முக்கியமான கருத்து. எனக்கு நான் உழைக்காம இருந்தாகூட சாவுற வரைக்கும் கவலை யில்ல. கோடிக்கணக்கான சொத்து எங்கப்பா சம்பாரிச்சி வச்சிருக்காரு. ஆனா மத்தவங்களுக்கெல்லாம் அப்படி இருக்கா இல்லையான்னு எனக்கு சொல்லத் தெரியல. நான் ஒருமுறை கோவிச்சிகிட்டுப் போய் நாலுநாள் பட்டினியா கிடக்கப்ப பசியோட சாபத்தத் தெரிஞ்சி கிட்டன். பட்டினிங்கறது எவ்வளவு கொடுமங்கறத அப்ப நான் உணர்றேன். என்னுடைய வீம்பாலயோ என்னோட பெற்றோர்கள் என்னுடைய கருத்தை அனுமதிக்காததாலேயோ நான் அப்டி ஒரு நிலை மைக்குப் போகும்போது அந்தக் கஷ்டம் எனக்குத்

தெரியவருது. அதாவது லௌகீக வாழ்க்கைக்குல்லாம் அப்புறம்தான் கலை. லௌகீக வாழ்க்கைங்கறது என்ன? நம்முடைய புடம்போட்ட அத்தனை வாழ்க்கையையும் மீறி அதற்கப்புறம் ஏற்படுவதுதான் லௌகீக வாழ்க்கை. அங்கதான் நாம மனுசனா நிக்கிறோம். அங்கதான் நம்முடைய தேவை என்னன்னு தெரியுது. எதிர்பார்ப்பு என்னன்னு தெரியுது.

**சரி, நிறைவாக ஒரு கேள்வி. இந்த 68 வயசுல ஒரு விவசாயியாகவும் எழுத்தாளனாகவும் ஒருசேரப் பயணிக்கும் நீங்கள் இன்றைய விவசாயம் பற்றி உங்கள் பார்வையில் விரிவாகச் சொல்லுங்கள்...**

அதாவது இப்ப ஆழ்குழாய் விவசாயம் பண்ண ஆரம்பிச்சாச்சு. ஆத்துத்தண்ணி இன்னும வராதுன்னு நிலமை வந்ததுக்கப்புறம் வசதி உள்ளவன் போரப் போடுறான். எந்தக்காலத்திலயும் நிலத்த விட்டு வக்கறதேயில்ல. முப்போவம் நடுறான். அது ரொம்ப தப்பு. ஒரு பருவத்துக்கும் அடுத்த பருவத்துக்கும் நிலத்துக்கு ஓய்வு கொடுக்கணும். ஆனா கரண்ட் இருக்கறப்பல்லாம் நைட் பகலா ஓடுது. இவன் கரண்ட்டுக்குப் பணமே கட்டத் தேவையில்ல. ஆனா பக்கத்து நிலத்துக்காரன்ட்ட 'மணிக்கு அம்பது ருவா குடு'ன்னு கேக்கிறான். ஒரு 'மா'வுக்கு ஆயிரம் ருவா வரைக்கிம் வாங்குறான். பெரிய தேய்மானம்னு ஒண்ணும் வரப்போறதில்லன்னாலும் பெருவிவசாயி சின்ன விவசாயிங்ககிட்ட கொள்ளையடிக்கிறான். அதயும் தன்னோட வருமானமா பெருக்கிக்கிறான். கும்பகோணம் காவிரிக்கரை ஓரமாக கிடைக்கிற தண்ணி, இளநீ மாறி இருக்கு. அவ்வளவு அற்புதமான தண்ணி. இங்க வெண்ணாறு, வெட்டாறு பாசனம். இந்தத் தண்ணி அப்படியிருக்காது, ஏன்னா நிலத்தடி நீரிலேயே கடல் தண்ணி கலந்துடுச்சி. இங்க முப்பதடி போர் போட்டு தண்ணி இறைச்சப்ப பயிர்ல்லாம் நல்லாருந்துச்சி. முந்நூறு அடிக்குப் போனதுக்கப்புறம் பயிர்ல்லாம் கருக ஆரம்பிச்சிடுச்சி. அதுக்கு சிங் சல்பேட் அடி, அந்த சல்பேட் அடி, இந்த சல்பேட் அடி, அப்பதான் தெளியும்ங்கறான்.

ஆத்துத்தண்ணி, மழைத்தண்ணி விவசாயம் மாறி இப்ப கிடையாது. மழை ஏன் பெய்யலன்னா நிலத்தடி நீர உறிஞ்ச உறிஞ்ச, காடுகளை அழிக்க அழிக்க மழை பெய்யல. தாழ்வுநிலை கடல்ல உருவானா கடல் கொந்தளிச்சா மட்டுந்தான் மழைங்கிற நிலமை உருவாயிடுச்சி. அதுவும் போதுமான அளவுக்கு மழை பெய்யறதில்ல. இதற்கெல்லாம் காரணம் இயற்கையை நசுக்கியதால் வந்த வினை, இயற்கையைக் கொலை செய்ததனால் வந்த வினை. இதயெல்லாம் சரி பண்றதுக்கு நிறைய வழியிருந்தாலும் அதுக்கு இந்த சமூகம் இடம் கொடுக்கறதில்ல. மக்கள் கையில் அதிகாரம் எதுவும் கிடையாது; அவங்க கூப்பாடு போடவும், போராட்டம் பண்ணவும்தான் முடியும். நீ திரும்பத் திரும்ப நவீனத்துக்குள்ள போன்னுதானே இந்த சமூகம் நிர்ப்பந்தம் பண்ணுது. அதுனால என்ன நடக்குது? அந்தக்காலத்துல ஆட்டு மாட்ட வச்சிகிட்டு பத்து மேனி (5 மூட்டை) அறுக்கும்போது அவன் இருக்குற நெல்ல பட்டறையைப் போட்டு வச்சான். இன்னிக்கு 10 மூட்டை அறுக்குறான். உரம் அது இதுன்னு போட்டு 5 மூட்டை அதிகமாதான் அறுக்கிறான். ஆனா ஒண்ணுகூட மிஞ்சல. அந்தளவுக்கு செலவுபண்ணிதான் இந்த 10 மூட்டையைக் கொண்டு வரமுடியுது. ஆனாலும் பெருசா ஒண்ணுமில்ல. இதுல புதுசா ஒரு களைக்கொல்லி மருந்து வந்துருக்கு. பயிரும் களையுமா வளந்திருக்கிற வயல்ல அத அடிச்சா களை மட்டும் அழிஞ்சிபோயி பயிர் மட்டும் மேல விளைஞ்சி வரும். அப்ப அந்தக் களைக்கொல்லியோட வீரியம் அந்தப் பயிர்லயும் பாதிக்கும்தானே. இந்தக் களைக் கொல்லியை அடிக்கக்கூடாது, என் மக்கள் எனக்கு வேணும், என் மக்கள்தான் எனக்கு முக்கியம், என் மக்கள் பாதிக்கப்படக்கூடாதுன்னு அதுக்கு எதிரா ஊருக்குள்ள போராட்டம் பண்ணிகிட்டிருக்கேன். இந்த ஊர்ல போர் போடறதுக்கு ரொம்ப செலவாவுங்கறதால் அதிகமாக யாரும் செய்யறதில்ல. எங்கண்ணன் ரெண்டு லட்ச ருபாய்க்கு மேல செலவு செஞ்சி ஒரு போர் போட்டுக் கொடுத்திருக்கார். அத அப்படியே சாக்கு போட்டு மூடி வச்சிருக்கேன். நான் ஒருத்தன் மட்டும் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்துட்டா பக்கத்துல இருக்கிற பூரா நெலத்திலயும் ஈரப்பசையே இல்லாம போயிடும்னு சொல்லி இன்னிக்கிவரக்கிம் அத உபயோகப்படுத்தவே இல்ல(வீட்டுக்குப் பின்புற வயலில் தரையிலிருந்து ஒரு அடி மட்டத்திற்கு தெரிகிற குழாயில் சாக்குமூடிக் கட்டி வைத்திருப்பதை அழைத்துச் சென்று காட்டினார்.)

எழுதறதானாலும் விவசாயமானாலும் மனசாட்சி யோடதான் இப்பவரக்கிம் நடந்துகிட்டிருக்கேன். இப்பவரக்கிம் என் எழுத்துல ஜீவன கொண்டுட்டு வந்துருக்கன். இனிமயும் அபாரமா அந்த ஜீவன கொண்டு வரணும் அப்டிங்கறதத் தவித்து வேற கனவோ எதிர்பார்ப்போ அப்டில்லாம் என்ட்ட எதுவும் கிடையாது.

இரண்டு மணி நேர சந்திப்பு முடிந்து புறப்படும் போது அவர் பாடிக்காட்டிய வயலைக் கொத்தும்போது பாடுகிற அந்தப் பாடலைக் காற்றில் சுமந்தபடியே ஊர் வந்து சேர்ந்தோம்.


'ஏ... ஏலேலோ ஏலஏலோ... எறக்கி வெட்டு...
ஏலஏலோ ஏலேலோ... ஆழ வெட்டு...'

●

நூல் மதிப்புரை

# ஈழத்தில் சமூகப் பண்பாட்டு வரலாற்றுச் சக்திகள்

சி.ஆர்.ரவீந்திரன்




**ஈழத்தில் தமிழ் இலக்கியம்**

**கார்த்திகேசு சிவத்தம்பி**

***வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 600 098. தொலைபேசி எண்: 044 - 26359906***

***₹ 240/-***

**த**மிழறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தொகுத்து எழுதிய 'ஈழத்தில் தமிழ் இலக்கியம்' இதுவரை மூன்று பதிப்புகளைக் கண்டுள்ளது. ஓர் இலக்கிய வரலாறு எப்படி ஆக்கரீதியாகத் தொகுக்கப்பட வேண்டும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. ஒவ்வொரு பதிப்புக்கும் தனித்தனியாக முன்னுரை எழுதித் தனது நோக்கத்தைத் தெளிவு படுத்துவது இந்த ஆய்வு நூலை ஆழமாகவும், தெளிவாகவும் புரிந்துகொள்ளக் கூடுதலான வாய்ப்பை அளிக்கிறது.

"இலங்கையின் தனித்துவத்தையும், தமிழ் இலக்கியத்தின் பொதுமையையும் இணைத்து நிற்கும் ஓர் இலக்கிய மரபு இலங்கையில் தோன்றி வளர்ந்த முறையினைச் சிறப்பாக இந்திய வாசகர் களுக்கு எடுத்துக்காட்டுவதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும். அப்பண்பு நன்கு முகிழ்க்கத் தொடங்கிய காலமான 1948 - 1970 காலப் பிரிவையே இது விதந்து காட்டுகின்றதெனலாம்."

முதற்பதிப்பின் முன்னுரையில் இவர் தனது நோக்கத்தை இவ்வாறு நிறைவு செய்ததோடு, இன் னொன்றையும் குறிப்பிடுகிறார். பொதுவாக வரலாறு என்று தனிமனித ஆளுமையால் நிகழ்த்தப்படுவது ஒரு பொதுவான போக்காகவே இருந்து வருகிறது. அதிலிருந்து இந்த இலக்கிய வரலாறு மாறுபட்டு வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதையும் இவர் தனது முன்னுரையில் தெளிவுபடுத்துகிறார். "முற்போக்கு இலக்கிய இயக்கத்தினை எதிர்த் தோரின் முயற்சிகளை மூடி மறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது, இயக்கங்களின் பிரதிநிதிகளாக விளங்கியோரின் பெயர்களே தரப்பட்டுள்ளன." இதுவே, இந்த வரலாற்று ஆய்வின் தனித்தன்மையைப் புலப்படுத்துவதாகக் கருதலாம்.

ஈழத் தமிழிலக்கிய வளர்ச்சிக் கட்டங் களையும், வெவ்வேறு கால நிலைகளில் வெளி யான ஆக்கங்களைப் பற்றியும் பல வகைகளில் இந்த நூல் எடுத்துரைக்கிறது.

"மரபார்ந்த இலக்கியப் படைப்புக்கள், ஈழத்துக் கவிதைப் போக்கு, நாடகங்களின் வகைகள், இலக்கிய விமர்சனம், இலக்கிய அரசியல், ஈழத்தில் தலித் இலக்கியத்தின் தன்மை, மார்க்சிய நெறிகள் உள்ளிட்ட பல்வேறு இலக்கியப் பாங்குகளையும் இந்நூல் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது. ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றை முழுவதுமாக உணர்ந் தறிந்து கொள்ள இந்நூல் பெருந்துணையாய் அமையும் என்பதில் அய்யமில்லை" என்று முகப் புரையில் குறிப்பிடப்பட்ட மதிப்பீடு பொருத்த மானதே.

இவரது இலக்கியக் கண்ணோட்டம் வெறுமனே இலக்கியம் சார்ந்தது அல்ல; கலை, கலாச்சாரம், பண்பாட்டு அரசியல், தொழில், பின்புலம் போன்ற மாறுபட்ட தன்மைகளை உள்ளடக்கியது. அதைப் பற்றித் தனது கருத்துக்களைத் தயக்கம் எதுவும் இல்லாமல் வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார்.

தொடர்ந்து, இவர் ஈழத்தில் உள்ள இலக்கிய நிலைமைகளை ஆழமாகவும், தெளிவாகவும் புரிந்து கொண்டு இவர் அழுத்தமாகக் கூறுகிறார்.

"தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையில் காணப் படும் மொழி வழிப்பட்ட ஒருமைப்பாட்டையும், தமிழ் மக்கள் என்னும் வகையில் காணப்படும் சமூகப் பண்பாட்டு ஒருமைப்பாட்டையும் எடுத்துக் காட்டும் தமிழ் இலக்கியம், அதே வேளையில் அவர்களின் தனித்துவத்தையும் பேணவேண்டுவது அவசியமாகும்.

"இதனால், ஈழத்துத் தமிழிலக்கியத்தின் பிரதேச முக்கியத்துவம் மிக ஆழமாக அறியப்பட வேண்டிய ஒன்றாகும். அதே வேளையில் இப் பிரதேசங்களினூடே தொழிற்படுகின்ற ஒருமைப் பாட்டையும் ஆராய்தல் வேண்டும் இவை இரண்டுக்கும் இலக்கியமே பிரதான கருவியா கின்றது."

"ஒட்டுமொத்தமான 'ஈழத்து'த் தமிழ் இலக்கியம் என்பது இந்தப் பண்பின் பிரதிநிதியாக அமைதல் வேண்டும்."

ஆகவே, ஈழத்து இலக்கியம் குறித்த தனித் தன்மையை இனம் கண்டு அதை வளர்த்தெடுக்கும் நோக்கத்தில் இலக்கியத் திறனாய்வு செய்ய வேண்டும் என்ற தனது மதிப்பீட்டை முன்வைத்து திறனாய்வுக் கலைக்கு ஒரு புதுப்பாதையை அமைத்துக் கொடுக்கிறார்.

"இந்தப் பிரச்சினையை அணுகும்பொழுது, மதம், பண்பாடு, பொருளாதார இருக்கை, அரசியற் பிரக்ஞை, புவியியற் கூறு என்பவற்றை மனங் கொளல் அவசியம். இவைதான் சமூக இருக் கையைத் தீர்மானிக்கின்றன. அந்தச் சமூக இருக் கையின் பிரக்ஞைதான் இலக்கியத்தின் தோற்றத் திற்காளாகிறது."

"புவியியற் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அதே வேளையில் சமூகப் பண்பாட்டு அக வேறுபாடுகளையும் மனம் கொண்டு நோக்கும் போது இலங்கையின் தமிழ் பேசும் மக்கள் (அதாவது தமிழிலக்கியம் மூலம் தங்கள் உணர்வு / உணர்ச்சி அந்தரங்கங்களை வெளியிடும் கூட்டத்தினர்) பின் வரும் பிரதேசங்களிற் கால்கொண்டு வாழ்கின்றனர் என்பது தெரிய வரும்."

அந்த வகையில், மட்டக்களப்பு, திருகோண மலை, வன்னி, மன்னார், யாழ்ப்பாணம், மலை யகம், மேற்குக் கரை, தென்பகுதி போன்ற தளங் களில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

"இந்தப் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் ஈழத்தின் உப பண்பாடுகளாகக் கருதப்பட வேண்டியவை யாகும். இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பண்பாட்டு ஆளுமை உண்டு."

"இதுவரை வெளிவந்துள்ள ஈழத்துத் தமிழிலக்கியத்தின் படைப்பியற் பாரம்பரியத்தை நோக்கினால் இவ்வுண்மை தெரிய வரும்."

"ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு என்பதை வெறுமனே புத்தகங்கள், ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல்களாக நோக்காது, ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு என்பது எவ்வாறு அந்த மக்களின் ஜீவ உயிர்ப்பாக, அந்த உயிர்ப்பின் வெளிப்பாடாக அமைந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்."

திறனாய்வு குறித்த ஒரு புதுப்பார்வையையும் புதிய பயிற்சியையும் 'ஈழத்தில் தமிழ் இலக்கியம்' என்ற தனது இலக்கிய வரலாற்று நூலில் தமிழறிஞர் கா.சிவத்தம்பி அவர்கள் நிறுவுகிறார்.

ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பின் வரும் காலப் பகுதிகளாக வகுத்துக் கொள்ளலாம்.

1. யாழ்ப்பாணம் இராச்சியம் தோன்றும் வரையுள்ள காலம்.
2. யாழ்ப்பாண இராச்சியக் காலம். இது ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் என்றே எடுத்துக் கூறப்படல் மரபு.

3. போர்த்துக்கேயர் காலம்

4. ஒல்லாந்தர் காலம்

5. பிரித்தானியர் காலம். இதனைப் பின்வரும் உப பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம்.

அ. கிறித்துவத்தின் பரவலும், சமூகப் பண் பாட்டுத் தனித்துவப் பேணுகையும் (1796-1879) ஆறுமுகநாவலர் (1822-79)

ஆ. ஆங்கில ஆட்சி மத்தியதர வர்க்கத் தோற்றக் காலம் (1890 - 1948)

இ. தேசிய இலக்கியக் காலம் 1956.

குறிப்பிடப்பட்ட இந்தக் காலகட்டங்களில் நிகழ்ந்த மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் இவர் தனது இலக்கிய வரலாற்றில் பதிவு செய்திருக் கிறார்.

அன்று ஈழத்தில் வெளியான 'மறுமலர்ச்சி', 'பாரதி' போன்ற பத்திரிகைகளின் தோற்றத்தையும், வளர்ச்சியையும், தமிழில் அவற்றின் தாக்கத்தையும் குறிப்பிடுகிறார். அவற்றை வெளியிட்டு வந்த அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தம் ஆகியோரை மையமாகக் கொண்டே அன்றைய ஈழத்து நவீன இலக்கியம் தோன்றி வளர்ந்தது. 'ஈழகேசரி'ப் பத்திரிகை முக்கியமான சமகால ஏடாகும்.

அடுத்து, "ஆறுமுக நாவலரது சமய, இலக்கியப் பணிகளை எடுத்துக் கூறுவோர், அவர் சைவத் தையும் தமிழையும் மீண்டும் தழைக்க வைத்த பெரியார் என்று கூறுவர்" என்பதையும் குறிப்பிடு கிறார்.

"கிறித்துவருக்குத் தமிழைப் போதித்தது மட்டு மல்லாது விவிலியத்தையே தமிழில் மொழி பெயர்த்தவர் நாவலர்." இதுபோன்ற அரிய செய்திகளை இவர் இதில் பதிவு செய்கிறார்.

"ஈழத்து இலக்கிய வரலாற்றை விளங்கிக் கொள்வதில் தமிழ் பேசும் மக்களின் பரம்பல் பற்றிய அறிகை பெரிதும் உதவும். ஏனெனில் ஈழத் தமிழிலக்கியத்தில் மண்வாசனை என்ற கோஷம் இந்தப் பிரதேச வாழ்க்கையை அடியாக மேற் கிளம்பியதே."

உலக வரலாற்றில் தொடர்ந்து ஆளும் வர்க்கங் களின் வாழ்க்கையும், பிரச்சனைகளும் உள்ளடக்க மாகக் கொண்டு கலை, இலக்கிய வடிவங்கள் தோன்றுவதும், வளருவதும் நிலைத்திருப்பதும் மரபாக இருந்து வருகிறது. மண் சார்ந்து உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைகள் குறைந்த, வானமே கூரையாகக் கருதி வாழ்ந்த உழைக்கும் மக்களின் கலை, இலக்கியங்கள் வாய் மொழி வடிவங்களிலேயே இருந்து வந்தன. இருபதாம் நூற்றாண்டில் அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாகவும், சோசலிச நாடுகளின் தோற்றங்களிலும் உழைக்கும் மக்களின் வாழ்க்கை முறைகள் கலை, இலக்கிய வடிவங் களைப் பெற்றுப் பரவலாக விரிந்தன.

இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, பிரெஞ்சு இருத்தலியல் தத்துவஞானியான ஜீன் பால் சார்த்தர் இலக்கியத்தைப் பற்றிய பொதுவான ஒரு கருத்தை வெளிப்படுத்தினார்; "இதுவரை உலக அளவில் எழுதப்பட்டுவரும் இலக்கியங்கள் எல்லாமே நடுத்தர வர்க்கங்களைப் பற்றிய வாழ்க்கையை, நடுத்தர மக்களுக்காக, நடுத்தர வர்க்க நலனுக்காக, நடுத்தர வர்க்கத்தினரால் எழுதப்பட்டு வருகின்றன."

அதைப் போலவே, சிலி நாட்டுக் கவிஞரான பாப்லோ நெருடா தன்னுடைய கருத்தையும் வெளியிட்டார். "நான் ஏழைகளைப் பற்றி ஏழை களுக்காக, ஏழைகளின் நல்வாழ்வுக்காக எழுதிக் கொண்டிருக்கிறேன்."

இன்றைய நிலைமைகளிலும் பெரும்பாலான கலை, இலக்கியங்கள் மேல்தட்டு வர்க்க நலன் களுக்காக, மேல்தட்டு வர்க்கத்தினரால் தொடர்ந்து எழுதப்பட்டு வருகின்றன.

இதை உணர்ந்த முற்போக்குக் கலைஞர்கள் உழைக்கும் மக்களின் வாழ்க்கையை, உழைக்கும் மக்களின் நன்மைக்காக, உழைக்கும் மக்களின் மொழியில் கலை, இலக்கியங்களை வடிவமைத்து மனிதப் பண்பாட்டை வளர்த்து வருகிறார்கள். உலகளாவிய அளவில் நிகழ்ந்த இந்த மாற்றத்தை இனம் கண்டு கொண்ட இந்த வகையான கலை, இலக்கியப் படைப்பாளிகள் உழைக்கும் மக்களை முன் நடத்திச் செல்லத் தொடர்ந்து தங்களது ஆக்கங்களின் வாயிலாக முனைந்து வருகிறார்கள்.

அதன் ஒரு வெளிப்பாடாக கா.சிவத்தம்பி அவர்கள் தனது திறனாய்வின் வாயிலாக மண் வாசனை நிறைந்த கலை இலக்கியங்களை அடையாளப்படுத்தி அவற்றை ஊக்குவிக்கிறார்.

ஆறுமுக நாவலர் காலத்தில் (1822-1879) 'சைவமும் தமிழும்' என்ற உரத்த குரல் ஈழத்து வடபகுதியின் சமூக அரசியல் தேவைகளை - ஒரு வரலாற்றுத் தேவையினைப் பூர்த்தி செய்வதாக இருந்ததையும் இவர் விளக்குகிறார்.

தொடர்ந்து நாவலரின் முக்கிய இலக்கியத் தொழிற்பாடுகளைப் பின்வரும் விதத்தில் பட்டிய லிட்டுக் காட்டுகிறார்.

பண்டைய தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்தமை; பண்டைய தமிழ் நூல்களுக்கு உரை எழுதியமை; பாடப் புத்தகங்களை எழுதியமை.

இவை யாவுமே ஈழத்தில் தமிழ்க் கல்வி 'சைவமும் தமிழும்' என்ற வட்டத்துக்குள் தேசிய நிலைமையை ஏற்படுத்த உதவியவை.

நாவலர் காலத்து வாழ்ந்த உடுப்பிட்டிச் சிவ சம்புப் புலவர், வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் வைத்தியலிங்கம் பிள்ளை, சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோர்களது இலக்கியப் பணிகளும் இத்தேவைகளைப் பூர்த்தி செய்தனவாம்.

தொடர்ந்து, இலங்கையின் தமிழ் நாவல் இலக்கியம் தோன்றிய காலப் பின்னணியைச் சுட்டிக்காட்டுகிறார். அதில், துரையப்ப பிள்ளை அவர்களின் புதிய பார்வையையும், புதிய கருத்துக் களையும் இவர் அடையாளப்படுத்துகிறார்.

இலங்கையில் வளரத் தொடங்கிய நாவல் இலக்கிய முயற்சிகளையும், அதன் முன்னோடி களையும், அவற்றிற்குரிய பின்னணிகளையும் குறிப் பிட்டுக் காட்டுகிறார். மங்கல நாயகம் தம்பை யாவின் 'நொறுங்குண்ட இருதயம்' (1914) பி.வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின் 'காசிநாதன் - நேசமலர்' (1924) கோபால நேசரத்தினம் (1928) முதலியவை அவற்றில் குறிப்பிடத்தகுந்தன.

பழையன கழிந்து, புதியன புகும் இக்கால கட்டமே இலங்கையின் சிறுகதை, நாவல், பத்திரிகைத் துறை என இலக்கிய வரலாற்றில் முக்கியமாகின்றது. இக்காலகட்டத்தில் முக்கிய இடம்பெறுவோரைப் பின்வருமாறு மூன்று வகையினராகப் பிரிக்கலாம். ஆங்கிலக் கல்வி வழியாக ஆக்க இலக்கியத்திற்கு வந்தோர், தமிழ்க் கல்வி வழியாக ஆக்க இலக்கியத் திற்கு வந்தோர், முற்போக்கு இலக்கியக் கோட் பாடுகளைத் துணிகரமாக முன்வைத்தோர்.

முதலாவது பிரிவினருக்கு எடுத்துக்காட்டாக இலங்கையர் கோன், சி.வைத்தியலிங்கம் ஆகி யோரையும், இரண்டாவது பிரிவினருக்கு எடுத்துக் காட்டாக அ.செ.முருகானந்தத்தையும், மூன்றாவது பிரிவினருக்கு அ.ந.கந்தசாமி, கே.கணேஷ் ஆகி யோரையும் இவர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகிறார்.

இக்கால கட்டத்தில் இலங்கையில் ஆக்க இலக்கியம் கிளைக்கத் தொடங்கியது. எனினும், அடுத்துவரும் 1954-70காலப் பிரிவிலேயே அது தனித்துவமுடைய இலக்கிய வளமாக மலர்கிறது என்பதையும் இவர் இனம் காண்கிறார்.

மேலும், புனைகதை, கவிதை, நாடகம் போன்றவை ஈழத்தில் தோன்றி வளர்ந்து தனித் தன்மையை நிலைப்படுத்திக் கொண்ட நிலைமை களையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார் இவர்.

தொடர்ந்து, '1970க்குப் பின் ஈழத்திலக்கி யத்தில் தோன்றிய முக்கிய வளர்ச்சி நெறிகள்' பற்றிய பின்னணியை இவர் அடையாளப்படுத்து கிறார். 'வீரகேசரிப் பிரசுரங்கள்' என்ற புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் முயற்சிகளையும், வளர்ச்சியையும், விளைவுகளையும் அடையாளப் படுத்திப் புதிய இலக்கியங்கள் தோன்றிய விதத் தையும் குறிப்பிடுகிறார்.

தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தகங்கள், பத்திரிகைகள் ஈழத்தில் ஏற்படுத்திய தாக்கங்களையும் அறிய முடிகிறது. அத்துடன் ஈழத்துப் படைப்பாளிகள் தமிழக இலக்கியப் பத்திரிகைகளில் தங்களுடைய படைப்புக்களை வெளியிடும் வாய்ப்பைப் பெற்றன. இலக்கிய அடிப் படையில் ஈழத்திற்கும், தமிழகத்திற்கும் இருந்து வந்த உறவு விரும்பத்தகுந்ததாகவே இருந்தது என்பதை இவர் புலப்படுத்துகிறார்.

"தமிழின் அண்மைக்கால இலக்கியம்", "பண் பாட்டு ஒருங்கிணைப்பு" என்ற இந்த இரண்டு பிரச்சினைகளையும் இணைப்பது சற்று அசாதாரண மான ஒரு நிகழ்ச்சியே ஆனால், இது நிச்சயமாகக் கிளப்பப்பட வேண்டிய பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை கிளப்பப்படுவதும் நேர்மையான பதில் தரப்படுவதும் அவசியமாகும். இதைக் காலத்தின் ஒரு கட்டாயத் தேவையாகவே இவர் வலியுறுத்து கிறார்.

இலங்கையில் தமிழிலக்கியத்தின் அண்மைக் காலப் போக்கும், கலாச்சார ஒருங்கிணைப்பும், 'புலம் பெயர் தமிழர் வாழ்வு' போன்ற கட்டுரையின் வாயிலாக ஈழத்துத் தமிழர் வாழ்க்கையில் அடங்கி யுள்ள சமுதாய, கலாச்சாரப் பண்பாடு, கலை, இலக்கியம், அரசியல், தத்துவம் போன்றவற்றைத் தெளிவாகவும், துல்லியமாகவும் விளக்குகிறார்.

வளர்ச்சிக்குரிய கண்ணோட்ட அடிப்படையில் 'இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஈழத்தின் தமிழிலக்கிய வளர்ச்சியும்' மற்றும் 'ஈழத்துத் தமிழிலக்கியத்தில் முற்போக்குவாதத் தொழிற்பாடுகள்...' போன்ற கட்டுரைகளின் வழியாக 'ஈழத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி'யை இவர் இனம் காண்கிறார்.

மேலும், 'ஈழத்தில் தமிழ் இலக்கிய விமர்சனம்', 'புதிய சவால்கள்', 'புதிய பிரக்ஞைகள்', புதிய

எழுத்துக்கள், 'தலித்', 'தலித் இலக்கியம் என்ற வகைப்பாடு இலங்கைக்குப் பொருந்துமா?', 'ஈழத்தில் மார்க்சிய விமர்சன செல் நெறிகள்' போன்ற கட்டுரைகளின் வாயிலாக இவர் இன்றைய ஈழத்தின் இலக்கியப் போக்குகள் குறித்துத் திறனாய்வு செய்கிறார்.

கடைசியாக, பின்னிணைப்புக்களின் வாயிலாக இலக்கியம், விமர்சனம், இலக்கிய வரலாறு இவற்றின் அடிப்படையில் உயிர்ப்பான அரசியல் போன்றவற்றை நிகழ்காலத்திற்கு உரிய வகையில் தெளிவுபடுத்துகிறார்.

ஓர் அணுவின் கருவில் அளவற்ற ஆற்றல் உள்ளடங்கியிருப்பதைப் போல, 'ஈழத்தில் தமிழ் இலக்கியம்' என்ற வரலாற்று நூலில் ஏராளமான செய்திகள் அடங்கியுள்ளன. இலக்கிய ஆர்வலர்கள் விரும்பிப் படிக்கும் விதத்திலும், ஆய்வாளர்கள் பயனடையும் வகையிலும் மிகத் தெளிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு வடிவமைக்கப்பட்டு உள்ளது இந்த இலக்கிய வரலாற்று நூல்.

திறனாய்வுக் கலை குறித்த இவரது மதிப்பீட்டைத் தெளிவாக இலக்கிய ஆர்வலர்களின் முன் வைக்கிறார். இது, இலக்கியத்தைப் பயில்வதற்கு ஒரு வழிமுறையாக அமைந்துள்ளது. இலங்கையின் நிலைப்பாட்டை விளக்க முன்வந்த இவர் தனது கருத்துக்களை இப்படிக் குறிப்பிடுகிறார்:

"தற்காலத் தமிழ் இலக்கியத்தின் பன்முகப் பட்ட பல்தேச நிலைப்பட்ட சமகால வளர்ச்சியில், இலங்கை - விமர்சனத் துறையில் முன்னணியில் நிற்கின்றமை யாவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஓர் உண்மையாகும்."

"இலங்கையினது விமர்சனத்துறை முதன்மையும் விமர்சனத்துறைக்கு இலங்கையில் வழங்கப் பெறும் முக்கியத்துவமும் எவ்வாறு ஏற்பட்டுள்ளன என்பதை நோக்கல் வேண்டும். உயர் தமிழ் இலக்கியக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதாரமாக அமையும் விமர்சனநூல்கள் இலங்கையரால் எழுதப் பட்டு வரும் பண்பு கனக சபைப் பிள்ளையின் '1800 வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்' என்ற நூல் முதல் நின்று நிலவி வருகின்றது என்பது கண்கூடு.

"இதைவிட முக்கியமானது விமரிசன நூல்கள் ஆராய்ச்சிகள் இலங்கையில் தோன்றுவதற்குக் காரணமாக உள்ள இலக்கியப் பயில்நிலைப் பின்னணியாகும்." ●



உலகத் தாய்மொழித் திருநாளை முன்னிட்டு 24-04-2018 அன்று
காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் நியூ செஞ்சுரியின் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.
பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.நடராஜன் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.
தமிழ்ப் பேராசிரியர் பா.ஆனந்தகுமார், இந்திப் பேராசிரியர் மொகல் சலீம் பெய்க் மற்றும்
என்.சி.பி.எச். திண்டுக்கல் மேலாளர் எத்திராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2018

## அறிவிப்பு

*30-வது ஆண்டாக படைப்பாளிகளுக்குக் கீழ்க்கண்ட வகைகளுக்குப் போட்டி அறிவிக்கப்படுகிறது:*

1. சிறந்த ஆய்வு நூல்கள்

பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது ● முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது

2. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது ● அறந்தை நாராயணன் நினைவு விருது

3. சிறந்த நாவல்கள்

அழகியநாயகி அம்மாள் நினைவு விருது ● தென்னமநாடு இராமசாமி–மாரியம்மாள் நினைவு விருது

4. சிறந்த சிறுகதை நூல்கள்

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது ● திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருது

5. சிறந்த சிறுவர் நூல்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது ● எம். கௌதம் நினைவு விருது

6. சிறந்த கவிதை நூல்கள்

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது ● பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது

7. சிறந்த கட்டுரை நூல்கள்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது ● மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது

8. சிறந்த குறும்படம்

தோழர் பா. முத்துசாமி நினைவு விருது

9. சிறந்த ஆவணப்படம்

பி.என்.பாலு–பாக்கியலட்சுமி நினைவு விருது

- *பரிசுக்கான (1 - 5) நூல்கள் 2014-க்கு முன் வெளிவந்தவையாக இருக்கலாகாது.*
- *பிற பரிசுகளுக்கான (6 - 7) நூல்கள் 2017, 2018-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- *பரிசுக்கான 8, 9-வது பிரிவுக்கு 2017, 2018-களில் தயாரிக்கப்பட்ட படங்கள் அனுப்பப்பட வேண்டும்.*
- *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் அச்சில் 90 பக்கங்கள் வருமாறு இருக்க வேண்டும்.*
- *படைப்பாளிகள் இப்போட்டிகளில் 2013-க்குப் பிறகு பரிசு பெற்றவர்களாக இருக்கலாகாது.*
- *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை. படைப்பாளிகளின் முகவரி, தன்குறிப்பு, நூல் / குறுந்தகடு பற்றிய சிறுகுறிப்பு ஆகியவற்றுடன் நூலின் / குறுந்தகட்டின் இரு படிகள் அனுப்புக. தொலைத் தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி தெரிவிக்க.*
- *படைப்புகளை **31-07-2018**-க்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:*

**முனைவர் நா. இராமச்சந்திரன்,**
**55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை,**
**பெருமாள்புரம், திருநெல்வேலி – 627007**
*பேச: 9443554805 மின்னஞ்சல்:* nrfolk@gmail.com

**இரா. காமராசு**
மாநிலப் பொதுச் செயலாளர்

**சி. சொக்கலிங்கம்**
மாநிலத் தலைவர்

**நா. இராமச்சந்திரன்**
செயலாளர் – இலக்கியக் குழு



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

# திரு.வி.க. பார்வையில் பௌத்தம்

**அ.மார்க்ஸ்**

5

**திருமுறைகளிலும் பௌத்தம் விளைவித்த தாக்கங்கள்**

திருமுறைகளில் பௌத்தம் என்கிற தலைப்பில் திரு.வி.க அவர்கள் என்ன கூறுவார் என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறது. சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் ஒன்றுக்கொன்று சளைக்காமல் கடுமையான சொற்களால் கண்டிப்பதையும், சிரமண மதத்தினர் மீது வெளிப்படையாகவே வன்முறைகளை ஏவுவதையும் பேராசிரியர்கள் கைலாசபதி, கோ.கேசவன் ஆகியோர் மிக விரிவாகப் பேசியுள்ளதை அறிவோம். வன்முறைகள் ஏவப்பட்டதோடும் கதை முடிவதில்லை. அவற்றைப் பின்பற்றுவோர் மீது வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. சமணம் கிட்டத்தட்ட அழிக்கப்பட்டது. பௌத்தம் 12ஆம் நூற்றாண்டுவரை தாக்குப்பிடித்த போதும் பெரிய செல்வாக்குடன் அது இல்லை; நசிந்துகொண்டுதான் இருந்தது.

தீவிரச் சைவப் பற்று மிக்க திரு.வி.க. அவர்கள் அந்த விடயங்களைச் சற்றே அடக்கி வாசிக்கிறார். சைவ வைணவ பக்தி இலக்கியங்களில் காணப்படும் இந்த வன்முறை வெளிப்பாடுகள் பிற்காலச் சேர்க்கையாக இருக்கலாம் எனப் பொருள்படும்படி தான் சந்தித்த ஒரு உண்மை நிகழ்வை விரிவாகப் பேசுகிறார்.

அவர் காலத்தில் சிவானந்த சுவாமிகள் என்பவரின் 'ஞானசூரியன்' எனும் நூல் பெரிய அளவில் சைவர் களால் விரும்பிப் படிக்கப்பட்ட நூலாக இருந்துள்ளது. அதில் ஞானசம்பந்தரின் சமணர்களைக் கழுவேற்றியது பற்றிய குறிப்பில் உள்ள,

"அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெய்யத் திரு உளமே"

எனும் வரிகளில் இரண்டாவது வரியில் உள்ள "திறங்களை" எனும் சொல் 'சிரங்களை' என மாற்றப் பட்டிருத்தலை திரு.வி.க கண்டு குழம்புகிறார். பல பிரதிகளையும் ஒப்பிட்டு மூல பாடம் 'திறங்களை' என்பதாகத்தான் இருக்க வேண்டும் என உணர்கிறார். மணிமேகலையில் அமைந்துள்ள 'சமயக் கணக்கர் திறங்கேட்ட காதை' என்பதிலிருந்து 'திறம்' என்பதற்குச் சமயம் தொடர்பான கொள்கை அல்லது புலமை என்பதாகப் பொருள் கொள்ளலாம். அதன்படி இவ்வரிகளுக்கு, "அந்தணர் ஓதும் அரிய மறைகளைச் சிந்தையில் ஏந்தாத சமணர் தம் சமயக் கருத்துக்களை வீழ்த்துமாறு வாதுசெய்ய அருள் புரிவாய்" என இறைவனை வேண்டுவதாகப் பொருள் அமைகிறது. ஆனால் ஞானசூரியனில் உள்ள திருத்தம், "அருமறை களை ஏற்காத சமணர் தம் சிரங்களை வீழ்த்துமாறு" சம்பந்தர் இறைவனை வேண்டுவதாகப் பொருளாகிறது.

இது குறித்து ஒருநாள் நூலாசிரியர் சிவானந்த சுவாமிகளையே திரு.வி.க அவர்கள் கேட்கிறார். அதற்கு அவர் தனக்கு அப்படி அச்சாகியுள்ளது தெரியாது எனவும், அதைத் தாம் சண்முகஞ் செட்டியார் என் பவரிடம் அச்சியற்றக் கொடுத்தபோது அங்கு நடந்த பிழையாக இருக்க வேண்டும் எனவும் பதிலுறுக்கிறார்.

இச்சம்பவத்தை இத்தனை விரிவாக திரு.வி.க. சொல்வதென்பது இப்படித்தான் சிரமண முனிவர்கள் மீதான சைவ வைணவப் பக்தி இலக்கியங்கள் அனைத்திலும் வெளிப்படும் வன்முறைகள் எல்லாம் பின்னர் இடைச் செருகல்களாக ஏற்படுத்தப் பட்டவைதான் என்கிற நோக்கில்தான்.

"பின்னாளில் புத்தி பூர்வமாகவும், அபுத்தி பூர்வ மாகவும் இப்படிப் பிழை நிகழ்தல் இயல்பு. அப்பிழை பாடுகளைச் சரித்திர உலகில் ஏற்றுவது ஆராய்ச்சிக்காரர் செயலன்று" எனக் கூறி மேற்செல்வார் திரு.வி.க.

பல ஆண்டுகளுக்கு முன் நான் ஒருமுறை சம்பந்தரின் திருஆலவாய் திருமுறை திருப்பதிகத்தில் உள்ள,

மண்ணகத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ணகத் திரு ஆலவாயாய் அருள்
பெண்ணகத்து எழில் சாக்கியப்பேய் அமண்
தெண்ணர் கற்பழிக்கத் திரு உள்ளமே

எனும் வரிகளை எடுத்தாண்டு சமய வன்முறைகளைப் பற்றி எழுதிய கட்டுரை ஒன்று குறித்து தஞ்சைப் பேராசிரியர் தட்சிணாமூர்த்தி அவர்கள் நேரில் வந்து சந்தித்து "கற்பழித்தல்" என்பதற்கு இங்கு "கல்விச் செருக்கை அழித்தல்" எனப் பொருள் கொள்ள வேண்டும் என விளக்கமளித்துச் சென்றது நினைவுக்கு வருகிறது.

தமிழறிஞர்கள் நன்னோக்கத்துடன் இப்படி விளக்கமளித்தபோதும், அப்படியான விளக்கங்களில் சில உண்மைகளும் இருந்த போதிலும் தமிழ் மண்ணில் அவைதீக மதங்களின் மீது பக்தி இயக்கம் மேற்கொண்ட வன்முறைகளை எல்லாம் இல்லை என மறுதலித்தல் சாத்தியமில்லை.

தொடர்ந்து பேசும்போது திருமுறைகளில் இறுதியான பெரியபுராணத்திலும் பௌத்தம் நுழைந் துள்ளது என பௌத்தத் தாக்கம்தான் வைதீகத்திற்குள் அறச்சாத்தியங்கள் நுழைவதற்குக் காரணமாயிருந்தது எனும் தன் கருத்தை மீண்டும் உறுதிப்படுத்துவார் திரு.வி.க. அதற்குச் சான்றாக இந்து தர்மம் முன்வைக்கும் வேள்வியை நம் பெரியபுராணம் 'ஊனமில் வேள்வி' என உரைப்பதைச் சுட்டிக் காட்டுவார்.


"ஊன் வேள்வியை ஊனமில் வேள்வியாகச் செய்தது எது? புத்தர் பெருமான் அறமன்றோ? திருமுறைகள் பௌத்த மதத் தர்க்கங்களை மறுத்துரைப்பினும் பௌத்த தர்க்கங்களை ஏற்றுக் கொண்டிருத்தல் கருதத்தக்கது" என முடிப்பார்.

இந்து தர்மத்தில் ஏதேனும் அறக் கருத்துக்கள் இருக்குமாயின் அவை வைதீக மதிப்பீடுகளை மறுத்த பௌத்த சிந்தனைகளின் கொடைதான் எனப் பறை சாற்றும் வகையில் அறிஞர் திரு.வி.க அவர்களின் சிந்தனைகள் அவருடைய காலகட்டத்தில் மிகவும் புரட்சிகரமானவை என்பதில் ஐயமில்லை.

6

## இந்து மதத்தில் உள்ள நற்கூறுகள் யாவும் பௌத்தத்தின் கொடையே

வைணவ இலக்கியங்களில் பௌத்தத் தாக்கம் குறித்துப் பேசும்போது திரு.வி.க. கம்ப இராமாயணத் தோடு நிறுத்திக் கொள்கிறார். நேரமின்மை ஒரு காரணமாக இருந்திருக்கலாம். வடமொழியின் செல்வாக்கு தமிழுக்கு இணையாக மேலெழுந்திருந்த காலம்தான் சோழர்களின் காலம். இதைச் சரியாக அடையாளம் கண்டு பதிவு செய்கிறார். ஆனால் இன்றைய தமிழ்த் தேசியர்கள் அதைக் கமுக்கமாக மறைத்துக் கொண்டு சோழர் காலத்தைப் பொற் காலமாகக் கொண்டாடுவது வேறு கதை.



சித்திரிக்கப்படுகிறது, கம்பர் அதை எவ்வாறு ஒப்பீட்டளவில் பண்புடையதாக ஆக்க முயல்கிறார் என்பதையும், வால்மீகியில் காப்பிய நாயக, நாயகியரான இராமன், சீதை எல்லோரும் புலால் உண்பவர்களாக இருப்பதை எவ்வாறு கம்பர் மாற்றி அமைத்து அவர்களைப் புலால் உண்ணாதவர்களாகச் சித்திரிக்கிறார் என்பதையும் சுட்டிக் காட்டி,

"சகோதரிகளே! சகோதரர்களே! பெண்களை இழிவுபடுத்த கம்பர் நெஞ்சம் எழவில்லை. இம் மாற்றத்திற்குக் காரணம் யாது? கம்பர் உள்ளத்தில் புகுந்துள்ள தமிழ்ப் பௌத்த அறமேயென்று யான் சொல்வேன். பௌத்த அறங்கள் தமிழ் நூல்களில் புகுந்து செய்யும் நலத்தை என்னென்று நவில்வேன்?" என வியப்பது குறிப்பிடத்தக்கது.

அற மதிப்பீடுகள் தமிழ் இலக்கியங்களிலும் வாழ்விலும் எங்கெல்லாம் தென்பட்டாலும் அவை பௌத்தம் அளித்த கொடைதான் என அவர் துணிந்து கூறி வருவதை நாம் கவனத்தில் பதிக்க வேண்டும்.

வால்மீகிக்கும் கம்பனுக்கும் இடையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இடைவெளி உள்ளது. இந்த ஆயிரம் ஆண்டுகளில் இராமன் வெறும் காப்பிய நாயகனாக மட்டுமின்றி அவதார நாயகனாகவும் உயர்த்தப்படுகிறான். கம்பர் தன் காப்பியத்திற்கு இட்ட 'இராமாவதாரம்' எனும் பெயரே இதை உணர்த்தும். என் கட்டுரைகளில் இவற்றை விரிவாக விளக்கி யுள்ளேன். இப்படி இராமனை அவதாரமாக உயர்த்திக் காட்டவும் இராமாயணத்தை ஒரு புனித நூலாகப் படைக்கவும் கம்பர் மூலக் காப்பியத்தில் எத்தகைய திருத்தங்களை மேற்கொள்கிறார் என திரு.வி.க அவர்கள் கூறுபவை இங்கே நம் கவனத்திற்குரியன.

இராமாயணப் பாத்திரங்களிடம் இருந்ததாக வால்மீகியால் அடையாளங் காட்டப்பட்ட அறமற்ற பண்புகளையும், செயல்பாடுகளையும் தன்னுடைய மறு உருவாக்கத்தில் கம்பர் செதுக்கி நீக்கி விடுவதை திரு.வி.க. சுட்டிச் செல்கிறார். சீதையை இராவணன் கடத்திச் செல்லும் முறை வால்மீகியில் எவ்வாறு

அடுத்து, தமிழ்ப் புராணங்களில் தென்படும் பௌத்தத் தாக்கங்களைப் பற்றிச் சிலவற்றைச் சொல்கிறார். "புராண உலகத் தோற்றத்துக்குக் காரணமாக அமைந்தது பௌத்தமே" - எனக் கூறும் திரு.வி.க.

"சாதாரண மக்கட்குப் பௌத்த தர்மம் பயன்படும் பொருட்டு புத்தர் ஜாதகக் கதைகள் எழுதப்பட்டன. அவை மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. கதைகள் பெரும்பான்மையோர் நெஞ்சைக் கவர்வது இயல்பு. ஜாதகக் கதைகளால் விளையும் பயன்களைக் கண்ட ஆரியர்கள் புராணக் கதைகளை எழுதினார்கள். அப்புராணங்கள் பின்னே தமிழுலகிலும் புகுந்தன" - எனச் சொல்வது ஆய்வுலகில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்து. தொடர்ந்து, "புராணங்களில் கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறுமை, இரக்கம். தவம், அன்பு, அறிவு, மெய் என்னும் எட்டு மலர்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள் பல காணலாம். முப்பத்திரண்டு அறங்கள் யாண்டிருந்து முளைத்தன? உயிர்கட்கு உதவல் என்னும் கருத்துக்கே பிறப்பிடம்

பௌத்த மதமென்று நான் உறுதியாக நம்புகிறேன். அக்கருத்து பின்னே பல சமயங்களில் நுழைந்தது. கொல்லாமை, ஜீவகாருண்யம் முதலியன எங்கெங்குள்ளனவோ ஆங்காங்கெல்லாம் பௌத்த தர்மம் உண்டெனக் கொள்க. புராணங்களில் அறவொழுக்கப் பாக்கள் அளவின்றிக் கிடக்கின்றன. அவை அனைத்தும் பௌத்த மதத்தின் செல்வாக்கைக் குறிப்பன என்பது எனது உள்ளக்கிடக்கை" எனக் கூறும் திரு.வி.க. அறத்தைப் போற்றும் புராணப் பாடல்கள் சிலவற்றை மேற்கோளாகக் காட்டுகிறார்.

*(1)* "அறமே மறங்கண் முழுதழிக்கும் அறமே கடவுளுலகேற்றும்
அறமே சிவனுக்கொரு வடிவம் ஆகுஞ் சிவனை வழிபடுவோர்க்கு
அறமே எல்லாப் பெரும்பயனும் அளிக்கும் யார்க்கும் எவ்விடத்தும்
அறமே அச்சந் தவிர்ப்பதென அறைந்தான் சரதா தப முனிவன்"

*(2)* "தருமமே யுலகம் போற்றச் சகல காரணமதாகும்
தருமமே அழியாதென்றுந் தாபரமாகி நிற்கும்
தருமமே தனை வேட்டோர்க்குச் சவுக்கியம் அனைத்தும்
தருமமே முத்தி சாதனம் என்றும் கொள்"

என்கிற இரு புராணப் பாக்களைப் பௌத்தம் சைவத்துள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவுகட்கு எடுத்துக்காட்டாக வைக்கும் திரு.வி.க. புராணப் பாடல்கள் பலவும் அறத்திற்குப் புறம்பாகவும் அமைந்துள்ளனவே என்கிற கேள்விக்கு, "அவையாவும் அறம் பொலியாத நெஞ்சுடைய மறவோரால் பாடப்பட்டன என்று யான் சொல்வேன்" என முடிக்கிறார்.

குப்பைகள் என நாம் புறந்தள்ளும் அளவிற்கு மூட நம்பிக்கைகளும், பக்திக்கு அடையாளமாக மகனையே அறுத்துக் கறி சமைத்துச் சிவனடியார்க்கு விருந்தளிப்பது போன்ற அபத்தங்களும், எல்லாவிதமான ஒழுக்கக்கேடுகளும் நிறைந்தவையாகத்தான் நம் புராணங்கள் அனைத்தும் உள்ளன. அதை திரு.வி.க.வால் மறுத்துவிட இயலவில்லை. எனினும் அவற்றில் ஏதேனும் அறங்கள் வெளிப்படுமானால் அது பௌத்தத்தின் கொடையாகத்தான் இருக்க முடியும் என்பதை வெளிப்படையாகச் சொல்லிவிடும் அளவிற்கு திரு.வி.க. அறிவு, நேர்மை மிக்கவராக இருந்ததை நாம் புரிந்து கொள்கிறோம்.

பௌத்தம், சமணம் முதலிய சிரமண நெறிகள் எல்லாவற்றைக் காட்டிலும் அறத்தையே முன்னிலைப் படுத்தியது. மற்ற மதங்கள் கவுடளையும், சடங்குகளையும், பக்தியையும் முன்வைத்த இடத்தில் அது அறம் ஒன்றையே முன்வைத்தது. எனவே இந்திய மண்ணில் நல்லொழுக்கங்களையும் அறத்தையும் யார் பேசினாலும் அது இங்கிருந்த சிரமண மதங்களின் தாக்கத்தின் விளைவே என்பதைத் திரு.வி.க. அன்றி வேறு யாரும் சொல்லியிருக்கச் சாத்தியமே இல்லை.

இறுதியாகச் சம காலத்திற்கு ஒப்பீட்டளவில் அருகாக உள்ள தாயுமானவ சுவாமிகளையும், வள்ளல் பெருமானையும் எடுத்துக் கொண்டு அவர்கள் எப்படிப் பௌத்தத்தால் மேன்மையுற்றனர் என்பதைச் சுருக்கமாக விளக்குகிறார் திரு.வி.க. எலோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்றறியேன் பராபரமே எனத் தான் மட்டுமின்றி உலகே இன்புற்றிருக்க வழி என்ன எனச் சிந்தித்த தாயுமானவர் கொல்லாமை குறித்துப் பாடியவற்றையெல்லாம் பட்டியலிடுகிறார்.

"கொலைகளவு கட்காமம் கோபம் விட்டாலன்றோ
மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே"

எனச் சுவாமிகள் கரைந்துருகுவதை எல்லாம் மேற்கோளிட்டு, அவற்றில், "பௌத்த தர்மம் தாண்டவம் புரிவதைக் காண்க" என மெய்சிலிர்ப்பார் திரு.வி.க.

இராமலிங்க அடிகளோ அம்பலத்தே நடிக்கும் பெருந்தகையாளனான சிவனின் பேர் சொல் எனத் தன்னைக் கேட்டபோது, தான் இம்மியும் தயங்காது, "அருகர் புத்தராதியென்பேன்" எனத் தொடங்கி நாராயணன், ஆதிசிவன், பரமன், பிரம்மன், பரப் பிரம்மன் என்றெல்லாம் வரிசையாகச் சொல்லி எல்லாம் இறைமையின் பல்வேறு வடிவங்கள்தான் எனப் பொருள்படப் பதிலளித்தவர். இப்படி வைதீக நெறியில் இறையாகப் போற்றப்படுவோரையும், அருகனையும், புத்தனையும் அவர் ஒரு சேர ஏற்றுக் கொள்வதோடு, எல்லோருக்கும் முதன்மையாக அவர்களை முன் வைத்தவர். அவரைப் பொருத்தமட்டில் எல்லாம் ஓரிறையின் சித்து விளையாட்டுகள்தான். சுவாமிகளின் இப்பாடலை மேற்கோள் காட்டுவதொன்றே அவர் மீது பௌத்தம் விளைவித்த தாக்கத்திற்குச் சான்று என திரு.வி.க. வள்ளல் பெருமான் மீது பௌத்தம் விளைவித்த தாக்கம் குறித்த தன் குறிப்பை முடித்துக் கொள்வார்.

இறுதியாக அவர் எல்லாவற்றையும் தொகுத்துச் சில பத்திகளில் சொல்வதை நாம் இவ்வாறு சுருக்கிச் சொல்லலாம்:

உலக சமரசத்திற்கு பௌத்தத்தின் துணை இன்றியமையாதது. பௌத்த தர்மம் எச்சமயத்தில் இல்லை? அது எல்லாச் சமயங்களிலும் நுழைந்துள்ளது. ஹிந்து தர்மத்தில் பௌத்த தர்மங்கள் பல நுழைந் துள்ளன; சிரார்த்தச் சடங்குகளில் கன்றுக் கால்கள், முள்ளம் பன்றி முதலியவை பயன்படுத்தப்பட்டு வந்தன. அவற்றினிடத்தில் இப்போது வாழைத்தண்டு, பலாக்காய்கள் முதலியன புகுந்துள்ளன. இந்த மாற்றம்

எதனால் விளைந்தது? பௌத்தமே அதைச் சாதித்தது. சைவ, வைணவ ஆலயங்கள் பின்னாளில் எங்கும் முளைத்தன. ஆனால் இவற்றிற்கு முன்னோடியாகவும் பௌத்த சேதியங்களே இருந்தன. வேத காலத்தில் ஏது ஆலய வழிபாடு?

சைவ ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் பிச்சாண்டி சேவை என்பதென்ன? புத்தர் எல்லா வற்றையும் துறந்து, அரச வாழ்வை நீத்து நிர்வாணக் கோலம் கொண்டதைக் காட்டுவதுதானே அது? பிச்சாண்டி சேவைக்கு முந்திய சேவைகள் புத்த பெருமானின் அரச வாழ்வையும், பிச்சாண்டி சேவை அவரது அற வாழ்வையும் காட்டுவதுதானே.

ஆனால் ஹிந்து மதத்தில் நுழைந்த இந்த அறநுட்பங்கள் இப்போது போலியாகிவிட்டன. எனவே மீண்டும் ஹிந்து மதத்திற்கு பௌத்த தர்மம் தேவை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

"பௌத்தம் இந்தியாவினின்றும் துரத்தப்பட்டது எனச் சிலர் சொல்கிறார். அது தவறு. பௌத்தம் ஹிந்து மதத்தில் நுழைந்தேயுள்ளது. ஹிந்து மதத்திலுள்ள குப்பைகளை ஒழிக்கவே பௌத்தம் தோன்றிற்று" என முத்தாய்ப்பாய்ச் சொல்லி முடிப்பார் அறிஞர் கலியாணசுந்தரனார்.

திரு.வி.க. முதலானோர் காந்திய சகாப்தத்தில் வாழ்ந்தவர்கள். காந்தியை வழிகாட்டியாய்க் கொண்டவர் அவர்.

"சமணமும் பௌத்தமும் ஹிந்து மதத்துடன் பிணக்குறுவன அல்ல என்றும், சமணமும் பௌத்தமும் ஹிந்து மதத்தைப் போதிய அளவு சீர்திருத்தின என்றும், பௌத்தம் அகத் தீய்மையை நேர்மை வழியில் வலியுறுத்திற்றென்றும் பௌத்தம் அகத் தூய்மைக்குரிய தென்றும், அது போலிச் செருக்குயர்வுகளைக் களைந்த தென்றும் மகாத்மா காந்தி பன்முறை கூறியிருக்கிறார்" எனத் திரு.வி.க. அளிக்கும் வாக்குமூலத்திலிருந்து நாம் ஒன்றைப் புரிந்து கொள்கிறோம். ஒரு காலத்தில் பௌத்த அறங்களை விளக்கிப் பேசிய கூட்டங்களில் சென்று குழப்பம் விளைவித்த கலியாணசுந்தரத்திற்கு இன்று இந்தப் போதம் யாரால் வந்தது? அவரது சுய தேடல் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறதென்றால் அவர் காலத்தில் இளைஞர்களுக்கு ஆதர்சமாகவும், பின்பற்றத் தக்க அற - அரசியல் வழிகாட்டியாகவும் இருந்த மகாத்மா காந்தி ஒரு முக்கியப் பங்கு வகித்துள்ளார் என்பதுதான் அது.

அந்த உரையின் இறுதியாகக் கலியாணசுந்தரனார் கடவுள் கோட்பாட்டில் பௌத்தத்திற்கும் இந்து மத அணுகல் முறைக்கும் உள்ள முரண் பற்றிப் பேசுகிறார்.

பௌத்த தர்க்கத்தில் ஆத்மன், ப்ரும்மம் முதலியவற்றிற்கு இடமில்லை என்பதை எனது 'புத்தம் சரணம்' நூலில் நான் விரிவாக விளக்கியுள்ளேன். அந்த வகையில் பௌத்தம் வைதீகத்திலிருந்து பெரிதும் வேறுபடுகிறது. எனினும் ஏற்றத்தாழ்வுகள் மிக்க இச்சமூகத்தில் மக்களுக்கு ஒரு கடவுளும் சில சடங்கு களும் தேவைப்படுகின்றன. இதை மிகச் சரியாக விளக்கியவர் கார்ல் மார்க்ஸ் ஒருவர்தான். மதம் மக்களின் அபின் என அவர் கூறியது அத்தனை ஆழமான ஒரு கூற்று. அதே போல சமூக வாழ்வில் பிறப்புச் சடங்குகள், இறப்புச் சடங்குகள், திருமணச் சடங்குகள் என்பனவெல்லாம் பல நேரங்களில் சமூக அங்கீகாரங் களாகவும், சட்ட ஏற்பை வழங்குபவையாகவும் ஆகி விடுகின்றன. இந்தப் பின்னணியில்தான் பௌத்தத்தில் கலந்த பிற மதக் கூறுகளைப் (syncretism) புரிந்து கொள்ள வேண்டும் (பார்க்க : எனது, 'பௌத்தத்தில் கலந்த பிற மதக் கூறுகள்' எனும் கட்டுரை).

திரு.வி.க. இந்த நுணுக்கங்களுக்குள் எல்லாம் போகவில்லை. எனினும் பிரச்சினையை அவர் சரியாகவே விளங்கிக் கொண்டுள்ளதை நாம் புரிந்து கொள்கிறோம். கடவுள் எனும் கருத்தாக்கத்தைத் தன் சொல்லாடலுக்குள் கொண்டுவராத புத்தரே இறுதியில் கடவுளாக்கப்பட்டதை அவர் சுட்டிக் காட்டுகிறார். எனினும், பௌத்தத்தின் தோல்வியாக அதை அவர் சொல்லவில்லை. மாறாக, இந்துமதத்தின் கடவுள் என்கிற கருத்தாக்கத்திற்கும், பௌத்தர்கள் புத்தரைக் கடவுளாகக் கொண்டுள்ளதற்கும் உள்ள வேறுபாட்டைச் சரியாகவே சுட்டிக் காட்டுகிறார். இந்து மதத்தில் கடவுள் என்பவர் படைப்பாதித் தொழில் செய்பவர். "பௌத்தர்களோ கடவுளை அவ்வாறாகக் கொள் வதில்லை. அவர்கள் கடவுள் என்பதை அறமாகக் கொள்கிறார்கள்" என முடிக்கிறார் கல்யாணசுந்தரனார்.

தன் பேச்சின் இறுதியில் இருபத்தைந்தாண்டு களுக்கு முன்னர் ராயப்பேட்டையில் அறிஞர் லட்சுமி நரசு தலைமையில் நடந்த கூட்டத்தை நினைவு கூர்கிறார். இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் அது பற்றிக் கூறியுள்ளேன். தீவிர சைவரான அவர் அன்று அந்தக் கூட்டத்திற்குச் சென்றது. அதைக் கலைத்துக் குழப்ப. இன்று அதே கூட்டத்தில் அவர் பௌத்தத்தை முழுமையாக உள்வாங்கி அறிந்து அழகாக அலசி நம்மை வியக்க வைப்பதற்கான அடிப்படை அவரது திறந்த மனத்தில் இருந்ததை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

பௌத்தம் இந்த மண்ணிலிருந்து அழிந்தது எனச் சொல்வது பொருளற்ற பேச்சு. மாறாக அது இங்கு இன்று நிலவும் எல்லா இந்திய மதங்களிலும் ஊடுருவி அவற்றின் போற்றத்தக்க கூறுகளாக நின்று ஒளிர்கிறது என்கிற அவரது கூற்று இந்திய பௌத்தம் குறித்த புரிதலுக்கு ஒரு மிக முக்கியமான பங்களிப்பு. ●

# நியூ செஞ்சுரியின் ரஷ்ய இலக்கிய நூல்கள்




₹ 50/-

## பல கோடி வருடங்களுக்கு முன்னர்

தொல்லுயிரியலைப் பற்றிய படப் புத்தகம்

**இரினா யாகோவ்லெவா, மொழிபெயர்ப்பாளர் நா.தர்மராஜன்**

சோவியத் அறிஞர் இரினா யாகோவ்லெவா எழுதியுள்ள இந்நூல் உலக உயிர் வரலாறு குறித்து ஆதாரப்பூர்வமாகவும் சுவையாகவும் எளியமுறையில் விளங்கும்படியும் எழுதப்பட்டுள்ளது.

## குழந்தைகளும் குட்டிகளும்

**ஓல்கா பெரோவ்ஸ்கயா,** தமிழில்: **ருக்மணி**

சோவியத் அறிஞர் இரினா யாகோவ்லெவா எழுதியுள்ள இந்நூல் உலக உயிர் வரலாறு குறித்து ஆதாரப்பூர்வமாகவும் சுவையாகவும் எளியமுறையில் விளங்கும்படியும் எழுதப்பட்டுள்ளது.




₹ 180/-




₹ 40/-

## மே தின வரலாறு


**அலெக்ஸாந்தர் டிராச்டென்பர்க்,** தமிழில்: **ரகுநாதன்**

மே தின வரலாறு என்பது மேலை உலகில் உழைக்கும் மக்களிடம் எவ்வாறு விழிப்புணர்வு கரு கொண்டது என்பதை விளக்கும் வரலாறு.

## அரசியல்

**அரிஸ்டாட்டில்,** தமிழில்: **சி.எஸ்.சுப்பிரமணியம்**

அரிஸ்டாட்டிலின் அரசியல் நூலுக்கு ஆங்கிலத்தில் அறுபது மொழியாக்கங்கள் வெளிவந்துள்ளன. அத்தனை ஆங்கில மொழியாக்கங்களையும் ஒப்புவைத்து, பத்தாண்டு கால உழைப்பில் செய்யப்பட்ட மொழியாக்கம் இது.




₹ 285/-




₹ 270/-

## நெஞ்சை ஈர்க்கும் வானவியல்

**வி.கொமரோவ்,** தமிழாக்கம்: **அ.நடராஜன்**

வானவியல் புதிர்கள் இன்னமும் முழுமையாகத் தீர்க்கப்பட்டுவிடாத நிலையில், வானவியல் அறிவுத்துறை நோக்கில் போதுமான அளவிற்கு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் உண்மைகளை விரிவாக விளக்கிச் செல்கிறது இந்நூல்.



# கேரள மலைப்புலயர் தமிழில் சொல்வளம்

ஆ.கார்த்திகேயன்

*1.* கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் மறையூர், காந்தளூர் பஞ்சாயத்துக்களில் மலைப்புலயர் என்னும் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர். அம்மக்கள் ஒருவிதத் தமிழ் வட்டார வழக்கையே பேசுகின்றனர். அவ்வழக்கு தமிழ் பேசும் நமக்கு மிகவும் எளிதாகப் புரிகிறது. நாம் பேசும் தமிழ் வழக்கையும் அவர்கள் எளிதாகப் புரிந்து விடுகின்றனர். இந்நிலையில் மலைப்புலய மொழி என்ற ஆதிவாசி மொழியை நம் தமிழின் கிளைமொழியாகக் கொள்வது தவறில்லை. இம்மக்கள் மலையும் மலை சார்ந்த பகுதிகளில் 'அஞ்சுநாடு பள்ளத்தாக்கு' என்று வரலாற்று ரீதியாக அறியப்படும் நிலப்பரப்பில் வாழ்கின்றனர். புலம் என்ற சொல்லுக்கு 'நிலத்திற்குரியோர்' என்ற பொருள் கொண்டு மலை நிலத்திற்குரியோர் (மண்ணின் மைந்தர்) என்று பெயர்க் காரணம் தருகிறார் சி.மகேஸ்வரன் (2017, ப.30). புலம் என்ற சொல்லுக்கு 'நாடு' என்ற பொருளும் உள்ளது (காண்க: தொல்காப்பியச் சொற்பொருளடைவு, ப, 291). மலை நாட்டிற்குரியவர் மலைப்புலயர்கள் என்றும் கொள்ளலாம். இதுவே சரியாகத் தோன்றுகிறது. மேலே குறிப்பிட்ட மறையூர், காந்தளூர் பஞ்சாயத்து கேரள தேவிகுளம் தாலுக்காவில் தமிழகத்தின் திருப்பூர் மாவட்டத்துக்கு அண்மையில் இருக்கும் பகுதியாகும். உடுமலையிலிருந்து சுமார் 40 கி.மீட்டர் தொலைவில் மறையூர் அமைந்துள்ளது. மறையூர். காந்தளூர் பகுதிகளில் தமிழ் பேசும் வெள்ளாளர், நாடார், செட்டியார் போன்ற மக்கள் வசிக்கின்றனர். முதுவான் என்ற ஆதிவாசி மொழியைப் பேசும் மக்கள் வாழ்கின்றனர். மலையாளம் பேசும் கேரள மக்கள் வசிக்கின்றனர். மலையாள மொழி நாட்டுபாஷை என்றும், தமிழ்மொழி ஊர்பாஷை அல்லது கிராமத்துபாஷை என்றும் முதுவான், மலைப் புலயர் மொழி 'குடிபாஷை' என்றும் வெகுவாக அறியப்படுகின்றன. இந்தச் சூழலில் மலைப்புலயர் பேசும் மொழி மலையாள மொழியோடும் தமிழ்நாட்டுத் தமிழ் மொழியோடும் தொடர்ந்து உறவு கொண்டு வருகின்றது. இதனோடு மறையூர், மூணார் பகுதிகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளோடும் மலைப் புலயர்கள் தொடர்பு கொள்கின்றனர். இதன் காரணமாக மலைப்புலயர்களின் மொழி மிகவும் வேகமாக மாறி வருகின்றது. இளைஞர்கள் மலையாள மொழிக் கற்பதனையே பெரிதும் விரும்புகின்றனர். வேலை வாய்ப்பிற்கான மொழி மலையாளமே என்று கருதுகின்றனர். இதனால் தங்கள் மொழியின் மீது எதிர்மறையான கண்ணோட்டம் கொண்டுள்ளனர். இவர்கள் மலையாள மொழிக்குத் தாவிவிடுகின்ற (shift) சூழல் விரைவில் உருவாக வாய்ப்புள்ளது. இந்நிலையில் மலைப்புலயர் மொழியை ஆவணப்படுத்திப் பாதுகாப்பது தலையாய கடமையாகும்.

இக்கட்டுரை மலைப்புலயர்களின் தமிழ் மொழியின் சொல்வளம் குறித்து விளக்க முற்படுகிறது.

## 2. வீட்டின் அமைப்பை உணர்த்தும் சொற்கள்

மலைப்புலயர்கள் முன்காலத்தில் கரும்பு சோலை, தர்ப்பைப் புல் ஆகியவற்றால் ஆன வீடுகளில் வசித்தனர். தற்காலத்தில் அரசு அனைவருக்கும் கான்க்ரீட் வீடுகள் கட்டித் தந்துள்ளது. ஒருசில ஓட்டு

வீடுகளும் கட்டி அதில் வாழ்கின்றனர். வீட்டின் பல்வேறு அமைப்புகளை உணர்த்தும் சொற்கள் கீழே தரப்படுகின்றன.

**ஒதெ காலு / முட்டு - தூண்**
**மொகளு - வீட்டின் நடுப்பகுதியிலுள்ள தூலம்**
**எரசலு - வீட்டின் பக்கத்திலுள்ள இரண்டு தூலங்கள்**
**நெலவு - (வீட்டின்) நிலை வாசல்கால்**
**தொறப்பு - சாவி**
**திண்ணெ - தரையை (வீடு) திண்ணை என்கின்றனர்**
**மொகளு செவுரு - நடு சுவர்**
**எரச செவுரு - பக்கவாட்டிலுள்ள சுவர்**
**திம்மம் பண்ணு - மேடு அமைத்தல்**
**இஷ்டி கல்லு - செங்கல்**
**மெட்லு - ஜல்லிகள்**
**முளுகல்லு - முழு செங்கல்**
**துண்டு கல்லு - உடைத்த செங்கல்**
**கதவுலு - கதவு**
**ஜன்னலு - ஜன்னல்**

**3. வீட்டு உபயோகப் பொருள்கள்**

வீட்டில் பயன்படுத்தும் கருவிகளுக்கும், பாத்திரம் பண்டங்களுக்கும் சில சொற்கள் காணப்படுகின்றன. அகப்பையை 'கண்ணாப்பெ' என்றும் கரண்டியைக் கரெண்டி, தவி ஆகிய இரு சொற்களாலும் குறிக்கின்றனர். பானெ, சட்டி, அண்டாவு, பித்தளெ அண்டாவு போன்ற சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. காய்கறிகள் நறுக்க பிச்சா கத்தி (சின்னகத்தி) பயன்படுகின்றது. உணவு சாப்பிடும் தட்டை 'வட்டுலு' என்றும் பாத்திரங்களை மூடுகிற தட்டைத் 'தட்டம்' என்று குறிக்கின்றனர். அடுப்பை ஊதுகின்ற குழலை 'தீக்கொலலு' என்றும், நெருப்பைத் 'தீக்கனலு' என்று அழைக்கின்றனர். நாம் பயன்படுத்தும் வாணலியை 'வடசட்டி' என்று சொல்கின்றனர். தட்டுவம் என்பது தோசையைத் திருப்பிப்போடப் பயன்படும் கருவி. ஆட்டங்ககல்லு, இடிகல்லு (உரல்) திருவெ கல்லு ஆகியவற்றை அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர். ஆனாலும் இரு வேளையும் கஞ்சி வைத்தே ஏதாகிலும் கீரையைப் பாறையில் வைத்து அரைத்து அவற்றை உண்கின்றனர். மலெயங் கௌங்கு என்ற ஒரு வகையான காட்டுக் கிழங்கே பஞ்ச காலத்தில் முக்கியமான உணவாக இருந்துள்ளது. அதனைத் தோண்டி எடுக்க கம்பி கோலு என்ற கருவியைப் பயன்படுத்தினர். நாயின் துணையோடு வேட்டையாடச் சென்றால் வேட்டையாடிய இறைச்சியைச் சரிசமமாகப் பகிர்ந்து கொள்வார்களாம்.

உறுமி, கொலலு, தாய்மேளம், மெர்ச்சி போன்றவை இசைக் கருவிகளின் பெயர்களாகும். நோம்பி சமயத்தில் வெகுநேரம் ஆட்டுப்பாட்டு நிகழ்த்துவர்.

**4. தேனும் காளான் வகைகளும்**

பொதுவாக ஆதிவாசிகள் முற்காலத்தில் உணவு சேகரிப்பவர்களாகவே இருந்திருப்பர். அவர்களுக்கு விவசாயம் செய்து உணவு உற்பத்தி செய்யத் தெரியாது. வனத்தில் தாமாகக் கிடைக்கும் கிழங்கு வகைகளையும், பல்வேறு கீரை வகைகளையும் உண்பர். தேன் அழித்து தேனைப் பயன்படுத்துதல், பல்வேறு காளான்களைக் கண்டறிந்து அவற்றை சுட்டும், அவித்தும் உண்பர். ஆகவே அவர்களின் மொழியில் பல்வேறு காளான்களைக் குறிக்கும் சொற்களும், தேன் வகைகளைக் குறிக்கும் சொற்களும் காணப்படுகின்றன. காளான்களை மண்ணிலிருந்து கிடைப்பவை, மரத்திலிருந்து கிடைப்பவை என்று பாகுபடுத்திக் கூறுகின்றனர். மரத்திலிருந்து கிடைக்கும் காளான்கள்

**நவ்வா கேளான் / கேளன் / மாங்க கேளான் / காட்டே கேளான் / ஈச்சி கேளன் / அத்தி கேளன் / மூங்கெ கேளன் / நரம்பு கேளன் / கொரங்கு காது கேளன்**

மண்ணிலிருந்து கிடைப்பவை

**அவுலு கேளன் / தெக்கென கேளன் / புத்துக் கேளன் / தேன், /கொம்பந்தேனு**

மலையில் வாழும் எல்லோருமே தேன் வகைகளையும், தேனின் பயன்பாட்டையும் அறிந்து வைத்திருப்பர். இயற்கையாகவே தேனீக்களின் நடமாட்டத்தை வைத்து தேனிருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விடுவர். தேனீயைத் தேனீச்ச என்றும் தேன் கூட்டை குடி என்றும் கூறுகின்றனர் மலைப்புலயர்கள். தேன் அழித்தல் என்பதைத் தேன் அறுக்குது என்று சொல்வர். தேன்குடியில் ஈச்சைகள் அசைதல் 'ஈச்செ அலுங்கிடுச்சு' என்றும் 'ஈசியெ முடுக்கனா தேனெ கண்டுபிடிச்சிரலாம்' என்று கூறுகின்றனர். தேன்குடி பல்வேறு இடங்களில் அமையலாம், மரப்பொந்து, கல்பொந்துகளிலும் (முறையே மரவாய், கல்வாய்) தேனீக்கள் கூடு கட்டலாம். மரக் கிளைகளிலும் குச்சிகளிலும் தேன் கூடுகள் கட்டப்படலாம். அந்த அடிப்படையில் தேன்களின் பெயர்கள் அமைவதனைக் காணலாம்.

**கொசுவந்தேனு / நாட்டுத்தேனு / கொம்பந்தேனு /போரு கொம்பந்தேனு / மொல கொம்பந்தேனு / குச்சிக் கொம் பந்தேனு / தொளெத் தேனு**

(பட்டியல் நிறைவுபெறவில்லை)

கொசுவந்தேனு ஒருவகையான கொசுக்கள் போன்ற தேனீக்களால் சேகரிக்கப்படுவது. இதுவே பெரிய மூக்கங் கொசுவந்தேனு, சீலமூக்கன் (கொசுவந்) தேனு என்று இரு வகையாக உள்ளன. சீலமூக்கன் தேனு மிகவும் ருஜியாக இருக்கும் என்று தெரிவித்தனர். போரு கொம்பன் தேனு மரவாய், கல்லுவாய் ஆகிய இடங்களில் உண்டாகும். பெருந்தேனு என்ற வகையும் (மலந்தேனு) பிரசித்தி பெற்ற தேன் வகையாகும். சங்க இலக்கியங்களில் தேன்களைக் குறித்த பல செய்திகளும் வருகின்றன. நிலத்தினும் பெரிதே என்ற குறுந்தொகைப் பாடலில் வரும் 'பெருந்தேன் இழைக்கும்

நாடனொடு நட்பே' என்ற வரியில் வரும் பெருந்தேன் இன்றும் வழக்கில் உள்ளது.

### 5. யானை எழுப்பும் ஒலிகள்

மலைப்புலயர்கள் யானைகளோடும் பிற காட்டில் வாழும்விலங்குகளோடும் வாழ்கின்றனர். விலங்குகளால் எப்பொழுதும் அவர்களது உயிர்க்கும் உடைமைக்கும் சேதமுண்டு. அவர்கள் பயிரிடும் விவசாய நிலங்களை யானைகள் வந்து மிதித்து துவம்சம் செய்து விடுவதுண்டு. அதனால் பழங்காலத்தில் அவர்கள் யானைக் காவலுக்குச் செல்வதுண்டு. யானையை 'ஆனெ' என்றுதான் கூறு கின்றனர். யானையின் மண் புதைந்த பாதச் சுவட்டை 'காலு தாரெ', 'ஆனெ தாரெ' என்று கூறுகின்றனர். யானையின் தந்தத்தை 'கொம்பு' என்றும், தும்பிக் கையைத் 'துமிசங்கெயி' என்றும் கூறுகின்றனர். யானைகள் காதுகளை அசைத்தபடி நின்றால் இயல்பாக நிற்கிறது என்று பொருள். காதுகளை அசைக்காமல் பார்த்தால் சற்று சினமாக இருக்கிறது என்று பொருள். யானை ஓடுவதற்கு முன் உடலைச் சுருக்குமாம். அப்போது தாக்க முற்படலாம். ஆனெதாரெயெக் கொண்டும், ஆனெயின் மணத்தைக் கொண்டும் யானையின் இயக்கத்தையும் இருப்பிடத்தையும் அறிகின்றனர். அதனால் வரும் ஆபத்தைத் தவிர்க் கின்றனர். 'ஆனெக்குப் பயந்தால் காட்டில் வாழவே முடியாது' என்று மக்கள் சொல்வதைக் கவனிக்க முடிந்தது. 'அது வெரட்டவெல்லாம் செய்யாது அதுபாட்டுலெ நிந்தா (நின்றால்) நாம பாட்டுலெ போயிருவோம். ஏதோ கெட்ட போக்கிரி நிந்தா அது வெரட்டச் செய்யும்' என்று பொங்கம்பள்ளியைச் சேர்ந்த தங்கம்மா என்ற தகவலாளி கூறினார்.

யானை ஐந்து விதமாக ஒலியெழுப்பும் என்று ஒரு தகவலாளி கூறினார். கதறுதல் என்பது எல்லா விலங்கு களும் எழுப்பும் ஒலியைக் குறிக்கும் பொதுவான சொல்.

**ஆனெ கதருது / கேளெ கதருது / மயிலு கதருது**

என்று கூறுவர். கொளெந்தெ கதருது என்றும் கூறுவார்கள். சூக்கெ விடுதல் என்ற இன்னொரு சொல் விலங்குகள் விசிலடிப்பது போன்று எழுப்பும் ஒலியைக் குறிக்கும் சொல்லாகும். கோழி கூவுது என்பதைக் கோழி கூப்பிடுது என்று கூறுகின்றனர்.

ஆனை எழுப்பும் பல்வேறு ஒலிகளைக் குறிக்கச் சில சொற்கள் காணப்படுகின்றன.

**ஆனெ ஊதுது / ஆனெ மொரண்டுது / ஆனெ கொதக்குது / ஆனெ கொளருது**

முரலுதல், குளறுதல், கொதக்குக் கொதக்கெனல் போன்ற சொற்கள் தற்காலத் தமிழிலும் பழந்தமிழிலும் காணப்படுகின்றனவன்றோ?

### 6. பச்செ புள்ளகாரி

மலெப்புலயர் மொழியில் நட்சத்திரங்களைக் குறிக்க 'வெள்ளி' என்ற சொல் பொதுவாகப் பயன் படுத்தப்படுகின்றது. வளர்பிறை, தேய்பிறை ஆகிய வற்றைக் குறிக்க என்ன சொற்கள் பயன்படுகின்றன என்பதைக் காண முற்பட்டபோது பச்செ புள்ளெகாரி என்ற சொல்லை வைத்து மூன்றாம் பிறையைக் குறிப்பது தெரிய வந்தது. மூன்றாம் பிறைக்கு ஏன் அப்பெயரை வைத்தனர் என்று கேட்கும்போது பிள்ளை பெற்ற பெண் வேலை செய்யும்போது பிறர் பார்க்காதவாறு திடீரென்று குழந்தைக்குப் பால் கொடுக்க மறைந்து விடுவாளாம். அதைப் போல பிறை நிலவும் சிறிது நேரமே இருந்துவிட்டு மறைந்துவிடுவதால் அதற்குப் பச்செபுள்ளெகாரி என்ற சொல்லைப் பயன்படுத்து கின்றார்களாம். குழவி மதியம், குழவித் திங்கள் போன்ற சொல்லாட்சிகள் நம் இலக்கியங்களில் காணப் படுகின்றன. இலக்கிய ஆசிரியர்கள் பிறைநிலவைக் குழவியாகக் காண்கின்றனர். மலைப் புலயர்கள் தாயாகக் காண்கின்றனர்.

காலை நேரத்தில் பொழுது விடிவதற்கு முன்பாக நான்கு நட்சத்திரங்கள் பக்கம் பக்கமாக நிற்கும். அவை நான்கு கட்டில் கால்களைப் போல அமைந்து காணப்படும். பொழுது விடியும்போது அந்நான்கு நட்சத்திரங்களில் ஒன்று கீழ் நோக்கி இறங்கி வரும். அதனைக் 'கட்டுலு காலு சரிஞ்சிடுச்சு' என்று கூறுகின்றனர். 'கட்டுலு காலு சரிஞ்சிரிச்சு' என்றால் பொழுது விடிந்துவிட்டது என்று பொருள். 'வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று' என்று திருப்பாவையில் வரும் வரியை இங்கு ஒப்பிட்டுக் காணலாம்.

சித்திரையில் வரும் மழையைக் 'சித்ரகாரி' என்றும் 'வெள்ளமழை' என்றும் கூறுகின்றனர். கருமேகங்கள் இல்லாமல் வெண்மையான மேகங்கள் எப்பொழுதாவது மழை தருவதால் வெள்ளமழை என்று கூறப்படுகிறது. சூன் மாதத்தில் வரும் மழை 'கோடெமழெ' என்று அழைக்கப்படுகிறது. காற்றும் மழையும் சேர்ந்து விடாது பெய்யும் மழையை கோடெ மழை என்பர். புரட்டாசி வரை இம்மழை பெய்யும். தென்மேற்குப் பருவ மழையைக் கோடை மழை என்றும். வடகிழக்குப் பருவமழையை 'அடெ மழை' என்றும் கூறுவர். அப்பசி அடெ மழை. இதனைக் 'காவக்காரி' என்றும் கூறுவர். இக்காலத்தில் உணவுப் பொருள்களைப் பாதுகாத்தும் சிக்கனமாகவும் பயன்படுத்துவது அவர்களுக்குப் பழக்கம்.

### 7. பெருவிரல் – பெருமெ தாத்தா

உடல் உறுப்புக்கள் அடிப்படையான சொற்கள். அவை இரு கிளை மொழிகளில் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சிறுசிறு உச்சரிப்பு வேறுபாட்டுடனோ சொற்கள் வேறுபாட்டுடனோ காணப்படும். மலைப்

புலயர் பேசும் தமிழும் இதற்கு விதிவிலக்கு அன்று. கையிலுள்ள விரல்களுக்குப் பெயர்களென்ன என்று கேட்டபோது ஒரு தகவலாளி பின்வருமாறு கூறினார்.

**பெரும தாத்தா - பெருவிரல்**
**ஆளு காட்டி - ஆள்காட்டி விரல்**
**நடுசோலெ - நடு விரல்**
**வீரி நடுங்கி - மோதிர விரல**
**சுண்டலி வீரி - சுண்டு விரல்**

பெருமைக்குத் தான் உட்கார்ந்திருக்கிறார் என்று பெருவிரலைக் காண்பிக்கிறார். அதேபோல உள்ளங் கையை 'மிங்கையி' என்றும் புறங்கையை 'பெறங்கையி' என்றும் கூறுகிறார்கள். கால் விரல்களையும் கை விரல் களைப் போலவே பெயரிட்டு வழங்குகின்றனர். காதினைக் கொப்புகாது, அல்லக்காது, புகிடி என்று மூன்று பிரிவாகப் பகுத்து கூறுகின்றனர். 'பொய்யங்காது' என்றும் காதிலுள்ள சிறு பகுதியைக் கூறுகின்றனர். கருவிழியை கருப்பு லாலி என்றும் வெள்ளை விழியை 'வெள்ளெ லாலி' என்று அழைக்கின்றனர். 'லாலி' என்ற சொல் தாலாட்டுப் பாடலில் வருவதைக் கவனிக்கலாம்.

### 8. நச்சு பிடிக்காதீங்க

குழந்தை உறங்கிக் கொண்டிருக்கும்போது யாராவது சப்தம் போட்டாலோ, பேசினாலோ அமைதியாக இருக்க வலியுறுத்துவோம். சத்தம் போடாதே என்ற சொல்லுவோம். குழந்தை தூங்குகிறது என்று சொல்லுவோம். மலைப்புலயர் பாஷையில் நச்சு பிடிக்காதீங்க என்று கூறுகிறார்கள். கொளந்தெ தூங்குது நச்சு புடிக்காதடா என்று கூறுவர்.

### 9. சாட்டு கட்டுதல்

சாட்டு என்ற சொல் தமிழில் உள்ளது. மற்ற வருக்கு மாற்றி விடுதல் என்பது அச்சொல்லின் பொருள். ஒருவர் பெற்ற கடனை மற்றவருக்குச் சாட்டி விடுதல் என்றால் கடனை மற்றவருக்கு மாற்றிவிடுதல் என்று பொருள். சாட்டில்லாமற் சாவில்லை என்ற தொடர் வின்சுலோ அகராதியில் (ப. 429) காணப்படுகின்றது. இங்கே சாட்டு என்பதற்குக் காரணம் என்று பொருள். காரணமில்லாமல் சாவில்லை என்பது அதன் பொருள். அவன் கோவிலைச் சாட்டி வயிறு வளர்க்கிறான் என்றால் கோயிலை வைத்து உயிர் வாழ்கிறான் பிழைக்கிறான் என்று பொருள் (வின்சுலோ, ப.429). இலங்கைத் தமிழில் சாட்டு என்ற சொல் சாக்கு போக்கு என்ற பொருளில் இன்றும் பயன்படுத்தப்படுகிறது (காண்க கிரியா அகராதி, ப. 559). 'திருவிழாவைச் சாட்டாக வைத்துச் சேர்த்த பணத்தை அவர் தன் வீட்டுக்கே கொண்டு சென்றுவிட்டார்.'

ஆனால் மலைப்புலயர் தமிழில் 'சாட்டுகட்டுதல்' என்ற சொல் பெருவழக்காகக் காணப்படுகிறது. ஆண்டு தோறும் பங்குனி, சித்திரை மாதங்களில் ஒவ்வொரு புலயர் குடியிலும் நோன்பு (நோம்பி) கொண்டாடப் படும். நோன்பு தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாக குடியில் சாட்டு கட்டப்படும். ஊருக்கு எல்லையில் மாவிலை, வேப்பிலைத் தோரணங்கள் கட்டி சாட்டு கட்டியிருப்பதைக் குறிப்பர். சாட்டு கட்டிய பிறகு குடியிலுள்ளோர் தூய்மையைப் பேண வேண்டும். மாதவிடாய் வந்த பெண்டீர் ஊருக்கு வெளியே சென்றுவிட வேண்டும். இரவு நேரத்தில் வீட்டுக்கு வந்துவிடலாம். சாட்டு கட்டுதலின் தொடக்கத்தை சாட்டு குத்துது என்றும் இறுதி நிகழ்ச்சியை சாட்டு புடுங்குது என்றும் கூறுகின்றனர்.

### 10. சொல்லுருவாக்க முறை

காட்டில் ஏராளமாக செடி கொடிகளும் மரங்களும் காணப்படுகின்றன. ஏராளமான வன விலங்குகளும் பறவைகளும் பாம்பு வகைகளும் காணப்படுகின்றன. இவற்றைக் குறிக்க அவர்கள் சொற்கள் உருவாக்கும் முறை ஆழமான மொழியியல், மொழி ஆராய்ச்சிக்கும் உரியது. தும்பைச் செடியில் இரண்டு மூன்று வகைகள் உள்ளன. இவற்றுள் பெரிய வகை தும்பையை ஆனெத் தும்பை என்று பெயரிட்டு அழைக்கின்றனர். அணில் களில் இருவகை ஒன்று சின்னது மற்றொன்று பெரியது. முதல் வகையைச் சிட்டணலு என்றும் இரண்டாவது வகையைப் பேரணலு என்று பெயரிட்டு அழைப்பர். பேரணலை மலெஅணலு என்றும் சொல்வர். ஆனை, மலை போன்ற சொற்களைப் பெரிய வகையை குறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

முயல் காது போல இலையுள்ள கீரை வகையை மொச காதங்கீரை என்று அழைக்கின்றனர். இன்னொரு கீரைக்குப் பெயர் கோளி கொடலம் கீரை என்பதாகும். ஒரு பூவுக்குப் பெயர் எலிகாதம்பூ. ஒரு செடியின் பெயர் அம்மா பத்னி செடி. இப்படி விலங்குகளின் பெயர் களையும் மனிதர்களைக் குறிக்கும் சில சொற்களையும் புதிய சொற்கள் உருவாக்கப்படுவது மிகவும் சுவாரஸ்ய மாக உள்ளது.

### காடு என்ற சொல்லாக்க பின்னொட்டு

காடு என்ற சொல் வனம் என்ற பொருளைத் தரும் சொல். -காடு என்றொரு பின்னொட்டும் தமிழில் உண்டு. நோ/நோக்காடு, வே-வேக்காடு போன்ற சொற் களில் இதனைக் காணலாம். நோ (நோதல்), வே (வேதல்) போன்ற வினைச் சொற்களைப் பெயர்ச் சொற் களாக்க -காடு என்ற பின்னொட்டு பயன்படுகின்றது. பெயர்ச் சொற்கள் சிலவற்றோடும் இப்பின்னொட்டு சேர்ந்து வரும். பூ-பூக்காடு என்ற எடுத்துக்காட்டில் இதனைக் காணலாம். பூக்காடு என்பதற்கு ஏராளமான பூக்கள் என்று பொருள் கொள்ளலாம். மலைப்புலயர் மொழியில் -காடு என்ற பின்னொட்டு பல சொற் களோடு வருகின்றது.

**தாரு - மரக்கிளை**
**தாருகாடு - ஏராளமான கிளைகள்**
**கொத்து - (மாங்) கொத்து**
**கொத்துக்காடு - ஏராளமான கொத்துகள்**
**கசம் - ஆற்றின் ஆழமான பகுதி**
**கசம்காடு - ஏராளமான கசங்கள்**
**கல்லு - கல்**
**கல்லங்காடு - கற்களும் பாறைகளும் நிறைந்த பகுதி**
**கடை - பொருள்கள் விற்கும் இடம்**
**கடெ காடு - ஏராளமான கடைகள்**
**மலெ - மலை**
**மலங்காடு - ஏராளமான மலைகள்**
**சப்பு - புதர்**
**சப்புக்காடு - ஏராளமான புதர்கள்**

தாரு என்ற சொல் நம் வழக்கில் வாழைத்தார் என்று பொருள்படுகின்றது. மலைப்புலயர் மொழியில் கிளைகள் என்ற பொதுச்சொல்லாக வேறு பொருளில் வருகின்றது. மலை + அம் + காடு என்று சாரியை ஏற்று மலங்காடு என்று வருவதனையும் கவனிக்கலாம்.

## லு என்ற ஆக்கம்

நம்முடைய கிளைமொழியில் காணப்படும் சில சொற்களோடு -லு என் ஆக்கவிகுதி சேர்த்து வழங்கும் நிலை மலைப்புலயர் கிளைமொழியில் காணமுடிகிறது.

**கதவு - கதவுலு / அடுப்பு - அடுப்புலு / எருக்கு - எருக்கலு (எருக்கலஞ்செடி)**

கதவு என்ற சொல்லோடு -லு விகுதி சேர்த்து வழங்குவது நமக்குப் புதுமையாக இருக்கிறது. ஜன்னல் > ஜன்னலு, மூங்கில் > மூங்கிலு என்று பேச்சுத் தமிழில் மாறுவதைப் போலவே இதனைக் கொள்ளலாமா?

**படுதா - படுதாவு / அண்டா - அண்டாவு**

## 11. பழந்தமிழ்ச் சொற்கள்

பழந்தமிழில் வழங்கிய சில சொற்கள் இன்றும் மலைப்புலயர் பேச்சில் காணப்படுகின்றன. அவை நம்முடைய வழக்கில் தற்போது பயன்படுத்தப்படுவதில்லை அவை நமக்கு அருகிய வழக்காகிவிட்டன. எடுத்துக்காட்டாகச் சில சொற்களைக் குறிப்பிடலாம். 'வெள்ளி' என்ற சொல் நட்சத்திரங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இது பொதுவான சொல். தற்காலத் தமிழில் வெள்ளி என்பது உலோகத்தையும் காலையில் உதிக்கும் ஒரு நட்சத்திரத்தையும் மட்டும் குறிக்கின்றது. 'வெருகு' என்ற சொல் காட்டுப் பூனையைக் குறிக்கும். இச்சொல் தொல்காப்பியத்தில் பயின்று வந்துள்ளது (காண்க: தொல்காப்பியச் சொற்பொருளடைவு, ப. 374). மலைப்புலயர் தமிழில் 'வெருகு' பயன்படுத்தப்படுகின்றது. வெருகு வகையில் பொட்டுவெருகு, கரும்வெருகு, வெள்ளவெருகு என்று மூன்று வகைகள் உள்ளன என்று தகவலாளி தெரிவித்தார். 'மெய்' என்ற சொல்லுக்குப் பழந்தமிழில் வடிவம், உடல் போன்ற பொருள்கள் உள்ளன (காண்க: தொல்காப்பிய சொற்பொருளடைவு, ப. 337). மலைப்புலயர் மொழியில் மெய் என்றால் உடல், உடம்பு என்ற பொருள் தரும்.

மலைப்புலயர் மொழியில் 'கசம்' என்றொரு சொல் உள்ளது. ஆற்றில் மிகவும் ஆழமான இடத்தை கசம் என்று கூறுவர். கசத்தில் குளித்து விளையாடுவர். கசத்தில் மீன் பிடிப்பர். சிறுவர்கள் சில வேளைகளில் கசத்தில் இறங்கி குளிக்கும்போது மூழ்கி இறந்து விடுவதும் உண்டு. இச்சொல் பழந்தமிழில் கயம் என்று வழங்கியுள்ளது. 'கயமூழ்கு மகளிர் கண்ணின்மாணும்' என்பது சங்கப் பாடல் வரியாகும். அளை என்ற சொல் சங்கத் தமிழில் குகையைக் குறிக்கும். புலிசேர்ந்து போகிய கல்லளை போல என்பது புறநானூற்றுப் பாடல் வரி. அளை என்ற சொல் மலைப்புலயர் மொழியிலும் குகையைக் குறிக்கும். அளைத்தேன், அளைவாய், இருட்டளை போன்ற சொற்கள் புலயர் மொழியில் காணப்படுகின்றன. இருட்டளைக்குடி என்ற பெரியரில் முதுவான்குடி ஒன்று உள்ளது. அளைத்தேன் என்பதும் ஒரு வகையான தேன். அதுபோலவே பெருந்தேன் என்ற சொல்லும் பழந்தமிழில் உள்ளது. பொழுது என்ற சொல் சூரியனைக் குறிக்கும். பீலி என்ற சொல் பறவைகளின் இறகினைக் குறிக்கிறது. இவையாவும் பழந்தமிழ்ச் சொற்களாகும். புலம் என்ற சொல் நாடு என்ற பொருளில் தொல்காப்பியத்தில் (காண்க: தொல் காப்பியச் சொற் பொருளடைவு, ப.291) வந்துள்ளது. மலைப்புலயர் என்ற சொல்லே மலைநாட்டில் வாழ்வோர் என்ற பொருளைக் குறிக்கலாம். மலைப்புலயர் பேசும் மொழியை ஆழமாக ஆராய்ந்தால் பழந்தமிழ்ச் சொற்களையும் கண்டறியலாம். தமிழ்நாட்டில் வாழும் மலைப்புலயர்களைக் குறித்து ஆய்வு செய்த சி.மகேஸ்வரன் (2017, ப.42), புலயன் இனக்குழுவினரின் பேச்சுத் தமிழில் இனங்காணலாகும் சங்கத் தமிழ் சொல்லாட்சிகள் இவர்தம் பேச்சு மொழியானது தமிழின் சிறப்பானதொரு கிளைமொழியாக அடையாளப் படுத்துகின்றது என்று கூறுகிறார்.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இங்கு ஒரு சில சொற்களே விவரிக்கப்பட்டன. மலைப்புலயர் மொழியில் காணலாகும் எல்லாச் சொற்களையும் கண்டறிந்து சேர்த்தால் தமிழுக்குப் புதிய வரவாக வளம் சேர்க்கும்.

## துணை நூல்கள்


*மகேஸ்வரன்,சி. சங்க கால வாழ்வியலைக் காட்டும் புலயன் இனக்குழு வரைவியல், சமூக விஞ்ஞானம் காலாண்டிதழ் (பக். 30-44), சென்னை. (2017).*

*பாலசுப்பிரமணியம்,க. தொல்காப்பியச் சொற்பொருளடைவு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.*


*க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. சென்னை (மறுபதிப்பு 2009)*

*வின்ஸ்லோவின் தமிழ்-ஆங்கில அகராதி. ஏசியன் எஜுகேசனல் சர்வீஸ், புது டெல்லி. (மறுபதிப்பு 1979).*

# அலெக்ஸி டால்ஸ்டாயின் சித்திர நடை எழுத்து

**எஸ்.ஆர்.கே.**

**ப**ண்டைக் காலத்திலிருந்தே மனித குலம் தனது அறிவாற்றலையும் மனோபாவனையையும் புலப் படுத்தும் வகையில் பல இலக்கியங்களைப் படைத் திருக்கிறது. ஆயினும் தனக்கே உரிய விதிகளுடன் திகழும் நாவல் என்ற இலக்கியத்துறை தொழிற்புரட்சிச் சகாப்தத்தின் நன்கொடையேயாகும். அதை அச்சு யந்திரத்தின் சிருஷ்டி என்றும் ஒரு வகையில் குறிப் பிடலாம்.




ஒன்றோடொன்று உயிர்த்தொடர்பு கொண்டிராத பஞ்ச தந்திரக் கதைகள் முதலிய கதைக்கோவைகளைப் போலவல்லாமல், நாவல் உறுப்பழகும் ஒருமை நயமுமாய்ப் பெற்றுப் பொலியும் நெடுங்கதையாக உள்ளது. வாழ்வின் ஏதோ ஓர் அம்சத்தைத் தன் கற்பனை வளத்தால் புதிதாகச் செப்பம் செய்து தரும் சிறுகதை ஆசிரியனைப்போலவல்லாமல், அகலக்கால் விரித்து, வாழ்வின் பல்வகை அம்சங்கள் வெவ்வேறு கோணங் களிலிருந்து மனோபாவனைச் சிறப்புடன் நோக்கும் உரிமை நாவலாசிரியனுக்கு உண்டு என்பது உண்மை. ஆனால் அவன் எத்துணைதான் சஞ்சாரம் செய்த போதிலும், நாவலின் கட்டுக்கோப்பில் ஓர் உள் தொடர்பு இருப்பது அவசியம்; நாவலின் கதை நிகழ்ச்சியில் ஒருமை நயம் மிளிர்வது இன்றியமையாதது. இந்த வகையில் நாவலைக் காப்பியத்துடன் ஒப்பிடலாம். காப்பியத்தில் கிளைக் கதைகள் இருப்பினும் அவை காவியக் கதைக்கு இன்றியமையாதனவாகிக் கதை யோட்டத்தில் ஒன்றிவிடுகின்றன வல்லவா?

நாவல் இலக்கியத்தில் ஒருதுறைதான். மேலும் கவிதை, நாடகம், திரைப்படம், ஓவியம், சங்கீதம் ஆகியவற்றால், நாவலால் இயலாத அளவுக்கு நுட்ப மாகவும் திட்பமாகவும் வாழ்வின் ஒரோர் அம்சங்களை உணர்த்த முடியுமென்பதும் உண்மையே. ஆனால் ஆங்கில இலக்கிய ஆய்வுரையாளரான ரால்ப் பாக்ஸ்

கூறுவதைப்போல், தனி மனிதனின் முழு வாழ்வை வெளியிடுவதில் வேறு எந்தக் கலைத்துறையாலும் நாவலை விஞ்ச முடியாது. ஒளிவு மறைவாயுள்ள அக உலக ஓட்டங்களைத் துல்லியமாகப் புலப்படுத்தும் தனித் திறன் நாவலுக்கே உரியது என்று புகழ்பெற்ற ஆங்கிலேய நாவலாசிரியர் ஈ.எம்.பார்ஸ்டர் கூறுவது முற்றிலும் உண்மையே.

நாவல்களில் பல ரகங்கள் உண்டு. படிக்கும்போது தோன்றி மறையும் உணர்ச்சியைத் தவிர வேறு எத்தகைய அனுபவத்தையும் அளிப்பதற்கு இயலாத 'கிளுகிளுப்பு' நாவல்களை நாம் இரண்டாம்முறை படிக்கமாட்டோம். மறு புறத்தில், ஜனங்களின் ஆசாபாசங்களிலும் ஆர்வ அபிலாஷைகளிலும் நலன்களிலும் வாழ்விலும் போராட்டத்திலும் ஒன்றி நிற்கும் எழுத்தாளன் தன் படைப்பில் யதார்த்த உண்மையை முழுமையாகவும் நுட்பமாகவும் வெளியிடும் வல்லவன் ஆகிறான். அத்தகைய எழுத்தாளர்களில் சிறந்தவர்களது இலக்கி யங்கள், சாகாவரம் பெறுகின்றன. ஐம்புலன்களும் அறிதிறனும் ஆத்மாவும் புதிய அனுபவம் பெறுவதற்கு அவை உதவுகின்றன. அவற்றால் ஏற்படும் அனுபவத்தை மறத்தற்கியலாது. அறிவைப் பெருக்கி, மனோ பாவனையை வளம்பெறச்செய்து, இதயத்தைத் தூய்மை அடையச்செய்யும் அத்தகைய நாவல்கள் காப்பிய இயல்பினைப் பெறுகின்றன என்னலாம்.

ஹோமரின் இலியாது, வான்மீகி முனிவரின் இராமாயணம் முதலிய வளர்ச்சி-இயல் காப்பியங்களைப் பண்டைக்கால மக்களின் கூட்டுப் படைப்புகள் என்றே கூறிவிடலாம். வீரச்சுவையை மிகுதியாகப் பாராட்டும் இந்தத் தேசீய காவியங்களில், மனிதன் இயற்கையின் பிரதிகூலங்களை எதிர்த்து நிகழ்த்திய போராட்டமும், மனித சமூகத்தினுள் நிகழ்ந்த மோதல்களும் சித்திரிக்கப் படுகின்றன. இந்தக் காப்பியங்களில் உண்மைகளும் கற்பனைக் கதைகளும் இரண்டறக்கலந்துள்ளன. நாகரிகம் நிலைபெற்றுத் தளிர்த்துச் செழித்த காலத்தில் தோன்றிய இலக்கியக் காப்பியங்களில் (மில்டனது சுவர்க்க நீக்கம்) கம்பனது இராமகாதை முதலியன, சம காலத்திய சமுதாயத்தின் விமர்சனமும் இடம்பெற்ற போதிலும், புராதன உயிர்த்தெழுவதைக் காண்கிறோம். ஆக, வளர்ச்சி இயல் காப்பியங்களும் இலக்கியக் காப்பியங்களும் தொல் காலத்திய நினைவுகளையும் இயற்கை கடந்த நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. இயற்கை கடந்த அம்சம் என்பது காப்பியத்துக்கு இன்றியமையாதது என்றே மேனாட்டு அறிஞர் கருதுவாராயினர். ஆனால் நாவலில் இயற்கை கடந்த நிகழ்ச்சிகள் இடம்பெறுவதில்லை. நாவலாசிரியனது கற்பனை, வாழ்வின் உண்மைக்கு ஒத்ததாயிருக்கிறது. நாவல் வசனத்தில் விசுவரூபமெடுக்கும் கற்பனையாக மட்டுமின்றி, மானுட வாழ்வின் வசனமாகவே விளங்கு கிறது என்று ஆங்கிலேய அறிஞர் பாக்ஸ் கூறுவது முற்றிலும் உண்மை.

பண்டைய காப்பியகர்த்தாக்கள் சமுதாயத்துடன் ஒன்றி நின்றனர்; வாழ்வை நேசித்தனர்; மனித குலத்தின் முன்னேற்றத்தில் குன்றாத நம்பிக்கை கொண்டிருந்தனர். வாழ்வின் சகல நிகழ்ச்சிகளையும் தொகுத்து முழுமையாக அறியமுற்பட்டனர். இந்தப் பண்புகளை உடைய நாவலாசிரியன், சிந்தனைச் செறிவோடும் கற்பனை வளத்தோடும் கூடிய வாழ்க்கை விமர்சனத்தை இயற்றும் பொழுது, அந்த நாவல் காப்பிய இயல்பினைப்பெற முடியுமென்பது ஒருதலை. அத்தகைய வசன காவியங் களை இயற்றும் பணி நம் காலத்து நாவலாசிரியர்களை எதிர்நோக்குகிறது. இந்தத் துறையில், அலெக்ஸி டால்ஸ்டாய் ஆக்கியுள்ள சக்கரவர்த்தி பீட்டர் ஓர் அரிய முயற்சி என்போம்.

நாவல் காப்பிய-வரலாற்று இயல்பினைப் பெற்றிருக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் நாவலாசிரியரான பீல்டிங் வலியுறுத்தினார். ஹோமரும் மில்டனும் தத்தம் காலத்து அறிவுச் செல்வம் அனைத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்ததைப்போல், நாவலாசிரியர் 'அஃகி அகன்ற' அறிவுக்கு உரியவராக இருத்தல்வேண்டுமென்று அவர் கருதினார். மேலும், நாவலாசிரியர் சகலவிதமான மாந்தர்களோடும் ஒன்றிப்பழகும் திறம் படைத்திருக்க வேண்டுமென்றும், சகல விஷயங்களையும் ஊடுருவிப் பார்த்து அவற்றின் முக்கியமான வேற்றுமைகளைக் கண்டுகணிக்கும் ஆற்றலை அடைந்திருக்க வேண்டு மென்றும் அவர் கருதினார். இந்தப் பண்புகளுக்கு உரிய இலக்கிய கர்த்தாவோ சரித்திர அம்சத்துடன் சிறக்கும் நாவலைப் படைக்கமுடியுமென்பது அவரது கருத்து. 'சோதனை' (Ordeal) என்ற தலைப்பில் அலெக்ஸி டால்ஸ்டாய் ஆக்கியுள்ள மூன்றுபாக நவீனம் இத்தகைய யதார்த்தவாத இலக்கியமாகும்.

சரித்திர அம்சத்தைக் குறிப்பிடுங்கால், சரித்திரத் துக்கும் நாவலுக்கும் இடையே உள்ள வேற்றுமையை மறந்துவிடக்கூடாது. உறுதியான உண்மைகளைப் பகுத்துத் தொகுத்துப் பிழையின்றிப் பொதுமைப் படுத்துவதே வரலாறு ஆகும். ஆனால் மனிதனது வாழ்வு தாழ்வையும் இன்பதுன்பத்தையும் எடுத்துரைக்கும் கதை என்ற அளவிலேயே, நாவல் சரித்திர அம்சம் உடையதாகிறது. ஐந்தாண்டுத் திட்ட நிறைவேற்று விவரணம் சரித்திரமாகும். திட்டத்தில் பணியாற்றும் மனிதனது சிந்தனைகளும் உணர்ச்சிகளும் செயல்களும் மாறுதல்களுமே நவீனத்தின் வீச்சுக்குள் அடங்கும்.

சமகாலச் சமுதாயத்தை அடி நிலமாகக்கொண்டு எழுத்தாளர் படைக்கும் நாவல்களும் வரலாற்று அம்சம் பெறமுடியுமென்றாலும், அவற்றை நாம் சரித்திர நவீனங்கள் என்று குறிப்பிடுவதில்லை. கடந்தகாலச்

சமுதாயத்தைக் களமாகக் கொண்டு அமையும் நாவல் களையே சரித்திர நாவல்கள் என்போம். மனிதனைப் புரிந்துகொள்வதற்கு அவனது பாரம்பரியத்தை அறிவது அவசியமாகும். எனவே, மனிதனது வாழ்வைப் புலப்படுத்துவதில் சரித்திர நவீனம் குறிப்பிடத்தக்க பாத்திரம் வகிக்கிறது. மேலும், பாரம்பரியத்தைப் புலப் படுத்தும் சரித்திர நவீனம் சமுதாய முன்னேற்றத்துக்கு ஆக்கம்தரும் ஆற்றலூட்டியாக விளங்குகிறது. இந்த வகையில், சிறந்த சரித்திர நவீனங்களை இராமாயணம் போன்ற தேசீய காவியங்களுடன் ஒப்பிடலாம்.

சரித்திர நாவலாசிரியன் செழுமையான மனோ பாவனையைப் பெற்றிருக்கவேண்டும். வாழ்வையும் மானிட இயல்பையும்பற்றி நுட்பதிட்பமான அறிவை அடைந்திருக்கவேண்டும். வரலாற்றைப்பற்றி விவர மாகவும் முழுமையாகவும் ஞானம் எய்தியிருக்க வேண்டும்.

பண்டு ஒழிந்த காலத்தை உயிர்த்துடிப்புள்ளதாக உருவெடுக்கச் செய்வது, மிகவும் கடிமான பணியாகும். அந்தக் காலத்தில் வாழ்ந்த நானாவிதமான மக்களின் லட்சியங்கள், கொள்கைகள், நம்பிக்கைகள், வழக்க ஒழுக்கங்கள் ஆகியவற்றையும் அவர்கள் அடைந்த சிரமங்கள், தொல்லைகள், துன்பங்கள், துய்த்த இன்பங்கள் ஆகியவற்றையும் அவர்கள் அனுபவித்த வெற்றி தோல்விகள், சோர்வு எழுச்சிகள் ஆகியவற்றையும், இவற்றால் எல்லாம் அவர்களிடமும் சமுதாயத்திலும் நிகழ்ந்த மாறுதல்களைப்பற்றியும் கறாராகவும் நுணுக்க மாகவும் தெளிவாகவும் அறிந்திருக்க வேண்டும். இத்தகைய அறிவொடு வளமார்ந்த மனோபாவனையும் இருந்தால்தான், ஆசிரியனால் அக்காலத்துடன் ஒன்றி விட இயலும். சரித்திர நவீனம் எழுதும் ஆசிரியன், தன் கண்ணெதிரே காட்சிதரும் உண்மையான உலகத்தை மறந்துவிடவேண்டும்; அவனது கதைக்குரிய காலமும் இடமுமே அவனுக்கு உண்மையாகத் தோன்ற வேண்டும். இடைப்பட்ட நூற்றாண்டுகளில் நிகழ்ந்தன வற்றையெல்லாம், மனிதன் புதிதாகக் கற்றதை யெல்லாம், மனிதன் அடைந்த மாறுதல்களையெல்லாம் அவன் மறந்துவிடவேண்டும். அப்பொழுதே, கால வழுவினுக்குச் சிறிதும் இடம்கொடாமல் எழுதமுடியும்; அக்காலத்தில் ஒரு நாவலாசிரியன் இருந்து தன் சமகாலத்து மக்களின் வழக்க ஒழுக்கங்களை எவ்வாறு வெளியிட்டிருப்பானோ, அதே முறையில் சரித்திர நாவலாசிரியனால் எழுத முடியும். ஒரே ஒரு வேற்றுமை இருக்கலாம். சரித்திர நவீனம் இக்காலமக்களுக்கு விளங்கக்கூடிய மொழியில் அமையும் என்பதே அது.

யாவரும் அறிந்த சரித்திர உண்மைகளுக்கு ஒத்த வகையில், அல்லது அவற்றை முரண்படாத வகையில், கதை சொல்வது எளிதான காரியமாகும். ஆனால் சரித்திர நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவதும் அவற்றுக்கு விளக்கம் தருவதும் சரித்திராசிரியனின் பணி என்றோம். இல்லாதொழிந்த சகாப்தத்தை உயிர்த்தெழச் செய்வதும், அதில் ஆடவரும் பெண்டிரும் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதைக் காலவழு இல்லாமல் தத் ரூபமாகப் புலப்படுத்துவதுமே சரித்திர நாவலாசிரி யனுக்கு மனநிறைவு அளிக்கும் மகத்தான கடமை யாகும். தற்செயலான நிகழ்ச்சிகளின் குழப்படி குளறு படியாக மேல் நோக்கில் தோன்றும் வாழ்வு என்பது, பலதரப் பட்ட மக்களின் பொதுவிவகாரங்களும் தனி வாழ்வும் இணங்கியும் பிணங்கியும் ஒட்டியும் வெட்டியும் செயல்படுவதால் உருப்பெறுவதைச் சரித்திர நாவலாசிரியன் புலப்படுத்தவேண்டும். பல்வேறு மக்களின் முக்கியமான செயல்களையும் உணர்ச்சி களையும் எண்ணங்களையும் புலப்படுத்துவதுடன், அவர்களின் வேடிக்கை விளையாட்டுகளையும் கூடச் சித்திரிக்க வேண்டும். அடிக்கடி, சரித்திர நவீனம் அந்தக் காலத்தின் முழுமையான வெளியீடாக விளங்க வேண்டும்; அந்தகாலத்தின் உயிர்த்துடிப்பை உணர்த்த வேண்டும்.

சரித்திர நவீனங்களை இருவகையாகப் பிரிக்கலாம் (1) அற்புதச் சரித்திர நவீனம்; (2) யதார்த்த சரித்திர நவீனம். ஸர் வால்டர் ஸ்காட் அவர்களின் வேவர்லி நாவல்களும் தமிழ்வசன இலக்கியத்தில் சிறந்த கல்கி அவர்களின் சரித்திர நாவல்களும் அற்புதச் சரித்திர நவீனங்களாகும். அற்புதச் சரித்திர நவீனத்தில், பரபரப்பூட்டும் சம்பவங்கள் நிறைந்துள்ளன. எதிர் பாராத நிகழ்ச்சிகள்மூலம் வியப்பூட்டும் வகையில் கதை உருப்பெறுகிறது. கதைத் தலைவன் எதிர்ப்படும் இடர்களைக் கடந்து இறுதி வெற்றி அடைகிறான் என்பது உண்மை. ஆனால் அவன் சிந்தித்துத் திட்ட மிட்டுச் செயல்படுவதால், இந்தச் சிறப்பை அடை வதில்லை. நற்பேற்றின் துணை கொண்டே, இந்த நிலையை அடைகின்றான். எனவே, அறிவாற்றல், மனோபாவனை, நெஞ் சுரம், துணிவு, வீரம் முதலிய பண்புகளை உடைய உன்னத பாத்திரமாக அவன் உருப்பெறுவதில்லை. கதையும் விரும்பிய முடிவை நோக்கித் தானடித்த மூப்பாக முன்னேறுகிறது. ஆக, அற்புதச் சரித்திர நவீனங்கள் பாத்திரப்படைப்பில் வெற்றி அடைவதில்லை என்னலாம்.

யதார்த்த சரித்திர நவீனத்தில், கதை நிகழ்ச்சி இயற்கையாக உருப்பெறுகிறது. பாத்திரங்கள் ஒன்று பட்டும் மாறுபட்டும் செயல்படுகின்றன; அவை சூழ்நிலையுடன் இணங்கியும் அதனை எதிர்த்துப் போராடியும் செயல்படுகின்றன. இந்த நிகழ்ச்சிப் போக்கில், கதைத்தலைவன் சூழ்நிலையின்மீது பிற பாத்திரங்களது செயல் அல்லது செயலற்ற தன்மைமீது வெற்றி அடைகின்றான்; அல்லது அந்தச் சக்திகளுடன்

இறுதிவரையில் போராடித் தோல்வி அடைகின்றான். அவனது உள்ளத்தில் ஏற்படும் மோதலும், செயலில் பிறருடன் அவன் மோதுவதும் துலாம்பரமாகின்றன. இவ்வாறாக, அவன் நிறைவடிவான, நுட்பதிட்பமான உயிர்ப்பாத்திரமாக உருப்பெறுகிறான். நாடகத்தன்மை கதையின் சாராம்சமாகச் சிறக்கிறது. அற்புதச் சரித்திர நவீனத்தில், இந்த நாடக இயல்பைக் காணமுடியாது.

ஷேக்ஸ்பியர் தமது சரித்திர நாடகங்களில், பாத்திரங்களது செயல்களால் சரித்திரம் உருப்பெறும் போக்கினைப் புலப்படுத்தினார். ஆனால் அந்தப் பணியை ஸ்காட்டினால் செய்யமுடியவில்லை. சரித்திரத்தால் உண்டான பாத்திரங்களையே ஸ்காட் தமது நவீனங்களில் புலப்படுத்தினார். அற்பச் சுவையில் அதிகமாக ஈடுபட்ட ஸ்காட், வரலாற்றின் விளிம்பி லேயே வாழ்ந்தார் எனலாம். முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகள் அவரது நவீனங்களில் இடம்பெற்ற போதும், இரண்டாம் பட்சமானவையாகவே அமைந்தன. இதன் காரணத்தை எளிதில் புரிந்து கொள்ளலாம். முக்கியமான நிகழ்ச்சிகள் சரித்திர நவீனத்தின் மையமாக அமைந்தால், அவற்றுக்குக் காரணமான மாந்தர்களை - அவர்களின் கொள்கை, உறுதி முதலியவற்றைப் புலப்படுத்த வேண்டும். வியப்பூட்டும் நிகழ்ச்சிகளின் கோர்வையாக இல்லாமல், உயிர்ப்பாத்திரங்களது அக உலகப் போராட்டங்களையும் அவை ஒன்றோடொன்று செயல் பட்டதையும் யதார்த்தமாக விவரிப்பதாக நவீனம் அமைந்துவிடும். எனவே, ஸ்காட் பிரதானமான சரித்திர நிகழ்ச்சிகளைத் தம் நாவல்களின் மையமாகக் கொள்ள வில்லை.

இதை உணராத சில விமர்சகர்கள், சரித்திர நவீனங்கள் முக்கிய நிகழ்ச்சிகளை மையமாகக் கொள்ளக் கூடாதென்றே விதிவகுப்பார்கள். சரித்திர புருஷர்கள் கதைத்தலைவர்களாயிருக்கக் கூடாதென்றும் கூறுவர்; சமகாலத்து நவீனம் எழுதும் ஆசிரியர் தம் காலத்து அரசியல் தலைவர்களைக் கதைத்தலைவர்களாகக் கொள்வதில்லை. அதேபோல், சரித்திர நவீன ஆசிரியரும் சரித்திரச் சிற்பிகளைக் கதைத்தலைவர்களாகக் கொள்ளக் கூடாதென்று வாதிப்பர். சரித்திரச் சிற்பியைத் தலை வனாகக்கொள்ளும் கதை, சாராம்சத்தில் உண்மையான தாயிருந்தால், வாழ்க்கை வரலாறாகச் சிறுமையடையக் கூடிய அபாயம் உள்ளது என்பது உண்மை. ஆனால் மனோபாவனைச் சிறப்புக்குரிய நாவலாசிரியனால் அந்த ஆபத்திலிருந்து தற்காத்துக்கொள்ள முடியும். ஜுலியஸ்ஸீஸர் போன்ற சரித்திர புருஷர்களைத் தலைவர்களாகக் கொண்ட சரித்திர நகங்களை இயற்று வதில் ஷேக்ஸ்பியர் அடைந்திருக்கும் ஒப்புயர்வில்லாத வெற்றியே, சரித்திரத்தலைவனைக் கதைத்தலைவனாகக் கொள்ளக்கூடாதென்ற ஆட்சேபனைக்குத் தகுந்த பதிலாகும். ருஷியாவின் சரித்திர புருஷர்களிடையே மகத்தான ஸ்தானத்தை வகிக்கும் சக்கரவர்த்தி பீட்டரைக் கதைத்தலைவனாகக்கொண்ட இந்த நவீனமும் சரித்திரச் சிற்பியை நாயகனாகக் கொண்ட நாவல் சிறப்பாக அமையமுடியுமென்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த ருஷிய எழுத்தாளர்கள் யதார்த்தவாதிகளாக விளங்கினார்கள். அவர்கள் சரித்திரத்தை அலங்காரமான பின்னணியாக மட்டும் கொண்டு சரித்திரநாவல் எழுதும் போக்கினை வெறுத்தார்கள். தேசங்களது வாழ்வில் நிகழ்ந்த மகத்தான இயக்கங்களை உண்மையாக உயிர்த்தெழச் செய்யும் முறையில் சரித்திர நவீனம் எழுத வேண்டு மென்ற ருஷிய யதார்த்தவாதிகள் கருதினர். உலகப் புகழ்பெற்ற தனிப்பெரும் நவீனமான “போரும் வாழ்வும்” அவ்வகையில் அமைந்ததுதான்.

“போரும் வாழ்வும்” என்ற தன்னேரில்லா நவீனத்தை இயற்றிய லியோடால்ஸ்டாயின் யதார்த்த வாதப் பரம்பரையில் தோன்றியவர் அலெக்ஸி டால்ஸ்டாய். மேலும், அவர் சோஷலிஸ்ட் யதார்த்த வாதம் என்ற இலக்கியக் கொள்கையைத் தழுவியவர். வாழ்வை அதன் இயக்கத்தில் சித்திரிப்பதும், தனி மனிதன் வாழ்வு சமுதாயத்தின் வாழ்வுடன் பின்னிப் பிணைந் திருப்பதைப் புலப்படுத்துவதும் சரித்திர நோக்கின் பின்னணியில் வாழ்வின் முன்னேற்றத்தைப் படம் பிடித்துக் காட்டுவதும் சோஷலிஸ யதார்த்த வாதத்தின் அம்சங்களாம். காட்சி அளவையை மட்டும் பயன்படுத்திச் சமுதாய நிலைமையைப் படம் பிடிக்கும் சூனியமான இயற்கை வாதமாகச் சோஷலிஸ்ட் யதார்த்தவாதம் சிறுமை அடைய முடியாது. வாழ்வின் வளரும் அம்சத்தையும் தேயும் அம்சத்தையும் இனங் கண்டுகொள்ளும் ஆற்றல் சோஷலிஸ்ட் யதார்த்த வாதிக்கு இருப்பதால், அவன் சமுதாய நிலையைச் சித்திரிக்கும்போது இந்த இரு அம்சங்களையும் புலப்படுத்துகின்றான். இவற்றின் முரண்பாடு பகையாக வளர்ந்து, வளரும் அம்சம் வெற்றியடையவிருப்பதையும் அதன்மூலம் புதிய ஐக்கியம் அமையவிருப்பதையும் அவன் அறிந்திருப்பதால், அவனது யதார்த்தவாதம் அந்த எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டி அற்புத இயல்பினைப் பெறுகிறது. இவ்வாறாக சரித்திர உண்மையின் சாரத்துக்கு இடம் தராத பழைய அதீதகற்பனாவாதம், யதார்த்தவாதத்தின் அடிப்படையில் புதிய மலர்ச்சி அடைகிறது. யதார்த்த வாதமும் சூனியமான இயற்கை வாதமாகச் சிறுமையடையாமல், எதிர்காலத்தைப்பற்றிய தெளிவுடன், லட்சிய ஒளிவீசும் மனோபாவனையுடன் அற்புத இயல்புக்கு இடம் தந்து நம்பிக்கையும் உத்வேகமும் அளிக்கும் கொள்கையாகச் செழுமை யடைகிறது. எனவே, வாழ்வில் வேரூன்றி நின்று கொண்டே கம்பீரமான கனவை நனவாக்கும்

மகோன்னதமான பாட்டையில் மக்கள் அணிதிரள்வதை சோஷலிஸ்ட் யதார்த்தவாதியால் புலப்படுத்த முடியும். இவ்வாறு, தார்மீக லட்சியமும் யதார்த்த உண்மையும் இணைபிரியா இரட்டையராக ஐக்கியப்பட்டு இதிகாச இயல்புக்குரிய இலக்கியத்தைப் படைக்க முடியுமென் பதற்குச் சக்கரவர்த்தி பீட்டர் ஒரு சான்று ஆகும்.

கறங்கு போல ஒரே வட்டத்தினுள் சுழல்வதாகவோ, பரிவு அல்லது ஏளனத்துக்கு உரிய தற்செயலான நிகழ்ச்சிகளின் கோவையாகவோ சரித்திரம் உருப்பெற வில்லை என்பதைச் சோஷலிஸ்ட் யதார்த்தவாதியாகிய அலெக்ஸிடால்ஸ்டாய் நன்கறிந்திருந்தார். பழையன கழிந்து புதியன புகுதலால் சமுதாயம் முன்னேறும்போது, அதன் தன்மை மாறுதல் அடைவதை அவர் அறிந் திருந்தார். பழமையின் கூட்டினுள்ளேயே புதிய அம்சங்கள் உருப்பெற்றுச் சேகர மாவதையும், இந்தப் பரிணாமப் போக்கு ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்தவுடன், முட்டையிலிருந்து குஞ்சு வெளி வருவதைப் போலவும், நூறு டிகிரி சென்டிகிரேடில் தூய தண்ணீர் நீராவியாவதைப் போலவும், புதுமை பழமையின் கூட்டினைத்தகர்க்கும் புரட்சியைச் சாதிப்பதால், தன்மை மாறுதல் நிகழ்கிறதென்பதை அவர் உணர்ந்தார். அவ்வாறு குணமாறுதல் நிகழும் கொந்தளிப்பான காலகட்டங்களே, வரலாற்றின் முக்கியமான சகாப்தங்கள் ஒன்று ஆகும். எனவே, தேசபக்தரான அலெக்ஸி டால்ஸ்டாய் தம் நாட்டு மக்களின் குணாதிசயங்களை உணர்த்தும் வகையில், மகா பீட்டரைத் தலைவராகக் கொண்ட சரித்திர நவீனத்தை எழுதத் துணிந்தார்.

அலெக்ஸி டால்ஸ்டாய் 1883 ஜனவரி 10 ஆம் நாள் பிறந்தார். குழந்தைகளுக்கான நூல்களை எழுதி வந்த தாயார், சிறுவன் அலெக்ஸியிடம் இலக்கிய ஆர்வம் வளர்வதற்குப் பெரிதும் துணை புரிந்தார்.

1901-ஆம் ஆண்டில், அலெக்ஸி, பீட்டர்ஸ்பர்க் தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்தார். மாணவன் அலெக்ஸி, ஜாராட்சிக்கு எதிராக நிகழ்ந்த இயக்கங் களில் பங்கு கொண்டார். சமூக ஜனநாயகக் கட்சியிலும் சேர்ந்தார்.

அலெக்ஸியின் கவிதைகளே முதன்முதலில் வெளிவந்தன. 1907-இல் அவை வெளிவந்த பின், அவர் கதைகளும் நாவல்களும் எழுதலானார். ஜாராட்சிக் காலத்தில் நிலப்பிரபுத்துவம் சிதைந்து வந்ததைச் சித்திரிக்கும் இந்த நூல்கள், இவருக்கு இயற்கை யினிடமும் மக்களிடமும் உள்ள பேரன்பைப் புலப் படுத்துகின்றன.

1917-இல் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி அடைந்த பிறகு, 1919-இல் அலெக்ஸி தம் நாட்டிலிருந்து வெளியேறிப் பாரிஸ் நகரில் புகலிடம் தேடினார். அப்போதே, தாய்நாட்டைத் துறந்துவிட்டு அன்னி யரிடையே அகதியாக வாழ்வதின் தாழ்வை அனு பவத்தில் அறிந்தார். தாய்நாட்டுக்கு விரோதமாகச் சதி செய்த ருஷிய அகதிகளிடம் வெறுப்படைந்து, 1921-இல் பெர்லினுக்குச் சென்றனர். 1922-இல் மாக்ஸிம் கார்க்கி பெர்லின் வந்தபோது, இருவரும் நண்பராயினர். சோவியத் ஆட்சியின் மாட்சியை உணர்ந்த அலெக்ஸி அதே ஆண்டில் தம் தாயகம் திரும்பினார். ருஷிய மக்களும் சர்க்காரும் அவரை மனமகிழ்ந்து வரவேற்றனர்.

அலெக்ஸி பல நாவல்களும் நாடகங்களும் கதைகளும் கட்டுரைகளும் இலக்கிய மதிப் புரைகளும் எழுதினார். தம் நாட்டின் பல்வேறு மக்களது நாடோடி இலக்கியங்களைத் தேடிச் சேகரித்தார்; குழந்தைகளுக்கான கதைகளும் எழுதினார்.

1917- லேயே பீட்டரின் காலம் அலெக்ஸியின் நெஞ்சைக் கவர்ந்தது. பீட்டர் காலத்தைப் பொருளாகக் கொண்ட இலக்கியம், ருஷிய மக்களின் இயல்புகளைப் புலப்படுத்தும் சிறப்பினுக்கு உரியதாயிருக்குமென் பதைக் கலைஞனது 'அந்தராத்மா' அவருக்குணர்த்தியது. 1930-இல், சக்கரவர்த்தி பீட்டர் என்ற சரித்திர நவீனத்தின் முதற்பாகம் வெளிவந்தது. 1934-இல் இதன் இரண்டாம் பாகம் பிரசுரமாயிற்று. 1943-இல் அவர் மூன்றாம் பாகத்தை எழுதத் தொடங்கினார். ஆறு அத்தியாயங்கள் பூர்த்தியாயின. 1945 பிப்ரவரி 23-நாள் அவர் இறந்தார்.

சரித்திர நவீனத்தை இயற்றுவோனுக்குத் தேவை யான பேரறிவையும் சரித்திர ஞானத்தையும் மனோ பாவனையையும் நாட்டுப்பற்றையும் அலெக்ஸி பெற்றிருந்தார். பல்லாண்டுகள் பாடுபட்டு பீட்டர் சகாப்தத்தின் சகல தகவல்களையும் அறிந்து அவற்றை ஊடுருவி ஆராய்ந்தார். எனவே, சக்கரவர்த்தி பீட்டர், அந்த இலக்கிய பீமனின் தலைசிறந்த நாவலாக உருப் பெற்றிருக்கிறது. ஸ்டாலின் பரிசு பெற்ற இந்நாவலின் முதலிரண்டு பாகங்கள் வெளிவந்தவுடனேயே அவை உலகின் கவனத்தை ஈர்த்தன. ஆங்கிலம் உட்படப் பல மொழிகளில் அவை வெளிவந்தன.

டால்ஸ்டாய், உயிரற்ற வெற்றுச் சொல்லடுக் கையும் ஆடம்பரமான சொற் சிலம்பத்தையும் வெறுத்தார். ஆற்றல் கொப்புளிக்கும் அழகான மொழியில் எழுதுவதையே அவர் விரும்பினார். "நமது சிந்தனைகளும் கருத்துகளும் சொற் சித்திரங்களும் புதிய உலகின் பொற்சங்கு என முழங்க வேண்டிய நிலையில், நாம் ஏன் சலிப்பூட்டும் வகையில் எழுதவேண்டும்" என்று அவர் வினவினார். தொட்டு உணரத்தக்க ஸ்தூலமான சித்திரங்களைச் சொற்களால் வரைவதில் வல்லவராய் விளங்கினார் அலெக்ஸி. அவரது 'சித்திர' நடையை இந்நவீனமெங்கும் பரக்கக் காணலாம். ●

# தற்போது விற்பனையில்...
## மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் 20 தொகுதிகள்

**விலை ₹ 5000/-**




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் வரிசையில் தொகுதி ஒன்று, 1848 கம்யூனிஸ்ட் அறிக்கையை அடையாளமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. 1841ஆம் ஆண்டிலிருந்து மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோரின் சிந்தனை எவ்வாறு கம்யூனிஸ்ட் அறிக்கையை நோக்கி நகர்ந்து வந்தது என்பதை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள நூல்களும் கட்டுரைகளும் எடுத்துக்காட்டுகின்றன.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் தொகுதி 2 மார்க்சின் முதல் நூல்களில் ஒன்றான ''மெய்யறிவின் வறுமை: திரு புரூதோன் எழுதிய 'வறுமையின் மெய்யறிவு' என்னும் நூலுக்குப் பதில்'' என்ற முழு நூலையும் புரூதோன் பற்றிய மார்க்சின் ஒரு வரைவுரையையும், கூடுதலாக இரண்டு அரசியல் பொருளாதாரக் கட்டுரைகளையும் கொண்டுள்ளது.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்களின் மூன்றாவது தொகுதி மூன்று அற்புதமான நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள், லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் எனும் நூல்கள். கூடுதலாக தொகுப்பின் இறுதியில் இரண்டு கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன. மூன்று நூல்களுமே மேற்கு ஐரோப்பிய நாடுகள் இரண்டில் அந்த நூற்றாண்டின் மைய ஆண்டுகளில் நிகழ்ந்த தீவிரமான சமூக மாற்றங்களை நோக்கிய மக்கள் எழுச்சிகளைப் பற்றியவை.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் நான்காம் தொகுதியில் மார்க்ஸ் எழுதிய அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்ற நூல் இடம்பெற்றுள்ளது. இது 1858 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்திற்கும் 1859ஆம் வருடம் ஜனவரி மாதத்துக்கும் இடையில் எழுதப்பட்டது. இதை எழுதுவதற்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்பிருந்தே மார்க்ஸ் பன்முகத் தன்மை வாய்ந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு வந்தார்.




ஐரோப்பா கடந்து சென்ற வரலாற்றை அதே தடங்களின் வழி கீழை நாடுகளும் கடக்க வேண்டும் என்ற பார்வையிலிருந்து அவர் விலகிச் சென்று மேற்கல்லாத நாடுகளின் மார்க்சியத்திற்கான விரிந்த வெளியைத் தனது எழுத்துக்களின் ஊடாக உருவாக்கியுள்ளார். மார்க்ஸ் உருவாக்கித் தந்துள்ள அவ்வெளியைப் பயன்படுத்திக் கொள்ள இத்தொகுதி உதவும்.




சர்வதேசத் தொழிலாளர் சங்கம் குறித்த ஆவணங்களையும் கட்டுரை களையும் கொண்ட இத்தொகுதி வரலாற்றுரீதியாக முக்கியமான சில பிரச்சினைகளைத் தொட்டு நிற்கிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியம், பல நாடுகளில் பணிபுரியும் சங்கங்கள், கட்சிகள் ஆகியவற்றுக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு, ஒவ்வொரு நாட்டிலும் நிலவும் பிரத்தியேகமான பிரச்சினைகளில் தனித்த அக்கறை எனப் பல கோணங்களில் அகிலத்தின் விவாதங்களை வளர்த்தெடுத்துள்ளார்.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் ஏழாவது தொகுதி, 1871ல் பாரிசில் நிகழ்ந்தேறிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தொழிலாளர் எழுச்சியையும் அதைத் தொடர்ந்து அமைந்த ''பாரிஸ் கம்யூன்'' என்ற முதல் தொழிலாளர் ஆட்சியமைப்பைப் பற்றியுமான ஆவணங்கள் மற்றும் மார்க்சின் கட்டுரைகள், அறிக்கைகள், நேர்முகங்கள் ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளது.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் எட்டாம் தொகுதியில் மூலதனம் பற்றிய எங்கெல்சின் எழுத்துகளும், மூலதனம் நூலில் இந்தியாவைப் பற்றி வரும் மிக முக்கியமான பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. மூலதனம் நூலுக்கான எங்கெல்சின் மதிப்புரைகளும் பொழிப்பும், மூலதனம் நூலைப் பயில்வதற்கான மிகச் சிறந்த கையேடுகள் ஆகும்.




1872லிருந்து 1883 வரையிலான காலப்பகுதியில் மார்க்சும் எங்கெல்சும் எழுதிய சில முக்கியமான சிறுநூல்களும் கட்டுரைகளும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியின் நூல்களும் கட்டுரைகளும் மார்க்ஸ், எங்கெல்சுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த பல சிந்தனைப் போக்கினரை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. பகூனிஸ்டுகள், புரூதோனியர்கள், பிளாங்கியர்கள், லஸ்ஸலியர்கள், நரோத்னிக்குகள் போன்றோர் அவர்களில் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவருடனும் மார்க்சும் எங்கெல்சும் காத்திரமான கருத்தியல் மோதல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.




மார்க்ஸ், எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் பத்தாவது தொகுதி எங்கெல்சால் 1878ல் எழுதப்பட்ட ''டூரிங்குக்கு மறுப்பு'' என்ற ஒரே நூலை முழுவதும் கொண்டுள்ளது. மார்க்சியத் தத்துவம், அரசியல் பொருளாதாரம், சோசலிசம் என்ற மூன்று பகுதிகளையும் முதன்முறையாக ஒரே நூலில் கொண்டுள்ளது என்பது இந்நூலின் சிறப்பு ஆகும். மூன்று பகுதிகளை இந்நூல் ஒன்றாக்கிக் காட்டியுள்ளது என்பதிலிருந்து இம்மூன்று பகுதிகளும்தான் மார்க்சியத்தின் மூன்று அடிப்படையான உட்பகுதிகள் என்பது இந்நூலின் அமைப்பின் வழி நிறுவப்பட்டுள்ளது.




மார்க்ஸ் எங்கெல்ஸ் நூல்களின் 11 ஆம் தொகுதி நான்கு பாகங்களைக் கொண்டுள்ளது. முதல் பாகம், ''கற்பனாவாத சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்'', இரண்டாவது பாகம், ''கூலி முறை'', மூன்றாவது பாகம், 1848-1849 ஆம் ஆண்டுகளில் மார்க்ஸ் புதிய ரைன்லாந்து பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்த சூழல்களை விவரிக்கும் கட்டுரை, நான்காவது பாகமாக மற்றுமொரு நீண்ட கட்டுரை ''கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் வரலாறு''.




மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்வரிசையின் தொகுதி 12ன் முழுப்பரப்பையும் எங்கெல்சின் ''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' என்ற நூல் தழுவி நிற்கிறது. முதலாளியத்திற்கு முந்திய யுகம் பற்றிய இந்நூலின்றி உண்மையில் இன்றைய மார்க்சியத்தின் வரலாற்றுக் கோட்பாட்டை முழுவடிவில் உருவகிப்பதே சாத்தியமில்லாத ஒன்றாகும்.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் பதிமூன்றாம் தொகுதியில் எங்கெல்சின் இயற்கையின் இயக்க இயல் நூல் இடம்பெற்றுள்ளது. மார்க்சின் மூலதனம் நூல் கையெழுத்துப் படிகளை வெளியிடும் பணி தம் தோள்களின் மீது விழுந்து விட்டதால், இந்நூலை எங்கெல்ஸ் முழுமையாக எழுதி முடிக்கவில்லை. ஆயினும் உள்ளிணக்கமும் தெளிவும் இந்நூலில் மிளிரவே செய்கின்றன.




மார்க்ஸ் எங்கெல்சின் நூல்கள் தொகுதி 14ல் எங்கெல்சின் இரண்டு வகையான எழுத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் பகுதியில் ''லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்'' என்ற எங்கெல்சின் சிறு நூல் அமைந்துள்ளது. இரண்டாவது பகுதியில் கிறித்தவம் பற்றிய எங்கெல்சின் மூன்று ஆய்வுக்கட்டுரைகள் அமைந்துள்ளன. உலக வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களான அதே உழைக்கும் மக்களே இனி அதன் தத்துவத்திற்கும் உரிமைதாரார்கள் என்ற செய்தியையே அவரது ''முடிவு'' என்ற சொல்லில் பெறுகிறோம்.




சமகால வரலாறு, அரசியல், சோசலிச இயக்கங்களின் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தம்முள் கொண்ட நான்கு சிறிய, பெரிய கட்டுரைகள் 15வது தொகுதியில் இடம்பெற்றுள்ளன. முதலாளியத்தின் அபரிமிதமான சக்திக்கு எதிராக நிற்கும் சிறு விவசாயிகளிடம் உங்களுடைய தனிப்பட்ட சொத்து களைப் பாதுகாப்போம் என்று எந்தச் சமயத்திலும் நாம் வாக்கு கொடுக்க முடியாது என்கிறார் எங்கெல்ஸ். திட்டவட்டமாக சிறு விவசாயிகளுக்கு நாம் ஆதரவாக இருக்கிறோம். அவர்களுடைய சொத்து உறவுகளில் நாம் பலவந்தமாக தலையிட மாட்டோம் என்பதை நாம் உறுதியாகக் கூறமுடியும். ஆயின் சிறு விவசாயிகளின் சொத்துரிமைகளை அப்படியே பாதுகாப்பது என்பது சாத்தியமல்ல என்று எங்கெல்ஸ் எழுதுகிறார்.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் தொகுதி 16 மார்க்சின் இந்திய வரலாறு பற்றிய சுருக்கமான குறிப்புகளைக் கொண்டமைந்துள்ளது. இக்குறிப்புகள் 1879-82 ஆம் ஆண்டுகளில் மார்க்சால் எழுதப்பட்டவை. ஆங்காங்கே மார்க்ஸ் விட்டுச் செல்லும், ''இந்தியாவின் சமூகக் கூட்டமைப்பில் மிகவும் பலம் வாய்ந்த அரசியல் சக்தியாக புரோகித வர்க்கம் விளங்கியது'' போன்ற பல குறிப்புகள் நமது கவனத்தைக் கவருகின்றன; ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுகின்றன.

மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் பதினேழாம் தொகுதியில் எங்கெல்சின் இளமைக் காலக் கடிதங்களும், தத்துவார்த்தப் பிரச்சினைகளைப் பேசும், மார்க்சும் எங்கெல்சும் எழுதிய மிக முக்கியமான கடிதங்களும் கடிதப் பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. மார்க்ஸ், எங்கெல்ஸ் வழங்கிய அறிவு இலக்கியச் செல்வத்தில் மிக முக்கியமான பகுதி அவர்கள் எழுதிய கடிதங்கள் என்று லெனின் கூறுகின்றார்.







மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் 18,19ஆம் தொகுதிகளில் சோவியத் அறிஞர்கள் எழுதியுள்ள மார்க்சின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. இது மிகப் பெரிய நூலாக அமைந்து போய்விட்டதாலேயே, அதுவும் பல ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூலாக அமைந்துள்ளதாலேயே இந்நூலுக்குள் ஒரு விரிந்த பரப்பு, ஒரு பன்முகப்பண்பு, இந்நூலுக்கு உள்ளாகவே ஒரு விவாதப்பண்பு உருவாகியிருப்பதாகத் தோன்றுகிறது.

மார்க்சின் வாழ்க்கை வரலாறு பல வகைகளில் நமக்கு முக்கியமாக உள்ளது. அது ஒரு மிகப்பெரிய புரட்சிக்காரரின் வாழ்க்கை. அது ஒரு மிகப்பெரிய சிந்தனையாளரின் வாழ்க்கை. மார்க்சியம் என்ற அற்புதமான ஒரு சிந்தனை, அவரது வாழ்க்கை முழுவதிலும் ஒரு தொடர் நிகழ்வாக உருவாகிக்கொண்டிருந்தது. அது எப்போதுமே ஒரு முடிந்த சூத்திரமாக ஆகிவிடவில்லை.








மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வுநூல்களில் இருபதாவது தொகுதியாக இடம்பெற்றுள்ள எங்கெல்ஸ் வாழ்க்கை வரலாற்றில் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இடையிலான நட்பும் வேலைப் பிரிவினையும் ஆழ்ந்து உற்றுநோக்கத்தக்கன. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மார்க்சுக்கு மிக மிகத் தேவையாக இருந்த, படைப்புத் தன்மை கொண்ட ஒரு விவாதத் தோழமையை எங்கெல்ஸ் வழங்கினார். இதுவே எங்கெல்சின் மிகப்பெரிய சிறப்பு.

**NCBH நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044- 26251968, 26258410, 26241288; Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்** அம்பத்தூர்: 044-26359906; ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.



# மயிலாப்பூர் சிங்காரவேலர் எனும் சமூக அறிவியலாளர்

வீ. அரசு

“**நா**ன் தீங்கற்ற சுத்தமான கல்வியை உடைய ஒரு புரோபஸர். ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களிடையே நன்கு மதிக்கப்பட்டவன். மரியாதையுடன் வரவேற்கப் படுபவன். தூங்கும் மனங்களைத் தட்டி எழுப்புபவன். அசட்டுத் துணிவையும், அறியாமையையும் அகற்று பவன். நான் எல்லா வகையிலும் மக்களைப் பொதுவாக நேசிக்கிறேன். எந்த மனிதனாயினும் சரி, எந்த நாடாயினும் சரி, இத்தாலியும் பிரிட்டனும் எனக்குச் சமந்தான். ஆணும் பெண்ணும் எனக்குச் சமந்தான். அரசனும் சரி ஆண்டியும் சரி; கந்தலும் சரி பொன் ஆடையும் சரி, கவலையில்லை. எவர் பழகுவதற்குத் தகுந்தவராகவும் உபயோகம் உள்ளவராகவும் சிநேக பாவமும் மரியாதையும் அன்பும் காட்டுபவரோ அவரையே நான் பெரிதும் மதிக்கிறேன். அவரையே நான் நேசிக்கிறேன். பொய்யையும் புனைவுச் சொல்லையும் பிரச்சாரம் செய்யும் பித்தலாட்டக்காரர்களால் வெறுக்கப் படுபவன். நான் அறிவு ஆராய்ச்சிப் பிரியர்களாலும், யோக்கியர்களாலும், உதாரண குணமுடைய எதார்த்த வாதிகளாலும் போற்றப்படுபவன் என்று ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டியில் புருனோ தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் முறையில் கூறியிருப்பதைக் கொண்டு, ஒருவாறு அவரது மனோபாவத்தையும் துணிவையும் நாம் உணரலாம்” (புது உலகம்: அக்.1935).

புரூனோ குறித்து சிங்காரவேலர் செய்துள்ள பதிவே மேலே உள்ளது. புரூனோவை அவர் கொண்டாடுவதன் மூலம் தமது கருத்துநிலையை உணர்த்துகிறார். இன்றைய வைதீகம் சார்ந்த மயிலாப்பூரில், அன்று அவைதீக மரபை முன்னெடுத்த சமூகஅறிவியலாளராக சிங்காரவேலர் (1860 - 1946) வாழ்ந்தார். அவரின் கால் நூற்றாண்டு (1917 - 1946) வாழ்க்கை குறித்தப் பதிவாக இப்பகுதி அமைகிறது.

மனிதர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைத் தான் மேற்கொள்கிறார்கள். இயற்கை நிகழ்வுகளைத் தொல்பழங்காலம் முதல் மனிதர்கள் எதிர்கொண்டு வருகிறார்கள். இயற்கை நிகழ்வுகள் குறித்து ஒவ்வொரு காலத்திலும் மனிதர்கள் புதிதுபுதிதாக அறிந்து கொள் கிறார்கள். இயற்கை நிகழ்வுகளுக்குக் காரணம் தெரியாத காலம் ஒன்று இருந்தது. அப்போது தாங்கள் எதிர் கொள்ளும் அனுபவம் சார்ந்து, இயற்கை நிகழ்வு களுக்கான காரணங்களை ஊகப்படுத்திக் கொண் டார்கள். ஊகங்கள் காலப்போக்கில், தர்க்கரீதியான காரணங்களால் விவாதிக்கப்பட்டன. காலந்தோறும் மனிதர்களின் பட்டறிவும் ஊகங்களும் இணைந்தே இருந்தன. இவை பின்னர் தர்க்க அடிப்படையில் விளக்கம் பெறும்போது, அதனை அறிவியல் முறை என்று புரிந்து கொண்டோம். பிரபஞ்ச நிகழ்வுகளைத் தர்க்கரீதியான புரிதல் இன்றி, வெறும் நம்பிக்கை மற்றும் ஊகம் சார்ந்து அணுகும் நடைமுறை இன்றும் முழுதாக மாறிவிடவில்லை. ஆனால், இதனை அறிவியல் முறை என்று ஏற்றுக்கொள்வதில்லை. எகிப்து, கிரேக்கம் போன்ற பண்டைய சமூகங்களில் சொல்லப்பட்ட அறிதல் முறை என்பது படிப்படியாக கி.பி.5ஆம் நூற்றாண்டு தொடங்கி மாறத் தொடங்கியது. கி.பி.15ஆம் நூற்றாண்டு அளவில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் அறிவிக்கப்பட்டன. கோப்பர்நிக்கஸ் (1473 - 1543) பூமியின் இயக்கத்தைக் கண்டறிந்தார். கெப்ளர் (1571 - 1630), கலிலியோ (1564 - 1642) ஆகியோர் அக்கருத்தை வலுப்படுத்தும் வகையில் மேலும் பல புதிய கண்டுபிடிப்புகளைச் செய்தனர். புரூனோ (1548 - 1600) மேற்குறித்த பூமியின் இயக்கத்தை விரிவான பரப்புரை மூலம் உலகம் முழுவதும் அறியச் செய்தார். இவரைக் கத்தோலிக்க மதம் நெருப்பில் தள்ளிக் கொன்றது.

இவ்வகையில் சிங்காரவேலர் எனும் மனிதர் எத்தகைய ஆளுமையாக வாழ்ந்தார் என்பது குறித்த உரையாடலை மேற்கொள்வது நமது நோக்கம். இதனைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்வோம்.

- உலகில் 1840 முதல் மார்க்சியம் எனும் தத்துவம் இதுவரை பேசிய தத்துவங்களுக் கெல்லாம் மாற்றாக அமைந்தது. அத் தத்துவ முறையை ஏற்று, வாழ்நாள் முழுதும் அது குறித்த பரப்புரை மேற்கொள்பவராக வாழ்ந் தார் சிங்காரவேலர். இதன் மூலம் சமூகம் குறித்த புதிய பார்வையை உள்வாங்கியவராக இருந்தார். சமூகம் பற்றிய தர்க்கம் சார்ந்த, சமூக விஞ்ஞானத்தை ஏற்றுக்கொண்டார். இவ்வகையான இவரது ஆளுமை குறித்து உரையாடுவது அவசியம்.
- உலகில் நிகழ்ந்த புதிய அறிவியல் கண்டு பிடிப்புகள் குறித்த புரிதலை உள்வாங்கிய வராக வாழ்ந்தார். அவ்வகையான கண்டு பிடிப்புகள், சமூகம் குறித்த புதிய கண் ணோட்டத்தை எவ்வகையில் தருகின்றன என்பது தொடர்பான விரிவான உரையாடல் களைத் தமது எழுத்துக்கள் வழி மேற் கொண்டார். இத்தன்மை சார்ந்த இவரது ஆளுமை குறித்துப் பேசுவதும் இன்றைய தேவை.
- சமூகத்தில் உருவான புதிய தன்மைகளை உள் வாங்கி புதிய சமூகச் செயல்பாடுகளை முன்னெடுப்பது என்பது அவசியமாகும். இவ்வகையான சமூகச் செயல்பாடுகளை எந்தெந்தப் பாங்குகளில் சிங்காரவேலர் முன்னெடுத்தார் என்பது குறித்த புரிதல் அவசியமாகும். அந்தப் பின்புலத்தில் சிங்கார வேலர் ஆளுமை குறித்து உரையாடும் தேவையுண்டு.

அறிவியல் மனப்பாங்கு என்பது, தன்னைச் சுற்றியுள்ள நிகழ்வுகள் குறித்த தர்க்கப்பாங்கிலான புரிதல் ஆகும். காலம் காலமாக சமூகம் கற்பித்து வைத்துள்ள நம்பிக்கைகளை கேள்வியின்றி ஏற்றுக் கொள்ளும் மனநிலை அறிவியல் பாங்கான மனநிலைக்கு எதிரானது. சிங்காரவேலர் சட்டம் பயில்வதற்காக இலண்டன் சென்றார். அக்காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம். பதினைந்தாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய சமூகத்தில் நிகழ்ந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் என்பவை மனித சமூகத்தில் புதிய தொழில்நுட்ப அறிவை உருவாக்கின. அநுபவம் சார்ந்த அறிவு என்பது நடைமுறை நிகழ்வுகள் சார்ந்த அறிவாக வடிவம் பெற்றது. புவி ஈர்ப்பு விசை, சக்கரம் வழி பயணித்தல், நீண்ட தொலைவு செய்தித் தொடர்பு, பூமியின் இயக்கம் குறித்த புதிய புரிதல், கோள்கள் பற்றிய அறிவு, மின்விசைக் கண்டுபிடிப்பு ஆகிய பல நிகழ்வுகள் மனித சமூகத்தின் உற்பத்தி முறையையே மாற்றின. இயற்கையின் மீது தமது உடல் உழைப்பை செலுத்தி, பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அவன் பயன்படுத்திய கருவிகள் மாறின.

புதிய எந்திரங்கள் கருவிகளாக உருப்பெற்றன. புதிய கருவி, புதுவகையான உற்பத்தி ஆகியவற்றால் தவிர்க்க இயலாமல் மனித சமூகம் புதுவகையான நுகர்தல் சார்ந்த வாழ்முறைக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டது. இத்தன்மையின் உடன் விளைவாகத்தான் தொழில் புரட்சி உருவானது. ஐரோப்பிய சமூகத்தில் உருவான இவ்வகையான மாற்றத்தை நேரடியாகக் காணும் வாய்ப்பு சிங்காரவேலருக்குக் கிடைத்தது. தமது சட்டப்படிப்போடு உலகில் நிகழும் மாற்றங்களை உள்வாங்கியவராகச் செயல்பட இலண்டன் வாழ்க்கை அவருக்கு உதவியது என்பதை அவரது பிற்கால வாழ்க்கை உறுதிப்படுத்துகிறது.

சிங்காரவேலர் 1917 ஆம் ஆண்டு தொடக்கம் 1946 ஆம் ஆண்டு முடிய தமிழ்ச்சமூகத்தில் செயல்பட்ட முறைமை என்பது, அவரை ஒரு சமூக அறிவியலாளர் (Social Scientist) என்பதை உறுதிப்படுத்துகிறது. இதனைப் புரிந்து கொள்வதற்குக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக்கொள்ளலாம்.

- காங்கிரஸ் இயக்கத்தில் அவருக்குத் தொடர்பு இருந்த காலங்களிலேயே விவசாயி - தொழிலாளி தொடர்பான உரையாடல்களை அவ்வியக்கத்தில் முன்னெடுக்கும் பணியை மேற்கொள்ளுதல்.
- காங்கிரஸ் அமைப்பில் இருந்து கொண்டே விவசாயி - தொழிலாளர்களுக்கான அமைப்பை உருவாக்கி, அதற்கென இதழ்களை நடத்தத் தொடங்கியமை.
- இந்தியாவில் கம்யூனிஸ்டு இயக்கம் உருப்பெற்ற தொடக்கத்திலேயே, அவ்வமைப்போடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். கம்யூனிஸ்டு இயக்கத்தின் முதல் மாநாட்டில் தலைமை உரை நிகழ்த்தியவர். இந்தியாவில் முதன் முதல் மே தினக் கொண்டாட்டத்தை அறிமுகப்படுத்தியவர். இவை இவரது ஈடுபாட்டைப் புரிந்துகொள்ள உதவும்.
- சுயராஜ்ஜியம் என்னும் கருத்துநிலை பொது வெளியில் உரையாடலுக்கு வந்தபோது, யாருக்கு சுயராஜ்ஜியம்? எனும் உரையாடல் மூலம் இந்தியாவில் வாழும் உழைக்கும் மக்கள் பக்கம் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர்.

இந்தப் பின்புலத்தில், மார்க்சியம் எனும் சமூக அறிவியல் சார்ந்த தத்துவத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டை புரிந்து கொள்ள முடிகிறது. இதனை அவரது கூற்று உறுதிப்படுத்துகிறது.

> "மக்களது வாழ்க்கையைக் குறித்து உத்தேசித்து வரும் தத்துவங்கள் யாவும் இதுகாறும், சித்து ஒன்று இருக்கின்றது; அந்த சித்திலிருந்தே பிரபஞ்சம் தோன்றியது; மக்கள் வாழ்க்கைக்கு அந்த சித்தே அடிப்படை என்று வாதித்து வருகின்றன. ஆனால், சமூகத் தத்துவமோ மெனில், அந்தந்தக் காலத்து மக்கள் வாழ்க்கை, அந்தந்தக் காலத்துப் பொருளாதார நிலைமையிலிருந்தே பெறப்பட்டது. அந்த வாழ்க்கை, நாகரிக வாழ்க்கையாயினும், அநாகரிக வாழ்க்கையாயினும் மற்றெந்த வாழ்க்கையாயினும் அந்தந்த சமூகத்தின் பொருளாதார வாழ்க்கையின்படியே ஏற்பட்டவை" (புது உலகம். நவம்பர். 1935: 1975: 126).

பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் உரையாடலுக்கு வந்த சமூக அறிவியல் சார்ந்த தத்துவ சிந்தனை மரபுதான், மேற்கண்டவாறு சிங்காரவேலர் சமூகத்தைப் புரிந்து கொண்ட மரபாகும். இத்தத்துவத்தை நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்த செயல்பாடுகளை மேற்கொண்டவர்தான் சிங்காரவேலர். இவ்வகையான நடைமுறைச் செயல்பாடுகளே அவரது வாழ்க்கையாக அமைந்து போனது.

1917இல், காலனியத்திலிருந்து விடுதலைபெறும் போராட்டத்தில் புதிய முறைமைகள் உருப்பெற்றன. இதில் 'ஹோம் ரூல்' கிளர்ச்சி குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில்தான் வட்டாரப் பண்புகளை மதித்து, ஒற்றைப் பரிமாணத்தைக் கைவிட்டு, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. இதன் தொடர்ச்சியே இரட்டை ஆட்சிமுறை. இக்காலங்களில் காந்தி சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தார். ஒத்துழையாமை மரபு சார்ந்த இந்த இயக்கத்தில் சிங்காரவேலர் பங்கு கொண்டார். இவ்வகையில் இடதுசாரி மனநிலை உடைய காங்கிரஸ்காரராக இருந்தார். ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடந்த ஜாலியன் வாலாபாக் கிளர்ச்சி என்பது ஜாலியன் வாலாபாக் படுகொலையாக முடிந்தது. இதனால் 1917 - 1922 காலங்களில் இந்தியா கொந்தளிப்பான சூழலைக் கொண்டிருந்த காலம். இந்தியாவிற்கு வந்த வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்புப் போராட்டம் நடந்தது. அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு இயக்கம் நிகழ்ந்தது. இந்த இயக்கங்களில் சிங்காரவேலர் என்ன பங்கு ஆற்றினார் என்பதை, அவரது வரலாற்றாசிரியர்களான கே.முருகேசன் சி.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் பின்வரும் வகையில் பதிவு செய்துள்ளார்கள்.

> "இக்காலத்தில் சென்னை நகரில் மிக சுறுசுறுப்பாகப் பணியாற்றிய ஒருவராக சிங்காரவேலர்

திகழ்ந்தார். அவர் ஜாலியன் வாலாபாக் படு கொலையைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்தினார். தம் வழக்கறிஞர் தொழிலைத் துறந்தார். தனது வழக்கறிஞர் அங்கியைப் பொது மக்கள் முன்னிலையில் கொளுத்தினார். காங்கிரஸ் தொண்டர்களை ஒன்று திரட்டினார். சென்னை மாநகரின் பல பகுதியில் ஊர்வலங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தினார். ஜனவரி 1922இல் சென்னைக்கு வந்த வேல்ஸ் இளவரசரைப் புறக்கணிக்க முனைப்பாக மக்களைத் திரட்டினார். காங்கிரசுக்கு ஆதரவாகத் தொழிலாளரைத் திரட்டினார். தொழிலாளர் பிரச்சினைகளை ஊக்கத்துடன் எடுத்துக் கொண்டு பணியாற்றும் ஸ்தாபனமாக காங்கிரஸை ஆக்க காங்கிரஸ் கமிட்டிகளுக்குள் போராடினார். தீவிர இடது சாரிக் கருத்துக்களை மேடைப் பேச்சுக்களிலும் தன் கட்டுரைகளிலும் முன்வைத்தார். (1991: 47)

காலனிய ஆதிக்கத்திற்கு உட்பட்ட இந்திய நிலப் பகுதியில் ஒரு பகுதியான மெட்ராஸ் இராஜதானியில், செயல்பட்ட காங்கிரஸ்காரர்களில் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். அதில் காங்கிரஸ் கோட்பாடுகளுக்கு ஒத்து வராத பல்வேறு கருத்து நிலைகளையும் நடைமுறைப்படுத்த முயற்சி மேற் கொண்டார். இவ்வகையில் அன்றைய சூழலில் நடந்த போராட்டங்களில் பங்கு கொண்ட அதே வேளையில், அதற்குள் விவசாயி - தொழிலாளி சார்ந்த சமூக எதார்த்தத்தை வெளிப்படுத்திய முறைமையைப் புரிந்து கொள்ள முடிகிறது. காங்கிரஸ் இயக்கம் இவரது கோட் பாடுகளை உள்வாங்கும் அமைப்பாக இல்லை. எனவே, 1.5.1923 அன்று இந்தியாவில் முதன்முதலாகக் கொண்டாடப்பட்ட மே தினக் கூட்டத்தில் தொழிலாளி - விவசாயி கட்சி அமைக்கப்பட்டிருப்பதை அறிவித்தார். அவ் வியக்கத்திற்காக 'லேபர் கிஸான் கெஜட்;' என்ற ஆங்கில ஏட்டையும் 'தொழிலாளன்' என்னும் தமிழ் ஏட்டையும் வெளியிடும் திட்டம் குறித்தும் அக் கூட்டத்தில் அறிவித்தார். காங்கிரஸ் இயக்கத்தை இடதுசாரி அமைப்பாகக் கட்டமைக்கும் முயற்சிகளாக இவை அமைந்தன. சிங்காரவேலர் 1917 -1922 காலங்களில் மக்கள் வெகுதிரள் அமைப்பாக இருந்த காங்கிரஸ் இயக்கத்திற்குள் செயல்பட்ட முறைமை என்பது, அவரது சமூகம் குறித்த பார்வையைப் புரிந்து கொள்ள உதவுகிறது. 1917இல் நிகழ்ந்த சோவியத் புரட்சி போன்ற பல்வேறு நிகழ்வுகளை உள்வாங்கி இருந்தார். அதே நேரத்தில் காங்கிரஸ் நடத்திய போராட்டங்களிலும் தம்மை இணைத்துக் கொண்டார். அன்றைய சூழலில் இவரது நடவடிக்கை தனித்த பார்வை உடையதாக இருந்தது. இதன் மூலம் அவர் வேறுபட்ட சமூக அறிவியலை முன்னெடுத்த போராளி யாகவே இருந்தார்;.

"உலகிலே மானிடவர்க்கத்தில் இந்நாட்டவரைப் போல் துயரக் கடலில் மூழ்கியிருப்போர் எவரு மில்லை எனக் கூறலாம். வாழ்வுக்கு அவசியமான உணவு, குடியிருப்பு வசதிகள் நமக்கு இல்லை. உயர்ந்த அறிவு வாழ்வுக்கு அவசியமான சுதந்திரம், சமத்துவம், கல்வி இல்லை. நம்மில் பெரும்பான்மையோர் உலகில் உள்ள மற்ற தேசத்துக்கு எல்லா வகையிலும் கீழ்ப்பட்டிருக் கிறோம். முப்பது கோடி ஜனங்களில் நான்கு கோடி ஜனங்கள் அரை வயிறு உண்டு, அரை ஆடை உடுத்தித் துன்புற்றிருக்கின்றனர். பதினைந்து கோடிப் பேர் தகுந்த குடியிருப்பு வசதியின்றி மனிதர்கள் வசிக்கத் தகாத இடங்களில் வசிக் கின்றனர். நூற்றுக்கு எண்பது பேருக்கு மேல் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். முப்பது கோடியில் கால் பகுதிக்கு மேல் தீண்டத்தகாத வர்கள். மற்ற வகுப்பாருக்கு ஊழியம் செய்வதைத் தவிர இவர்களுக்கு வேறு வகை சம்பந்தமும் கிடையாது. அவர்கள் கோயிலுக்குப் போகக் கூடாது... நமது தாய்நாட்டில் நமது சகோதரர்கள் படும் துன்பங்களை நீக்கும் பொருட்டு கிளர்ச்சி செய்வது ஆட்சேபிக்கப்படுகிறது". (1985: 12)

மேலே கண்டவை, சிங்காரவேலர் 1925இல் கான்பூரில் நடந்த கம்யூனிஸ்டு கட்சியின் முதல் மாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரை. இப்போது, அவர் காங்கிரஸ் கட்சி என்ற அடையாளத்தைத் துறந்து 'கம்யூனிஸ்டு' எனும் அடையாளத்தை வரித்துக் கொள் வதைக் காண்கிறோம். சமூக வரலாற்றில், சமூகம் குறித்த அக்கறையும், அச்சமூக இயங்குநிலை குறித்த தேடலும் உள்ள மனிதர்களே சமூக அறிவியல் சார்ந்த ஆளுமைகளாக உருப்பெற முடியும். இந்தப் பின் புலத்தில் சிங்காரவேலரின் சமூகம் பற்றிய புரிதல் என்பது தன்னை ஒரு கம்யூனிஸ்டாக வரித்துக் கொள்வதில்தான் நாம் அவரைப் புரிந்து கொள்கிறோம். இத்தன்மையுடைய ஆளுமைகள்தான் சமூக அறிவிய லாளராக வடிவம் பெறுகிறார்கள். இத்தன்மை சார்ந்து தமிழ்ச் சமூகத்தின் முதல் சமூக அறிவியலாளர் மயிலாப்பூர் சிங்காரவேலர் என்று பதிவு செய்ய முடிகிறது. இந்த வரிசையில் தமிழகத்தைச் சேர்ந்த வேறு எவரையும் அன்றைய கட்டத்தில் மதிப்பீடு செய்ய இயலாது. காங்கிரஸ் இயக்கத்திற்குள்ளிருந்து இடதுசாரி கருத்துநிலைகளை முன்னெடுத்து உரையாடியதைப் போல் காங்கிரஸ் இயக்கத்தின் முதல் நிலைத் தலை வராக விளங்கிய காந்தி அவர்களோடும் உரையாடல் களை நிகழ்த்தினார். இந்திய மக்களுக்கான 'சுய ராஜ்ஜியம்' குறித்த கருத்துப் பிரச்சாரத்தைக் காந்தி பேசினார். அவரது கருத்தை, ஒரு சமூக அறிவியல் பார்வையோடு சிங்காரவேலர் எதிர்கொண்டார்.

காந்திக்கு அவர் எழுதிய பகிரங்கக் கடிதம் அதனை உறுதிப் படுத்துகிறது. அக்கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

> "முதலாளித்துவத் தன்னாதிக்கத்தை எதிர்த்துப் போராடாமல் அரசியல் தனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட முடியாது. அரசியலில் விடுதலைக்கு இன்றியமையாதவைகள், தொழில் துறையில் சுதந்திரம் ஆகியவைகளைப் பொருத்த வரை நம் சுயராஜ்ஜிய அரசியல், விட்டுக் கொடுத்தலை எவ்வுருவத்திலும் ஏற்றுக் கொள் வதில்லை. ஆகையால் நமக்கு வரவிருக்கும் சுயராஜ்ஜியத்தில் நிலமும் இன்றியமையாத தொழிற்சாலைகளும் நாட்டின் நன்மைக்காக பொதுமையாக்கல் படுமென்றும், நாம் பயிரிடாத எந்தத் துக்காணி நிலத்தையும், நாம் வேலை செய்யாத எத்தொழிற்சாலையையும், நாம் வசிக்காத எந்த வீட்டையும் நம்மில் ஒருவரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று எளிய மொழியில் எவ்வகை ஐயத்துக்கிடமின்றி அறிவிக்க வேண்டுமெனத் தங்கள் முன் தாழ்ந்து பணிந்து வேண்டுகிறேன்". *(1991: 273)*

மேற்குறித்தப் பகுதியில் இந்திய மக்களுக்கான சுயஉரிமையுடன் கூடிய ராஜ்ஜியம் எவ்வாறெல்லாம் அடைய வேண்டுமென்பதை சிங்காரவேலரின் கருத்து நிலை தெளிவுபடுத்துகிறது. உலகில் உள்ள இயற்கைப் பொருள்களான நிலம் போன்றவற்றை அனைவருக்குமான பொருளாக வடிவமைப்பது எப்படி? அவ்வகையான செயல்பாடுகள்தான் உண்மையான சுயராஜ்ஜியமாக அமைய முடியும். அவ்வாறில்லாதவை மக்களுக்கான சுயராஜ்ஜியமாக அமையாது. மாறாக, யாருக்கான சுயராஜ்ஜியமாக அமையும் என்பது குறித்த விரிவான உரையாடலை மேற்கொண்டார். இக்கருத்துக்களை காந்தியார் எவ்வகையில் எதிர்கொண்டார், அதற்கான மறுமொழியை அவர் வெளிப்படுத்தினாரா என்பதற்கான தரவுகள் இல்லை; ஆனால் இவ்வாறான சுயராஜ்ஜியம் அமையாவிடில், காந்தியம் கூறும் சுயராஜ்ஜியம் யாருக்கானதாக இருக்கும் என்பதையும் பதிவு செய்துள்ளார். அப்பகுதி வருமாறு:

> "பின் யாருக்குத்தான் சுயராஜ்ஜியம்? நமது லாயர்களுக்கும், ஜட்ஜுகளுக்கும், மந்திரிகளுக்கும், தர்மகர்த்தாக்களுக்கும், மடாதிபதிகளுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும், வீடு சொந்தக்காரர் களுக்கும், வர்த்தகர்களுக்கும், தொழிற்சாலை, ரயில் மற்றும் கப்பல் உரிமையாளர்களுக்கும், ராணுவம் மற்றும் போலீஸ் உத்தியோகஸ்தர் களுக்கும், கலாசாலை பண்டிதர்களுக்கும் (University Professor), பட்டவர்த்தனர், மகுடவர்த் தனருக்கும், இவர்கள் சந்ததியருக்கும்தான் நமது தேசிய காங்கிரஸ் கோரும் சுயராஜ்ஜியமெனவும் அறிக". *(2006: I: 59)*

சிங்காரவேலர் எனும் சமூக அறிவியலாளர் **1917 - 1925** இடைப்பட்ட காலங்களில், இந்திய சமூக இயக்கம் குறித்துக் கொண்டிருந்த கண்ணோட்டங்களை மேலே நாம் பதிவு செய்தோம். இக்காலங்களில் காங்கிரஸ் இயக்கம் சார்ந்த செயல்கள்; காந்தியாரின் செயல்கள் ஆகியவற்றில், ஒரு சமூக அறிவியலாளனாக அவர் முன்வைத்த கருத்துநிலைகளாகப் பின்கண்டவற்றை தொகுக்கலாம்.

- இயற்கையில் உள்ள பொருட்கள், மனித சமூகம் அனைத்திற்கும் பொதுவானது. அதனை வெகுசிலர் உரிமை கொண்டாடு வதை நாம் ஏற்க இயலாது.
- தொழிலாளர் - விவசாயி ஆகிய இரு தரப்பு உழைப்பாளிகள்தாம் நம் சமூகத்தின் ஆணி வேர்; அவர்களை சுரண்டுவோரை நாம் அனு மதிக்க முடியாது. அவர்களுடைய விடுதலையின் குறியீடாக மே தினக் கொண்டாட்டம் அமைகிறது.
- சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை எனும் பண்புகள் சார்ந்த சுயராஜ்ஜியமே நமக்குத் தேவை. அதற்கு மாற்றான எதுவும் சுயராஜ்ஜியமாக அமைய முடியாது.

மயிலாப்பூரில் பிறந்த இத்தமிழ்மகன், இந்திய அரசியலுக்கே வழிகாட்டும் கோட்பாட்டை முன் மொழிந்த சமூக அறிவியலாளன். இதனை தான் சார்ந்த அமைப்பின் மூலம் நடைமுறைப்படுத்த முயன்ற மனிதன். இவை எவ்வாறெல்லாம் அன்றைய சமூகத்தில் எதிர்கொள்ளப்பட்டது என்பது குறித்து அறிவதற்கான தரவுகளைத் தேடவேண்டும். ஆனால், இவரைப் போல் சமூகம் குறித்து அந்தக் கால இந்தியச் சமூகத்தில், தமிழ்ச் சமூகத்தில் பேசிய வேறொருவர் உண்டா என்ற உரையாடலையும் நிகழ்த்த வேண்டும். இவ்வகையில் அன்றைக்கு உலகில் நடைமுறைக்கு வந்த மார்க்சியத் தத்துவத்தை தமது நிலைப்பாடாகக் கொண்ட சமூக அறிவியல் அறிஞர் மயிலாப்பூர் சிங்காரவேலர் என்ற பதிவை முன்னெடுப்பது நமது கடமை.

•••

மார்க்சியம் எனும் சமூக அறிவியல் சார்ந்த தத்துவத்தின் மீது அவருக்கிருந்த ஈடுபாட்டை நாம் அறிவோம். இத்தத்துவம் இயற்கை நிகழ்வுகளின் இயங்கியலை முதன்முதல் தர்க்கப்பூர்வமாக உரை யாடலுக்குட்படுத்தியது. மனிதனின் உழைப்பு என்றால் என்ன? அது சமூக மாற்றத்தில் பெறும் இடம் எத்தகையது? உலகத்தில் நிகழ்ந்த / நிகழ்ந்து கொண்

டிருக்கும் தொழில்புரட்சி எத்தகைய சமூக நிகழ்வு களுக்கு அடிப்படையாக அமைகிறது? இத்தகைய பல்வேறு கேள்விகளுக்கு விடை கண்டது மார்க்சியம். இத்தன்மைகளை உள்வாங்கி, மார்க்சியம் முன்னெடுக்கும் சமூக இயங்கியல் சார்ந்து தமிழ்ச் சூழலில், சிங்கார வேலர் தமது எழுத்துக்களின் மூலம் பதிவு செய்தார். இவ்வகையில் மார்க்சிய சமூக இயங்கியல் குறித்த விரிவான பதிவை தமிழில் செய்த முதல் சமூக அறிவியலாளர் அவர்தான் என்று கூற முடியும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் அவரால் எழுதப்பட்டவை நமக்கு சான்றாதாரங்களாக அமைகின்றன.

'கடவுளும் பிரபஞ்சமும்' (1932), 'மனித உற்பவம்' (1934), 'விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்' (1934), 'தத்துவ விஞ்ஞானக் குறிப்புகள்' (புதிய உலகம்:1935-1936) ஆகியவற்றையும் மேலும் பல கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். அவரது 'கடவுளும் பிரபஞ்சமும்' எனும் நூல் கடவுள் என்ற பொருள் உலகில் இல்லை; அது மனிதனால் கற்பிக்கப் பட்டது என்ற கருத்தாக்கத்தை முதன்மைப்படுத்திய நூலாகும். ஐரோப்பிய சமூகத்தில் அறிவொளி இயக்கம் பதினெட்டாம் நூற்றாண்டு முதல் பல பரிமாணங்களில் வளர்ச்சியுற்றது. கிறித்தவ நிறுவனங்களுக்கு எதிரான கலகங்கள் உருவாயின. இவ்வகையில் தோன்றியதே இலண்டன் இலௌகிக சங்கம் (London Secular Society -1860). இவ்வமைப்பின் கிளை சென்னை நகரத்தில் 1878 ஆம் ஆண்டு உருவானது. இவர்கள் 1882இல் சென்னை இலௌகிக சங்கத்தை (Madras Secular Society) உருவாக்கினர். இவ்வமைப்புகள் கடவுளின் இருப்பு குறித்த கேள்விகளை முன்வைத்தன. ஐரோப்பிய நாடுகளில் உருவான இவ்வமைப்புகள் குறித்து சிங்காரவேலர் பல இடங்களில் குறிப்பிடுகிறார். ஆனால் சென்னையில் 1878 - 1888ஆம் ஆண்டுகளில் செயல் பட்ட 'சென்னை இலௌகிக சங்கம்' குறித்த பதிவுகளை அவரது எழுத்துகளில் காண முடியவில்லை. இந்தப் பின்புலத்தில் மார்க்சியம் கூறும் பொருள்முதல்வாதக் கருத்துக்களை பரப்புரை செய்யும் நோக்கில் செயல் பட்டார். இதனை அவரது 'கடவுளும் பிரபஞ்சமும்' எனும் நூல்; வழி வெளிப்படுத்தியிருப்பதைக் காண முடிகிறது.

> "தத்துவஞானிகள் கூறும் பிரம்மமும் (Brahmam), சத்தும் (Sat), சர்வமும் (Absolute), தெரியப் படாததும் (Unknownable), எண்ணமும் (Idea), இச்சையும் (Will), யாவும் கற்பனைகளென அறிக". (2006: I: 256)

மேலே கூறியுள்ள செய்திகள் மூலம் 'கடவுள் மனிதனால் உண்டாக்கப்பட்டதுதான்' என்பதை வலியுறுத்துகிறார். இவ்வகையான கடவுளை மனிதன் ஏன் உண்டாக்கிக் கொண்டான், அதனை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது என்பது குறித்தும் மிக விரிவாகப் பேசியுள்ளார். பிரபஞ்ச நிகழ்வுகளுக்கும் கடவுளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை எண்ணற்ற அறிவியல் சார்ந்த தர்க்க உரையாடல்கள் வழி பேசுகிறார். இதில் மனிதன் எவ்வாறு செயல் படுகிறான் என்பதையும் பதிவு செய்கிறார்.

> "பிரபஞ்சத்தில் நமக்குத் தெரிந்தவரை, இருக்கும் பிராணிகளில் மனிதனைப் போன்ற மூடப்பிராணி இல்லை என்றே சொல்லலாம். இல்லாத தெய்வங் களையும் பிசாசுகளையும் தானே சிருஷ்டி செய்து கொண்டு, அந்தச் சொற்களுக்குத் தானே நற்குணங் களையோ, துர்குணங்களையோ காட்டி, தான் கொடுத்த குணத்திற்குப் பயந்து அந்தப் பயத்தைப் போக்க, பிரார்த்தனையும் பூசையும் காவையும் பலியையும் செய்து, அவைகளால் தன்னையும், பிறரையும் இம்சித்துக் கொண்டு, இவ்வுலகில் உயிர் வாழும் சம்பவம் பிரபஞ்சத்தில் வேறு எங்கும் இருக்காது என்று தீர்க்கமாக எண்ணலாம். (2006:I: 290)

இவ்வகையில் மார்க்சியம் சார்ந்த பொருள்முதல் வாதக் கருத்துக்களை பொது வெளியில் முன்னெடுத்த சமூக அறிவியலாளராக இவரைப் புரிந்து கொள்ள முடிகிறது. இக்கருத்தியலை மேலும் வலுப்படுத்த டார்வின் கோட்பாடுகளை மிக விரிவாக அறிமுகப் படுத்தி எழுதியுள்ளார். உயிர்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி சார்ந்த பரிணாமக் கோட்பாடுகளை 'மனித உற்பவம்' எனும் நூலில் வெளிப்படுத்துகிறார். பிரபஞ்ச நிகழ்வுகள், அதில் கடவுள் எனும் சொல் பெறும் இடம், மனித இன உற்பத்தி ஆகியவற்றைக் குறித்துப் பேசிய சிங்காரவேலர், அவரது செயல்பாடுகள் குறித்து 'விஞ்ஞானமுறையும் மூடநம்பிக்கையும்' எனும் தொகுப்பு நூலை பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் 'குடியரசு' பதிப்பகம் மூலம் 1934இல் வெளியிட்டார். இந்நூல் குறித்துப் பெரியாரின் பதிவு பின்வருமாறு:

> " 'விஞ்ஞானமுறையும் மூடநம்பிக்கையும்' என்னும் இப்புத்தகமானது சென்னை தோழர் ம.சிங்காரவேலு பி.ஏ.பி.எல்., அவர்களால் எழுதப்பட்டதாகும். இது எழுத நேர்ந்ததின் அவசியம் என்னவென்றால், தோழர் சிங்காரவேலு அவர்களால் முன் எழுதப்பட்ட 'கடவுளும் பிரபஞ்சமும்' என்னும் புத்தகமானது மக்களிடையில் ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்டதுடன், பொது ஜனங்கள் பல மூலைகளிலிருந்தும் தோழர் சிங்கார வேலு அவர்களைச் சரமாரியாகக் கேள்விகள் கேட்க ஆரம்பித்து, சுமார் ஆறு மாத காலம் அநேக விசயங்களைப் பற்றிக் கேட்டுவந்தார்கள்.

அக்கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் தோழர் சிங்காரவேலு அவர்கள் தக்க பதிலளிக்கும் முறையில் எழுதியதாகும்". (2016: முகவுரை)

மேலே பெரியார் பதிவு செய்துள்ள செய்திகளின் அடிப்படையில் சிங்காரவேலர் செயல்பாடுகளை நாம் புரிந்து கொள்ள இயலும். கடவுள், மந்திரம், பில்லி சூனியம், குறிபார்த்தல், தெய்வமாடல், புத்த மதம், கிறித்தவ மதம் ஆகியவற்றின் மூடநம்பிக்கைகள், போலி விஞ்ஞானம், ஆஸ்திகம், மொழி உருவாக்கம், நாஸ்திகம் ஆகிய பல்வேறு செய்திகள் குறித்த உரையாடலை இந்நூலில் மேற்கொண்டுள்ளார். உலகில் புதிதாகக் கண்டுபிடித்தவற்றைக் கொண்டு, மேற்குறித்தவற்றை மறுக்கிறார். விஞ்ஞானம் என்பது குறித்து தவறான நம்பிக்கைகளையும் மதம், நிறுவனங்கள் எவ்வாறெல்லாம் பொய் சார்ந்த பரப்புரைகளை செய்கின்றன என்பதையும் விரிவாகப் பதிவு செய்துள்ளார். பெரியார் 1925இல் சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவ்வியக்கக் கோட்பாடுகளை பரப்ப 'குடியரசு' இதழையும் நடத்தத் தொடங்கினார். இவ்விதழில் மேற்குறித்த கருத்துப் பரப்புகளைச் சிங்காரவேலர் மேற்கொண்டார். தமிழக அரசியல் வரலாற்றில் இச்செயல்பாடுகள் மிக முக்கியமான நிகழ்வுகள். மதம் சார்ந்த மூடநம்பிக்கை களும் கடவுள் சார்ந்த மூடநம்பிக்கைகளும் மக்களை சிந்திக்க விடாது அடிமைப்படுத்திய காலங்களில், அவற்றை உடைத்தெறிய, ஐரோப்பியப் பின்புலத்தில் உருவான புத்தொளி மரபு மற்றும் மார்க்சிய பொருள் முதல்வாதக் கருத்துநிலை ஆகியவற்றை உள்வாங்கிச் செயல்பட்டவர் சிங்காரவேலர். இதற்குப் பெரியார் தமது முழு ஆதரவையும் வழங்கினார். தமது பத்திரிகை மற்றும் வெளியீட்டு நிறுவனம் மூலம் சிங்காரவேலர் எழுத்துக்களை வெளியிட்டார். சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்ட பெரியாரும் சமூக அறிவியல் கண்ணோட்டமுடைய சிங்கார வேலரும் இணைந்து தமிழ்ச் சமூகத்திற்கு ஆற்றிய பணிகளை நன்றியுடன் பதிவு செய்வது நமது கடமை.

பெரியாரின் 'குடியரசு' இதழில் தொடர்ந்து எழுதும் வாய்ப்பு நேராத போது, தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு 1935-1936ஆம் ஆண்டுகளில் 'புது உலகம்' எனும் இதழைப் பயன்படுத்திக் கொண்டார். அக்கட்டுரைகள் கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம் ஆகிய இருவரால் 'தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்' எனும் தலைப்பில் தொகுக்கப்பட்டு வெளிவந்தது. இத்தொகுப்பின் முன்னுரையில், தொகுப்பா சிரியர்கள் செய்துள்ள பதிவு என்பது, சிங்காரவேலர் எனும் சமூக அறிவியல் ஆளுமையை அறிந்துகொள்ள உதவும்.

"மார்க்சியம் என்பது விஞ்ஞான சோஷலிஸம். நமது விருப்பு வெறுப்பை அடிப்படையாகக் கொண்டதல்ல; விஞ்ஞான முறையில், விஞ்ஞானத்தின் அடிப்படையில் சமூக மாற்றத்தைப் பற்றி எடுத்துரைத்து சோஷலிசத் திற்கு வழிவகுக்கின்றது. எது விஞ்ஞானம், விஞ்ஞான வழிவகை என்றால் என்ன என்ப வற்றை எடுத்து விளக்க உலகத்தின் இயல்பு என்ன பிரபஞ்ச அமைப்பு எப்படி, பரிணாம வாதம் என்றால் என்ன, என்பன போன்ற விசயங் களை உருப்படியான வகையில், தெளிவான முறையில் விளக்கியுள்ளார் தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்டான இந்தப் பெரியார். (1975: முன்னுரை)

சமூக அறிவியலாளன் என்பவன் தத்துவம் என் பதை விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாகவே புரிந்து கொள்வான். இந்தப் பின்புலத்தில் 'புது உலகம்' இதழில் எழுதிய தொடர் கட்டுரைகளுக்கு 'தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்' என்று பெயரிட்டார். அப் பெயரில் அக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டன. தத்துவம் என்பதை சமயப் பின்புலத்தில் உரையாடலுக்கு உட்படுத்தியோர் மிகுதியாக வாழ்ந்த காலச்சூழலில் வாழ்ந்தவர் சிங்காரவேலர். மதத்திற்கும் தத்துவத்திற்கும் தொடர்பில்லை; தொடர்பு இருப்பதாக பேசப்படும் சொல்லாட்சிகள் பொருள்முதல்வாதக் கருத்துநிலையை ஏற்பதில்லை. மிகச் சிக்கலான இந்த உரையாடலை நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் சார்ந்து, தத்துவ மரபுகளுடன் உரையாடலுக்கு உட்படுத்தினார் சிங்கார வேலர். அந்த வகையில் அமைந்தவை 'புது உலகம்' கட்டுரைகள். 1925 - 1936 வரை இடைப்பட்ட காலங்களில் அவரது செயல்பாடுகள், தாம் புரிந்து கொண்ட பொருள்முதல்வாதத் தத்துவமரபை எந்தெந்த வகையிலெல்லாம் பரப்புரை செய்ய இயலும், சமூக நடைமுறையில் உள்ள நிகழ்வுகளோடு அதனை எவ்வாறு இணைப்பது ஆகிய கண்ணோட்டத்தில் செயல்பட்டவர் சிங்காரவேலர். அதனைத்தான் 'தத்துவ ஞான விஞ்ஞானக் குறிப்புகள்' என்று அழைக்கிறார். சமூக அறிவியலாளன் அல்லது சமூக விஞ்ஞானி என்பவருக்கான அனைத்துப் பண்புகளையும் கொண் டிருந்தவராக, மேற்குறித்த செய்திகள் மூலம் சிங்கார வேலரைப் புரிந்து கொள்ளலாம்.

•••

சமூக அறிவியலாளர் என்பவர் சமகால வாழ்க்கை குறித்த புரிதலும் அக்கறையும் கொள்வது அவசியம். அந்தப் புரிதலை நடைமுறைப்படுத்துவதற்கான வழி முறைகளைக் கண்டறிதலும் அவசியம். அந்த வகையில் தொழிலாளர், விவசாயிகளைப் புரிந்து கொண்டதன் மூலம், தான் வாழ்ந்த காலத்தை முதன்மைப்படுத்தினார் சிங்காரவேலர். அதனை நடைமுறைப்படுத்த, அச்சு

ஊடகம் சார்ந்த பரப்புரை மேற்கொள்ள இதழ்களை நடத்தினார். தொழிலாளி, விவசாயிகளுக்கான அமைப்புகளைக் கட்டி எழுப்பினார். அவ்வமைப்பு கைக்கொள்ள வேண்டிய தத்துவார்த்த நடைமுறை குறித்த புரிதலைப் பெற்றவராக இருந்தார். இத்தன்மைகளை 1917 - 1924 உட்பட்ட காலங்களில் அவரிடம் நாம் காண முடிகிறது. 1925 - 1936 காலங்களில் சமூகத்தில் இருந்த மூடநம்பிக்கைகளை விஞ்ஞான கருத்தியல் சார்ந்த தத்துவப் பின்புலத்தில் எதிர்கொண்டார். அதனைப் புலப்படுத்துவதாக 'புது உலகம்' இதழ் கட்டுரைகள் உள்ளன. இவ்வகையான செயல்பாடுகளை மேற்கொண்ட காலங்களில் அவர் வாசித்த தத்துவத்துறை சார்ந்த நூல்கள், அறிவியல் துறை சார்ந்த நூல்கள் ஆகியவற்றையும் அவர் பதிவு செய்துள்ளார். சமகாலப் புரிதல் நோக்கி அவர் வாசித்த அறிவியல் நூல்கள் சார்ந்து, அவரை நாம் சமூக அறிவியலாளராகப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வகையான உரையாடல்களை மேற்கொள்ள கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ளலாம்:

- சமூக அறிவியலாளராகச் செயல்பட, சமூக வரலாற்றில் இதுவரை பேசப்பட்ட / பேசப்படும் தத்துவச் சொல்லாடல்கள் குறித்த அக்கறையுடையவராக இருத்தல் அவசியம். தமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு எவ்வகையான வாசிப்பு மரபை கொண்டிருக்க வேண்டும் என்பதும் முக்கியமாகும். சிங்கார வேலர் மேற்குறித்தவாறு எவ்வாறு செயல்பட்டார் என்ற உரையாடல் நிகழ்த்தும் தேவை நமக்குண்டு.
- தாம் வாழும் காலத்தில், எந்தெந்த முறைமைகளில் புதிய பார்வைகள் உருப்பெற்றுள்ளன; எந்தெந்த வகையில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் நிகழ்ந்துள்ளன; அக்கண்டுபிடிப்புகள் சார்ந்து சமூகம் குறித்த தேடுதலில் என்னென்ன புதிய தன்மைகள் உருவாகியுள்ளன ஆகிய பல புரிதல்களை சமூக அறிவியலாளன் தன்னுள் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பின்புலத்தில் சிங்கார வேலரை எவ்வாறு மதிப்பீடு செய்ய இயலும் என்ற உரையாடலும் அவசியமாகும்.
- தொழில்புரட்சிக்குப் பிந்தைய சமூகத்தில் பல்வேறு ஊடகங்கள் உருப்பெற்றுள்ளன. இவ்வூடகங்கள் சமூக வாழ்க்கை குறித்த பதிவுகளை செய்த வண்ணமே உள்ளன. இதில் அச்சு ஊடகம் என்பது பெரும் பண்பாடாகவே உருப்பெற்றுள்ளது. அச்சு வழி நாள்தோறும் வெளிவரும் இதழ்கள் மற்றும் பிரசுரங்களை நாம் தொடர்ந்து வாசிக்க வேண்டியுள்ளது. அதைப் போல புத்தகங்களை வாசிக்கும் பழக்கமும் தொடர்தல் அவசியம். சிங்காரவேலர், எந்தெந்த வகையான புத்தகங்களோடு உறவு கொண்டிருந்தார்; குறிப்பாக, நவீன அறிவியல்துறை சார்ந்த வாசிப்பை அவர் எவ்வகையில் கைக்கொண்டிருந்தார் என்ற அறிதலும் அவசியம். இந்தப் பின்புலத்திலும் சிங்காரவேலர் ஆளுமையை நாம் அறிய இயலும்.

சிங்காரவேலரின் 1917-1946 இடைப்பட்ட கால வாழ்க்கையில், தாம் ஒரு பொருள்முதல்வாத தத்துவ மரபை ஏற்றுக் கொண்டவராகவும், அதனைப் பரப்புரை செய்பவராகவும் இருந்தார். இதனைப் புரிந்து கொள்ள அவரது எழுத்துக்களில் பல்வேறு தத்துவ ஞானிகளின் கருதுகோள்களை உள்வாங்கியதைக் காண்கிறோம். தொடக்ககால கிரேக்க - ரோமானிய தத்துவ அறிஞர்களான அரிஸ்டாட்டில் (கி.மு.384-322), பிளாட்டோ (கி.மு. 427-347), சாக்ரடீஸ் (கி.மு. 469-399) ஆகியோரின் கருத்துநிலைகள் குறித்த உரையாடலை மேற்கொள்கிறார். அவை சமகாலத்தில் எவ்வகையில் அணுகுதல் வேண்டும் என்பதைப் பேசுகிறார். ஜெர்மன் தத்துவ அறிஞர்களான ஜார்ஜ் வில்லியம் ஹெகல் (1770-1831), ஆர்தர் கோபன்ஹார் (1788-1860), ஹெர்பர்ட் ஸ்டென்ஸர் (1820-1903), இமானுவேல் கான்ட் (1724-1804) ஆகிய பலரின் தத்துவம் சார்ந்த உரையாடல்களை மேற்கோள்காட்டி, அதிலிருந்து மார்க்சியம் எவ்வாறு உருப்பெற்றது என்பதைப் பேசுகிறார். மார்க்சும் எங்கல்சும் உருவாக்கிய பல்வேறு தத்துவ உரையாடல்களை விரிவாக முன்வைக்கிறார். 'கம்யூனிஸ்டு அறிக்கை' தொடங்கி, அவர் வாழ்ந்த காலம் வரையிலான மார்க்சிய உரையாடல்கள் குறித்த பதிவை மிக விரிவாகவே செய்துள்ளார். அவ்வகையான அணுகுமுறை சார்ந்தே இயங்குகிறார். அதனையே தமது அடையாளமாகவும் கருதுகிறார். இவ்வகையில் மார்க்சிய தத்துவ மரபை ஏற்றுக் கொண்ட முதல் சமூக அறிவியலாளராக சிங்காரவேலர் தமிழ்ச்சமூகத்தில் வாழ்ந்தார். இதற்கான பதிவுகளை அவரது ஆக்கங்கள் அனைத்திலும் நாம் காண்கிறோம். சிங்காரவேலர் முன்னெடுத்த சமூக அறிவியல் கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்தவை, அவரது காலத்தில் அறியப்பட்ட அறிவியல் அறிஞர்களின் செயல்பாடுகள் ஆகும். கோப்பர்நிக்கஸ் (1473-1543), கெப்ளர் (1571-1630), ஆல்பர்ட் ஈன்ஸ்டின் (1879-1955), கலிலியோ (1564-1642), பிளமிங் (1849-1945), புரூனோ (1548-1600), சி.வி.இராமன் (1888-1970) ஆகிய பல அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகள் தொடர்பாக விரிவான பதிவுகளைச் சிங்காரவேலர் செய்துள்ளார். இவ்வறிஞர்களின் கண்டுபிடிப்புகள் என்பவை, பூமியின் இயக்கம்,

உயிர்களின் தோற்றம், உயிர்களின் வளர்ச்சி வரலாறு ஆகிய பல அடிப்படையான உரையாடல்களுக்கு வழி கண்டது. பொருள்முதல்வாத தத்துவ உரையாடல்களை வலுப்படுத்த இக்கண்டுபிடிப்புகள் அடிப்படை ஆதாரங்களாக அமைந்தன. சிங்காரவேலர், புதிய கண்டுபிடிப்புகள் குறித்த விரிவான பதிவுகளை 'தத்துவ விஞ்ஞானக் குறிப்புகள்' எனும் தொடரில் 'புது உலகம்' இதழில் விரிவாகப் பதிவு செய்தார். உலகத்தில் உருப்பெற்றுள்ள புதிய பார்வைகள் என்பவை, இதுவரை இருந்த நம்பிக்கை சார்ந்த கருத்துமுதல்வாத உரை யாடல்களைத் தகர்த்தது. பொருள்முதல்வாதமே அறிவியல் பூர்வமானது என்பதற்கான விரிவான சான்றாதாரங்களைப் பரப்புரை செய்யும் பணியை தம் வாழ்க்கைப் பணியாகக் கொண்டார். இதுவே சிங்கார வேலர் எனும் முதல் சமூக அறிவியலாளர், தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்ததற்கான அடையாளமாக நம்முன் உள்ளது. இதனைப் பல பரிமாணங்களிலும் கொண் டாடும் அவசியம் நமக்குண்டு.

சிங்காரவேலர் என்ற மனிதரின் வாசிப்பு மரபு சார்ந்து, அவரின் வரலாற்று ஆசிரியர்களான கே.முருகேசன் மற்றும் சி.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் செய்துள்ள பதிவு முக்கியமானது. அது வருமாறு:

"மேலை நாட்டு விஞ்ஞானிகளும் தத்துவ ஆசிரியர்களும் இயற்கையின் குண விசேஷங்களை 'மெட்டீரியலிஸ்டு' (பொருள்முதல்வாத) முறையில் அணுகி ஆராய்ந்ததைப் பற்றி தான் தெரிந்து கொண்ட பரந்த அறிவின் அடிப்படையில் எழுதப்பட்டவை சிங்காரவேலு கட்டுரைகள். அவரிடம் இந்த விஷயங் களைப் பற்றி ஏராளமான நூல்கள் இருந்தன. அவர் இதுபற்றி படித்த விஷயங்களை ஆதாரமாகக் கொண்ட நூல்களில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

*1.* நட்சத்திரங்களும் அணுக்களும் (Stars and Atoms) எட்டிங்டன் எழுதியது. *1927; (2).* குழப்பத்தி லிருந்து ஓட்டம் - ஷேப்பி (1931, Fight from Chaos) *(3).* நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சம் (The Universe around us) ஜீன்ஸ் எழுதியது *- 1930. (4).*கடவுளும் பிரபஞ்சமும் (God and the Universe) கோஹென் *- 1931. (5).*பிரபஞ்சத்தின் ஜீவன் (Life of the Universe) *- 1909. (6).*எலக்ட்ரான்களும் மூலப்பொருள்களும் (Elements and Electrons) ராம்ஸே *- 1912. (7).*அணுவுக்கு அப்பால் (Beyond the Atom) காக்ஸ் *- 1913. (8).*ஆந்தரோபாலஜி (Anthropology) டையலர். *(9).*தங்கக் கிளை (The Golden Bough) பிரேசர். *(10).* மனிதனும் கடவுளும் சாகாமையும் (Man, God and immorality) பிரேசர். *(11).*பிஹேவியரிசம் (Behaviourism) வாட்சன்" *(1991: 134 -135).*

மேலே குறித்துள்ள நூல்கள் பலவற்றிலிருந்தும் மேற்கோள் தந்து சிங்காரவேலர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவரது நூல்கள் மற்றும் கட்டுரைகள் என்பவை, நாம் வாழும் பூமி, அதிலுள்ள உயிரினங்கள், அவற்றின் இயக்கங்கள், இயக்கங்கள் சார்ந்து உருவான சமூக வாழ்க்கை என்ற மரபை உள்வாங்கியே எழுதப் பட்டிருப்பதைக் காண்கிறோம். இவரைப் போன்று தமிழ்ச்சூழலில் சமூக வரலாற்றை எழுதியவர்கள் மிகக் குறைவு. அவர் மறைந்து சுமார் அறுபது ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவரது எழுத்துக்கள் இன்றும் புதிய புதிய வாசிப்பு அநுபவத்தைத் தருகின்றன. சமூக அறிவியலாளரின் எழுத்துக்கள் வேறெப்படி இருக்க முடியும்?

### இப்பதிவை உருவாக்க அடிப்படையாக இருந்த நூல்கள்

### I. ம.சிங்காரவேலர் எழுதிய நூல்கள்:

*1. 1931, 1932, 1934* ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த **சுயராஜ்ஜியம் யாருக்கு?** மூன்று பாகங்கள்

*2. 1934 -* **மெய்ஞான முறையும் மூடநம்பிக்கையும்.** இந்நூலை ஈரோடு குடியரசு பதிப்பகம் வெளியிட்டது. இரண்டு பாகங்கள். இவை இப்போது இரண்டு பாகங்களும் இணைந்த வகையில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடாக வந்துள்ளது. பதிமூன்றாம் அச்சு. *2016.* **விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பெரியார் முன்னுரை எழுதியுள்ளார்.

*3. 1974 -* **ம.சிங்காரவேலரின் சொற்பொழிவுகள்;** *1931 - 1934* ஆம் ஆண்டுகளில் சிங்காரவேலர் நிகழ்த்திய பேச்சுக்கள். *1974*இல் தான் முதன் முதல் அச்சு வடிவம் பெற்றது. என்.சி.பி.எச். - மூலம் மூன்றாம் அச்சு *1984*இல் வந்துள்ளது. தொகுப்பாசிரியர்கள் கே.முருகேசன் மற்றும் சி.எஸ்.சுப்பிரமணியன்.

*4. 1974 -* **ம.சிங்காரவேலரின் பொதுவுடைமை விளக்கம்** இதில் உள்ள கட்டுரைகள் *1924-1928*இல் ஒரு பகுதியும் *1931-1932*இல் இன்னொரு பகுதியும் எழுதப்பட்டவை. எழுத்துப் பிரதி அச்சானது *1974*இல்தான். இதன் மூன்றாம் அச்சு என்.சி.பி.எச் நிறுவனம் வெளியிட்டுள்ளது. *1985.*

*5. 1975 -* **தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள்** 'புது உலகம்' இதழில் *1935-1936* ஆண்டுகளில் எழுதப்பட்டவை. கே.முருகேசன் அவர்களும் சி.எஸ்.சுப்பிரமணியன் அவர்களும் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். இதனை என்.சி.பி.எச். வெளியிட்டுள்ளது.

*6. 1975 -* **அரசியல் நிலைமை, மே, *1935*-ஏப்ரல் *1936*** *1935-1936*ஆம் ஆண்டுகளில் சிங்காரவேலர் 'புது உலகம்' இதழில் எழுதிய கட்டுரைகள். தொகுப்பாசிரியர்கள் கே.முருகேசன் மற்றும் சி.எஸ்.சுப்பிரமணியன். என்.சி.பி.எச் வெளியிட்டுள்ளது.

*7. 2006 -* **ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம்** மூன்று தொகுதிகள், தொகுப்பாசிரியர்கள்: முத்து குணசேகரன், பா.வீரமணி. தென்னக ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

### பிற ஆக்கங்கள்

*8.1991-*சிங்காரவேலு **- தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டு** ஆசிரியர்கள் கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம். நி.செ.பு. என்.சி.பி.எச். வெளியீடு.

*9. 1970 - 1990 -* **ம.சிங்காரவேலரின் பிறப்பு மற்றும் நினைவு நாட்களில்,** தோழர் கே.முருகேசன் அச்சிட்டுக் கொடுத்த பதினாறு பக்க சிறுவெளியீடுகள். வெளியிட்டவர்கள் 'நடமாடும் முற்போக்கு வெளியீட்டுக் கழகம்' மதராஸ் ஹொர்பர் தொழிலாளர் சங்கம். பகத்சிங் இல்லம் - ஜீவா ஹால். சென்னை-*1.*


KAAVYA TAMIL (QUARTERLY) APRIL - JUNE 2018
Regd No : TN TAM 8012 / 43610
காவ்யா
பேரா சு.சண்முகசுந்தரத்தின்
சிறப்புத் தொகுப்புகள்
பாரதிதாசனின் 6 தொகுதிகள் ரூ.7000/- சலுகை விலை ரூ.5000/-
கவி காமு ஷெரீப் 3 தொகுதிகள்
ரூ. 2600/- சலுகை விலை ரூ. 1800/-
விந்தனின் 3 தொகுதிகள்
ரூ. 3000/- சலுகை விலை ரூ. 2000/-
வ.ரா.வின் 2 தொகுதிகள்
ரூ. 2100/- சலுகை விலை ரூ. 1500/-
ராமாமிர்தம் 2 தொகுதிகள்
ரூ. 2100/- சலுகை விலை ரூ. 1500/-
அ.ச.ஞா. 2 தொகுதிகள்
ரூ. 2300/- சலுகை விலை ரூ. 1700/-
தொடர்புக்கு : 044 - 23726882 / 98404 80232
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
26
சித்திரை
ஏப்ரல் - ஜூன் 2018
மலர் 7 இதழ் 2
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
அன்பின் பெருவெளி ஆண்டாள்
வெளி ரங்கராஜனின் நாடகம்
தீப்பட்டு முளைத்து தளிர்த்த மலைத்தாவரம்
இரா. நரேந்திரகுமாரின்
- ஆண்டாள் பற்றிய கட்டுரை
மந்திரவாதமும் போலித்தனங்களும்
- உளவியல் பார்வை
பேரா.தே.ஞானசேகரனின் கட்டுரை
கரிகாலன் கவிதைகள்
விக்ரமாதித்யனின் விமர்சனம்
மற்றும் 16 ஆய்வுக் கட்டுரைகள்



# பழந்தமிழ் இலக்கியங்களில் பெண் நிகழ்த்துநர்கள்

## கோ. பழனி

**ச**மகாலத்தில் கூட நிகழ்த்துக்கலைகளுள் பெண் கலைஞர்கள் அரிதாக உள்ள நிலையில், சங்க காலத்தில் பல்வேறு பெண் நிகழ்த்துநர்கள் இருந்ததற்கான தெரிப்புகள் சங்க இலக்கியங்களில் சிதறிக்கிடக்கின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அத்தகைய கலைஞர் களைத் தனித்து அடையாளம் காண வேண்டியது அவசியமாகும். பொதுவாக, நிகழ்த்துக்கலை மரபுகள் சடங்கியல் சார்ந்தும் பொருளாதாரம் மற்றும் அதிகார வரம்புகளின் அரவணைப்புகள் சார்ந்துமே இயக்கம் கொள்கின்றன. சங்ககால நிகழ்த்துக்கலைகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

சங்ககால அரசியல் நிலையை,

- மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்
- சேர நாட்டுப் பழங்குடிகள்: குடவர் (குட்டுவர்), அதியர், மலையர், மழவர், பூழியர், வில்லோர், கொங்கர், குறவர்.
- பாண்டிய, சோழ நாட்டுப் பழங்குடிகள்: பரதவர், கோன்.
- தனித்தவர்கள்: ஆவியர், ஓவியர், வேளிர், அருவர், இடையர், அந்தர்.
- தமிழ் நிலங்களை அண்டி வாழ்ந்த பழங் குடிகள்: கொண்டையர், களவர், வடுகர்.
- கிழார்கள், சிற்றரசர்கள், பழங்குடித் தலைவர்கள்.

என்று பகுத்துக்கொள்ளலாம். மேற்சுட்டிய அரசியல் தலைமைகளை அண்டித்தான் சங்ககால நிகழ்த்துநர்கள் தம் கலைகளை நிகழ்த்தியுள்ளனர். அகம், புறம் சார்ந்த நிகழ்த்துக்கலை மரபையும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. சடங்கியல் சார்ந்தும், கொண்டாட்டம் சார்ந்தும் கூத்துகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

வேந்தர்கள், குறுநில மன்னர்கள், சீறூர் தலைவர்கள் கலைஞர்களை ஆதரித்துள்ளனர். வேந்தர்களைக் காட்டிலும் 'ஓரி' போன்ற குறுநில மன்னர்களும் அவர்களைக் காட்டிலும் சீறூர் தலைவர்களும் (கிழார்கள்) கலைஞர்களை ஆதரித்துள்ளனர்.

ஆற்றுப்படை நூல்களுள் மூன்று ஆற்றுப்படைகள் குறுநில மன்னர்களிடத்தேயே கலைஞர்கள் ஆற்றுப் படுத்தப்படுவதாகக் காட்டுகிறது. பொருநர் ஆற்றுப் படை மட்டுமே சோழன் கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக உள்ளது. கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகிய நிகழ்த்துநர்கள்,

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி**
**பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇ**
**சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்**

(தொல். புற. இயல். 30)

வறுமையை விரட்ட பொருள் தேடி அலைவோராகக் காட்டப்பட்டுள்ளனர்.

**தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாடினி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப**

(தொல். கற். இயல். 52)

இக் கலைஞர் குழாம் 12- வாயில்களாகச் செயல் பட்டுள்ளது. நீண்ட தொலைவு பயணம் செய்து, செய்தி உரைப்பவர்களாக பாணன், பாடினி, கூத்தர் விறலி ஆகியோர் சுட்டப்படுகின்றனர்.

பாண் சமூகத்தில் விறலி, பாடினி, பாடியர், பாடுமகள், ஆடல் மகள், கிணைமகள், பாட்டி, பாணிச்சி எனும் பெயர்களில் பெண்பாற் கலைஞர்கள் அழைக்கப்பட்டனர். 'செல்லா மோதில் பாண்மகள்' (பதி.ப. 60) என்பது பொதுவாக விறலியைக் குறிப்பதாகவும் கூறப்படுகிறது.

**பாணர் வருக பாட்டியர் வருக (மதுரை. 749)**

**ஆடுநடை அண்ணனிற் பாடுமகள் காணியர்**

(பதி.ப. 44)

வேறுபாடுகளைக் காட்டுகின்றன.

**பாணர் பண்புகள்:**

- தமது வறுமை போக்க விறலியுடன் மன்னனைக் காணச் செல்வர் (புறம். 64)
- பாடினி வேந்தனின் மறம் பாடுவாள்: மறம் பாடிய பாடினி வேந்தனிடம் இழை பெறுவாள் (புறம். 11)
- யாழ், ஆகுளி, பதலையொடு விறலியுடன் தன் வறுமை நீங்க மன்னனைக் காணச் செல் வார்கள் (புறம். 64)
- மன்னனிடம் விறலியர் பாட, ஏனையோர் பல்லியங்கள் வாசிப்பார்கள் (புறம். 152, மலைபடு. 532 - 544)
- விறலியும் பாணனும் சேர்ந்தே வேந்தனைக் காணச் சென்றனர். விறலியுடன் காணச் சென்றால் பரிசில் பெறலாம் (புறம்: 70, 109)

பாணர் குலத்தில்,

**பாடும் திறன் பெற்றவர்கள் - பாடினியர்**
**மெய்ப்பாடு தோன்ற ஆடுமகளிர் - விறலியர்**
**விழாக்களில் ஆடியவர்கள் - ஆடுமகள்**
**அகவிக் கட்டுரைத்த மகளிர் - அகவன் மகளிர்**

ஆடலும் பாடலும் பிரிக்க முடியாத அம்சங்களாக சங்க காலத்தில் இருந்துள்ளன. இப்பாடல்கள் புகழ்ச்சிப் பாடல்களாக இருந்திருக்க வாய்ப்புண்டு.

## வெறியாட்டு

அகமரபு சார்ந்த ஒரு சடங்கு. காதல் கொண்ட பெண்ணொருத்தியின் தாய், தன் மகள் பசலைப் பூத்து மெலிந்து போவது கண்டு அவளது காதலை அறியாது, அவளது இந்நோய்க்குக் காரணம் முருகன் என்று எண்ணி வேலனை அழைத்து (வேலன் - இச்சடங்கை நடத்தக் கூடியவன்) பூசை செய்கிறாள். வாத்தியங்களின் இசைக்கு ஏற்ப வேலன் முருகனை வேண்டிப் பாடுவான் (நற். 51). வேலன் வெறிகொண்டு ஆடி அவளது இந்நிலைக்குக் காரணம் முருகனே என்று உரைக்கிறான்.

இச்சடங்கு முதுவாய்ப் பெண்டிராலும் நடத்தப் பட்டுள்ளது (அகம். 98, நற். 288). பெண்கள் ஆடியதாக

அகம் 370-வது பாடல் சுட்டுகிறது. ஆடும் பெண்கள் சடங்கில் இணைக்கப் பட்டிருந்தமையைக் காட்டுகிறது என்று கா. சிவத்தம்பி கூறுகிறார் (2004:194). பாடல்கள் பாடி (அகம். 138) இந்நிகழ்வின்போது இறுதியில் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆடி முருகனைப் புகழ்ந்து பாடியுள்ளனர் (அகம். 382).

**குரவைக் கூத்து**

'குரவைக் கூத்தே கைகோத்தாடல்', காமமும் வெற்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கை பிணைந்தாடுவது - என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதுகிறார்.

ஒருவரை ஒருவர் தழுவி ஆடுவது. தலைவியை அழைத்து 'கொண்டு நிலை' பாடும்படிக் கூறுகிறாள். கொண்டு நிலைக்கு நச்சினார்க்கினியர் உரை செய்யும் போது, 'ஒருவர் கூற்றினை ஒருவர் கொண்டு கூறுதலிற் கொண்டு நிலையாயிற்று' என்கிறார். பல்வேறு குரவைகள் சுட்டப்படுகின்றன.

- போர்வீரரின் போர்க்களக் குரவை (புறம். 22)
- பரதவர் கள்ளுண்டு ஆடும் குரவை (புறம். 24)
- கள்ளுண்ட குறவரின் குரவை (புறம். 129)
- நெய்தல் மகளிர் குரவை (அகம். 20, பதி. ப. 73)
- நெய்தல் நிலப் பெண்கள் தங்கள் ஆட்டத்தின் போது, தங்கள் கணவன்மார்களின் நேர்மையற்ற தன்மையினைப் பாடியுள்ளனர் (அகம். 339).
- ஆயர் குரவை (கலி: 102, 103, 104...)

எனப் பலவகையான குரவை சுட்டப்படுகிறது.

குரவை ஆட்டம் பல்வேறு சூழல்களில் ஆடப் பட்டுள்ளது. குரவை என்பதை முன்தேர்க் குரவை என்று புறம் 371 ஆம் பாடலை எடுத்துக்காட்டி விளக்குகிறார் இளம்பூரணர். அதே பாடலை பின்தேர்க் குரவைக்கு நச்சினார்க்கினியர் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார். அதாவது, தேரின்கண் வந்த அரசர் பலரையும் வென்ற வேந்தன் வெற்றிக் களிப்பாகத் தேர்த் தட்டிலே நின்று போர் வீரரோடு கை பிணைந்தாடும் குரவை என்கிறார் நச்சினார்க்கினியர். தேரின் முன்னே நின்றாடிய குரவை என்கிறார் இளம்பூரணர். ஆக, ஆட்டம் என்பது ஒன்றாகவே இருந்துள்ளது. அது ஆடப்படும் களத்தைக் கொண்டு 'முன்தேர்', 'பின்தேர்' என்பதாக வரையறுத்துக் கொள்ளப்படுகிறது.

**ஆயர் குரவை**

ஏறு தழுவியபின் ஆண்களும் பெண்களும் குரவை ஆடியுள்ளனர். குரவை ஆடும்போது முதலாமவர் வென்றவனையும் அவனது காதலியையும் பாடும்படிக் கூறுகிறார். பெண்கள், மரபு வழியான பாடல் பாடியதாக, "குரவை தழீஇய மரபுளி பாடி" (கலி. 103) என்ற வரி உணர்த்துகின்றது. அதாவது, "யாஞ்சுற்றத்தார் கூறும் முறைமையைப் பாடி குரவைக் கூத்தாடி" என்பதாகும். இது கூத்து நிலைப்பட்ட ஆடலாம். சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை நிகழ்த்தப்பட்டமையைக் கூறுகிறது.

கலைமகளிர் பலவாறு வருணனைக்கு ஆட்பட்டு உள்ளனர். ஆற்றுப்படை நூல்களில் இவ்வகை வருணனைகளை ஏராளமாகக் காணலாம். காட்டாக, பதிற்றுப்பத்து - 54வது பாடல்,

**வீங்கிறைத் தடைஇய அமைமருள் பணைத்தோள்**
**ஏந்தெழில் மழைக்கண் வனைந்து வரல் இளமுலை**
**பூந்துகில் அல்குல் தேம்பாய் கூந்தல்**
**மின்னிழை விறலியர் நின்மறம் பாட (பதி. ப. 54)**

புறப்பாடல்கள் பலவற்றில் விறலியர் பாணர்களுடன் சென்று பாடிப் பரிசில் பெற்ற செய்தியினைக் குறிப்பிடுகின்றன.

**பாடினி**

வெட்சித்திணைப் பாடல்களில் நிரை மீட்டதற்கு சடங்கில் கொற்றவைக்கு இரத்தப் பலி கொடுத்து வழிபடும்போது பாடினி பாடுவதுண்டு.

**ஆடிப்பண் பாடி அளவின்றக் கொற்றவை**
**பாடினி பாடல் படுத்து வந்தாள்...**
**(நச்சி. உரை மேற்கோள்).**

பாணன் தனி நிகழ்த்துநன் அல்லன். பாடினி அக் குழுவின் உறுப்பினள் (புறம். 11, 60, 319). அக்குழுவின் பெண் உறுப்பினளான இவள், பெரும்பாலும் விறலி என்று அழைக்கப்பட்டாள் என்கிறார் சிவத்தம்பி (2004: 201).

சிறக்கப் போர்புரிந்த மன்னரின் புகழ் பாடிய பாடினி,

**மறம் பாடிய பாடினி யும்மே**
**ஏர் உடைய விழுக் கழஞ்சின்**
**சீருடைய இழை பெற்றிசினே**
**இழை பெற்ற பாடினிக்கு (புறம். 11: 11-14)**

இழையணி பெற்றுள்ளாள். குழையணி, நறுமணம் பொருந்திய மாலை அணிந்து பேரியாழ் கொண்டு பாலைப்பண்ணை மீட்டி, மன்னர்களின் போர்த் திறத்தைப் பாடி பல பரிசில்கள் பெற்றுள்ளாள் என்று பதிற்றுப்பத்து 5, 6: 1 - 14 கூறுகிறது.

புலால் நாற்றம் வீசும் பாசறைகளுக்குச் சென்று பாடிய முறைமையையும் பதிற்றுப்பத்து (71: 1-14) கூறுகிறது.

**நூலின் வலவாணங்கு அரில் மாலை**
**வால் ஒளி முத்தமொடு பாடினி அணிய**
**(பொரு. 3: 161-162)**

பாடினி பொன்னரி மாலை, முத்துமாலை பரிசில் பெற்றதாகப் பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது.

**பாடினி மாலை அணிய (புறம். 319: 14)**

**வாடா மாலை பாடினி அணிய (புறம். 364: 1)**

**புரி மாலையர் பாடினிக்கு (புறம். 361: 11)**

பாடினியை அழைத்து நெடிய தேரையும் யானை களையும் பாண்டிய மன்னன் வழங்கினான் என்று மதுரைக் காஞ்சி (749) குறிப்பிடுகிறது.

பாடினி இனிமையான குரல்வளம் மிக்கவள். அவள் பாடிக்கொண்டிருக்கும் போது மறுபுறம் மயில் அகவும் ஒலி எழும் என்பதை,

**ஒருதிறம் பாடினிமுரலும் பாலையங் குரலின்**
**நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற**
**ஒருதிறம் ஆடுசீர் மஞ்ஞை அரிகுரல் தோன்ற**

என்று பரிபாடல் (17: 17-19) சுட்டும்.

**விறலி**

ஆடுதல், பாடுதல், இணை கொடுதல், தாள மிடுதல், வேடமிட்டு ஆடுதல், மெய்ப்பாடு தோன்ற நடித்தல், பாட்டியற்றிப் பாடுதல் ஆகியவற்றில் கை தேர்ந்தவர். கூத்தர், பொருநர் ஆகியோரின் பெண்பால் மக்களே விறலியர் எனப்பட்டனர் (பக்தவத்சல பாரதி; 2012: 72).

**மெல்லியல் விறலி! நீ நல்லிசை செவியிற்**
**கேட்பினல்லது காண்பறி யலையே (புறம். 133: 1-2)**

மென்மையான தோகை விரித்த மயில் போன்ற சாயலுடன் கூந்தலை உடையவளாக விறலி காணப் படுகிறாள்.

சிறுபாணாற்றுப்படை விறலியின் தோற்றத்தை விரிவாக எடுத்துரைக்கும் புறப்பொருள் வெண்பா மாலை (பாடாண் திணை: 31)

**சில்வளைக்கை செவ்வாய் விறலி செருப்படையான்**
**பல்புகழ் பாடிப் படர்தியேல் - நல்லவையோர்**
**ஏத்த விழையணித் தின்னே வருதியாற்**
**பூத்த கொடிபோல் பொலிந்து**

என்கிறது. வளையல்கள் அணிந்து கொடிபோல் விளங்கும் விறலி குரல்வளம் மிக்கவளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளாள். பரிபாடலும் (7:15) அகநானூறும் (89: 9-10) இதையே உணர்த்துகின்றன.

**பாடுக விறலியர் பல்பிடி பெறுக (பதி. ப. 43: 22)**

**பாடுவல் விறலியின் கோதையும் புனைக (புறம். 172: 3)**

என்ற வரிகள் விறலியரின் மெய்ப்பாடு தோன்ற ஆடுவதில் மட்டுமல்லாது பாடுவதிலும் வல்லவர்களாக விளங்கியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

'விறலியரோடு கிள்ளிவளவனிடம் சென்றால் பொருள் பெறலாம்' என்று பாணனை ஆற்றுப்படுத்து கிறார் கோவூர் கிழார் (புறம். 70). அதாவது, 'சீறியாழ்ப்பாண, கிள்ளி வளவனின் புகழைக் கருதி, விறலியுடன் செல்க; சென்றால் செல்வம் அடைவாய்' என்கிறார்.

**விரைஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர**
**ஆடினிர் பாடினிர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே (புறம்: 109: 16-18)**

அதாவது, வடித்து முறுக்கப்பட்ட நரம்பினை யுடைய யாழை வாசித்து, மணம் பொருந்திய கூந்தலை யுடைய நம் விறலியர் பின்வர, ஆடியும் பாடியும் செல் வீராயின், அவன் நுமக்கு நாட்டையும் மலையையும் பரிசிலாகத் தருவான் என்கிறார் கபிலர்.

விறலியர், 'வளக்கை விறலி' (புறம்: 135, 140), 'சில்வளை விறலி' (புறம்: 60, 64, 103) 'ஒண்ணுதல் விறலி' (புறம்: 32), 'வாணுதல் விறலி' (புறம்: 89, 105), 'பாடுவல் விறலி' (புறம்: 280) என வெவ்வேறு பெயர் களால் சுட்டப்பட்டுள்ளனர்.

விறலியாற்றுப்படைத் துறைப் பாடல்கள் விறலியைத் தனித்தே சுட்டுகின்றன.

**செல்லா மோதில் சில்வளை விறலி (பதி. ப. 57)**

**சில்வளை விறலி செல்குவை ஆயின் (மேலது; 78)**

இளமைப் பருவத்தினர் சில வளையல்களையும் பேதைப் பருவத்தினர் மிகுதியான வளையல்களையும் அணிந்துள்ளனர்.

'சில்வளை விறலியர்' தனித்தும் இயங்கியதை புறம். 133ம் பாடல் காட்டுகிறது. விறலியாற்றுப் படைத் துறைப்பாடல் மெல்லிய இயல்புடைய விறலியை "மெல்லியல் விறலி! தேர்வேள் ஆயைக் காணிய சென்மே" என்று ஆற்றுப்படுத்துகிறார் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

விழாக்களின் போது விறலிக்குப் பின்னால் தமது இடுப்பில் முழவினைக் கட்டிக் கொண்டு கோடியர் நிற்பதைப் போல, ஆடுகின்ற மயிலுக்கு முன்னே பலாப்பழத்தைத் தூக்கிக்கொண்டு நிற்கும் குரங்கு உள்ளது என்று அகநானூறு 352-வது பாடல் விறலியின் நிகழ்த்தல் முறை குறித்துப் பதிவு செய்திருக்கிறது.

**ஆடுமகள்**

ஆடுமகளின் ஆட்டம் விறலியின் ஆட்டத்தி லிருந்து வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

**கழைபாடு இரங்க பல்லியம் கறங்க**
**ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று (நற். 95)**

அதாவது, புல்லாங்குழல் மற்றும் பல இசைக் கருவிகள் முழங்க, கயிற்றின் மேல் ஆடிய நிகழ்த்துநரை ஆடுமகள் என்று குறிக்கிறது. மேலும் பெண் கலை ஞர்கள் ஆடுமகள் என்றும் ஆண் கலைஞர்கள் ஆடுமகன் என்றும் விளிக்கப்பட்டுள்ளனர்.



**யானும் ஓர் ஆடுகள மகளே என்கைக்**
**கோடீஈர் இலங்கு வளை நெகிழ்ந்த**
**பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே**

என்று தலைவி கூறுகிறாள்.

**அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடுமகள்**
**கயிறூர் பாணியின் தளரும் சாரல் (குறி. பா. 193-194)**

என்கிற பாடல் வரிகள், ஆடுமகள் மூங்கில்களுக்கு இடையேயான கயிற்றின் மேல் நின்று ஆடுகின்றவள் என்பதை உணர்த்தும்.

வெறியாட்டில் ஆடிய மகள், ஆடுமகள் என்று அழைக்கப்பட்டுள்ளாள் என்பதை,

**அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்**
**வெறியுறு வனப்பின் வெய்துந்து நடுங்கும்**

என்ற வரிகள் காட்டுகின்றன.

**அகவன் மகள்**

தெய்வங்களை அழைத்துப் பாடுகின்ற கட்டுவிச்சி. சங்கு போல வெண்ணிறக் கூந்தலை உடையவளான இக்கட்டுவிச்சி வயதில் முதியவளாக இருக்கலாம்.

**அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக் கேட்பன்ன நல்நெடுல் கூந்தல்**
**அகவன் மகளே! (குறும். 23)**

என்று விளிக்கிறது. மேலும், குறுந்தொகை 298 பாடலும் "வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்" என்று குறிப்பிடுகிறது. இவர்கள் கையில் சிறுகோல் வைத்துப் பாடல் பாடும் மரபைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

**குன்ற நாடன் பிரிவிற் சென்று**
**நன்னுதல் பரந்த பசலைகண்டு அன்னை**
**செம்முது பெண்டிரோடு நெல்முன் நீறிஇக்**
**கட்டிற் கேட்கும் ஆயின்... (நற். 288)**

குறவர் பெண்கள் குறி சொல்லும் முறையை இக்கட்டுவிச்சியின் தொடர்ச்சியாகக் கொள்ளலாம். மேற்கண்ட பாடல் மூலம் தலைவியின் பசலை நோய்க்கான காரணத்தை அறிய கட்டுவிச்சி துணை கோரப்பட்டாள் என்பது தெரிகிறது. இவள் முதுமை மிக்கவள் என்பதும் தெரிகிறது. இக்கலைஞர்கள் தனித்தே இயங்கியுள்ளனர்.

**கிணைமகள்**

பொருநர் குழுவில் கிணைமகள் இணைந்திருந்தாள் என்பதை புறம். 111வது பாடல் கூறுகிறது. சில உரை ஆசிரியர் இவளையும் விறலி என்றும் கூறுவர். ஆனால், பொருநர் வாழ்வில் ஒரு பெண் கலைஞர் இருக்க வாய்ப்பில்லை என்கிறார் கா. சிவத்தம்பி (2005: 223). உடுக்கு, பறை ஆகிய இசைக் கருவிகளுடன் தொடர்புடைய கலைஞனை, இரும்பறைக் கிணைமகன் என்கிறது புறநானூறு (388).

**நெடுங்கழைத் தூண்டில் விடுமீன் நொடுத்துக்**
**கிணைமகள் அட்ட பாவற்புளிங்கூழ்**
**பொழுது மறுத்துண்ணும் உண்டியேன் (புறம். 399)**

கிணைமகள் தூண்டிலால் மீன் பிடித்து விற்று, புளிக்கூழ் சமைத்து வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுகிறாள்.

சங்கப் பாடல்களில் புலவர்கள் கலைஞர்களை ஆற்றுப்படுத்தும் பாடல்கள் மிகுதியாக உள்ளன. புறநானூற்றில் பாணனும் விறலியும் ஆற்றுப்படுத்தப் படுகின்றனர். பதிற்றுப்பத்தில் பாணனைக் காட்டிலும் விறலியே மிகுதியும் ஆற்றுப்படுத்தப்படுகின்றாள். பழந்தமிழ் நிகழ்த்துமரபில் பெண் நிகழ்த்துநர்களின் பங்களிப்பு அளப்பரியது. இதற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைக்கும் அகச்சான்றுகளே சான்று.

**பார்வை நூல்கள்:**


இராமசுவாமி மு., தமிழ்ச் சமூகத்தில் கூத்து- நாடகம் ஒரு தொடர் விவாதத்தை நோக்கி, செம்பி படைப்பகம், மதுரை, 2008.

சிவத்தம்பி கா., பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், சென்னை, 2004.

பக்தவத்சல பாரதி, பாணர் இனவரைவியல், உ.த.நி, சென்னை, 2012

,, தமிழகத்தில் நாடோடிகள்-சங்ககாலம் முதல் சமகாலம் வரை, வல்லினம், புதுவை, 2003.

ராஜ்கௌதமன், பதிற்றுப்பத்து - ஐங்குறுநூறு - சில அவதானிப்புகள், விடியல் பதிப்பகம், கோவை, 2011.


,, கலித்தொகை - பரிபாடல் ஒரு விளிம்பு நிலை நோக்கு, விடியல் பதிப்பகம், கோவை, 2011.

--------------------- சங்க இலக்கியங்கள்.

--------------------- தொல்காப்பியம்.

# வரலாற்றின் பொய்முகம்

**ஏ.எம்.சாலன்**




**பிராமண போஜனமும் சட்டிச் சோறும்**
ஆ.சிவசுப்பிரமணியன்
*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*
*₹ 75.00*

**இ**துவரையில் நம் நாட்டு வரலாற்றை எழுதிய வரலாற்றறிஞர்கள் பலரும், மன்னர்கள் ஆண்ட காலம், அவர்கள் நடத்திய போர், அடைந்த வெற்றி தோல்விகள், வீரமரணம், கட்டி எழுப்பிய கோவில்கள், அளித்த கொடைகள் போன்றவை களுக்கு முக்கியத்துவம் அளித்தே எழுதி வந்தார்கள்.

இம்மாதிரி எழுதப்பட்ட வரலாற்றில் மக்களுக் குரிய பங்கு என்ன? அக்காலகட்டத்தில் அவர்கள் எவ்வாறு வாழ்ந்தவர்கள்? என்னென்ன கொடுமை களுக்கெல்லாம் ஆளானார்கள்? இவற்றை எதிர்த்துப் போராட்டங்களில் ஈடுபட்டார்களா? மக்கள் எல்லோரும் சரி - சமமாக நடத்தப்பட்டார்களா? மக்கள் மீது என்னென்ன வரிகளெல்லாம் சுமத்தப் பட்டன? சாதி வேற்றுமை இருந்தனவா? விவசாயிகள், உழைக்கும் வர்க்கத்தினரின் நிலைமை எவ்வாறு இருந்தது? சமூகத்தில் சமயத்தின் பங்கு என்ன? மன்னர்கள் எந்த சமயத்திற்கு ஆதரவளித்தார்கள்? மன்னர்கள் ஆட்சியின் கீழ் பிற சமயத்தவர் எவ்வாறு நடத்தப்பட்டனர்?

இப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் பதிலைக் காண முடியவில்லை.

வடக்கில், வரலாற்றறிஞர்களான திரு. டி.டி. கோசாம்பி, டாக்டர். ரொமீலா தாப்பர். திரு. சர்தேசாய் போன்றவர்கள் மேற்கண்ட கேள்வி களுக்கான பதில்களையும் உள்ளடக்கி பல ஆய்வு களை நடத்தி, இந்திய வரலாற்றில் பல சாதனை களைப் புரிந்துள்ளனர். தெற்கில், அவர்கள் அளவுக்குச்

செயல்படவில்லை என்றாலும்கூட, திரு.கே.என். பணிக்கர், பேராசிரியர் நா.வா. அவரது 'ஆராய்ச்சி' மாணவர்கள் போன்றவர்கள் இதுவரையில் தென்னிந்திய வரலாற்றில் துலக்கப்படாத சில விஷயங்களைத் துலக்கியுள்ளனர்.

வரலாறு, தத்துவம், கலை - இலக்கியம், நாட்டுப்புறவியல் என, பல துறைகளில் பல புதிய தடங்களை ஏற்படுத்தினார்கள். இன்னும் அது, தொடர்கிறது.

இந்த அடிப்படையில் பேராசிரியர் நா.வா. அவர்களின் 'ஆராய்ச்சி' மாணவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவரான பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள், தமிழ்நாட்டின் பல திசைகளிலிருந்து கிடைத்த கல்வெட்டுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதி, சமீபத்தில் வெளிவந்த நூல், 'பிராமண போஜனமும், சட்டிச் சோறும்.'

இது, வெறுமொரு கல்வெட்டுச் சம்பந்தப்பட்ட காரியங்களை உள்ளடக்கிய நூல் மட்டுமல்ல; மாறாக, விஞ்ஞான ரீதியான மார்க்சீயக் கண்ணோட்டத்தில் தமிழக வரலாற்றை ஆராய்வதுடன், இடைக்காலத் தமிழகத்திலுள்ள வைதீகத்தைப் பற்றியும், சாதி உருவாக்கத்தைப் பற்றியும் பேசும் நூலும் கூட!

வடக்கில், இந்துமதத்தை ஆதரித்து, வளர்த்த குப்தர்கள் காலம் இந்திய வரலாற்றின் பொற்காலமாகப் போற்றிப் புகழப்பட்டது போல், தெற்கில் சேர, சோழ, பாண்டியர், பல்லவ மன்னர்களும் அளவுக்கு அதிகமாகப் புகழப்பட்டார்கள். பெரும்பாலும் இவர்களுக்குத் துதிபாடிய அறிஞர்கள் பலரும் தமிழக வரலாற்றைத் திராவிட இன மனோபாவத்துடனேயே அணுகினார்கள். ஆனால், அவர்கள் காலத்திலுள்ள 'உண்மை வரலாறு' அதுவல்ல என்று பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்களின் நூல், பல கல்வெட்டுச் சான்றுகளின் வாயிலாக நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

கோயில்கள் எவ்வாறு, மக்களின் நம்பிக்கையை மையமாகக் கொண்டு பல கொடைகளைப் பெற்று, அவர்களிடையே படிப்படியாக சமய உணர்வை வளர்த்தெடுத்தன என்றும், (இக்கால கட்டத்திலேயே சமூகத்தில், பெருந்தெய்வங்கள் வீற்றிருக்கும் கோவில்கள் மிகப் பெரிய சுரண்டல் கேந்திரங்களாக மாறிவிட்டன) பல கொடைகள் மூலமாகவும் மன்னர்களின் சலுகைகளின் காரணமாகவும் பிராமண குலம் சமூகத்தின் மேல் மட்டத்திற்கு எவ்வாறு உயர்த்தப்பட்டது என்றும், இவர்களுடைய ஆதிக்கத்திற்கு மனுசாஸ்திரம் எவ்வாறு உறுதுணையாக இருந்து வந்தது என்றும் பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் இந்நூலின் வாயிலாக நமக்கு எடுத்துக்காட்டுகிறார்.

'கோவிலுக்குப் பொன் அணிகலன்கள், உலோகப் படிமங்கள், பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளனர். கோவில் சந்தி விளக்கு, நந்தா விளக்கு எரிக்க கால்நடைகளையும், நிலங்களையும் கொடையாக வழங்கியுள்ளனர். இவ்வரிசையில் பிராமண போஜனமும் இணைகிறது' (ப-8).

இந்நூல் எடுத்துக்காட்டும் கல்வெட்டுச் சான்றுகள் பலவும் நிலவுடைமை அரசின் துணையுடன் பிராமணர்கள் பெற்ற சலுகைகளையும், (பிராமணர்களுக்குக் கண்டிப்பாக எல்லோரும் உணவு வழங்க வேண்டும்) பொன்னும், பொருளும், அணிகலன்களும், ஆடுமாடுகளும், நிலபுலன்களும், பல ஊர்களும், எவ்வாறு 'கொடை' என்ற பெயரில் கோவில் சொத்துக்களாக மாற்றப்பட்டன என்பதையும், பல சோழ, பல்லவர் கால கல்வெட்டுச் சான்றுகள் மூலம் பேராசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

சேலம் நகரிலுள்ள சுகவனேஸ்வரர் கோவிலில் உள்ள பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டு சொல்கிறதாம், நாள்தோறும் பிராமணர்களுக்கு உணவு வழங்க இயலாதவர்கள் சில குறிப்பிட்ட நாட்களில் உணவு வழங்க வேண்டும் என்று திருச்செங்கோடு மலைமேல் நாகர் குன்றுக்கு மேற்கில் உள்ள பாறையில் 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறதாம். இளங்கோனடிகள் என்பவனின் மனைவி மூரிக்காமக்கனார் என்பவள் திருச்செங்கோட்டுப் பன்னிரெண்டு நாட்டுப் பெருமக்களிடம் 20 கழஞ்சுப் பொன்னை வழங்கி, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஏகாதசி நாளில் 20 பிராமணர்களுக்கு உணவு வழங்க ஏற்பாடு செய்தாராம்!

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் ஆழ்வார் கோவிலில் உள்ள 955-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் வேளாண் வீரநாராயணன் என்ற செம்பியன் வேதி வேளார் என்பவன் 15 பிராமணர்கள் நாள் தோறும் உண்ண, சத்திரம் அமைத்துள்ள செய்தி இடம்பெற்றுள்ளது. இச்சத்திரத்தில் உணவு வழங்க ஆகும் செலவிற்காக இரண்டு வேலி, ஏழு மா அளவுள்ள நிலம் வழங்கியுள்ளான். இச்சத்திரத்தில் இரு நாழி அரிசி, கறிகாய்கறி ஒன்று, புளிக்கறி ஒன்று, புழுக்குக்கறி ஒன்று, நெய் அரைப்படி ஆகியவற்றுடன் வெற்றிலை, பாக்கு இரண்டும் வழங்கப்பட்டுள்ளனவாம்!' (ப-5, பத்தி-2).

இப்படி, இதற்கு உதாரணமாக இன்னும் பல கல்வெட்டுகளைச் சான்றாகக் காட்டும் பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் இதன் அடிப்படையில் முன்வைக்கும் சில கருத்துக்கள் நம்மை மிக ஆழமான முறையில் சிந்திக்க வைக்கின்றன.

அதாவது, 'தமிழ்நாட்டிலும் அயல்நாடுகளிலும் செயல்பட்ட தமிழ் வணிகக் குழுக்களும், இவற்றின் உறுப்பினர்களான வணிகர்களும், நெசவாளர், உலோகத் தொழில் புரிவோர் ஆகிய கைவினைஞர் களும், கால்நடை வளர்ப்போர், நிலவுடைமை யாளர் ஆகியோரும் தம்மிடம் இருந்த உபரிப் பணத்தை பிராமணர்களுக்கு உணவு வழங்கு வதில் முடக்கியுள்ளனர். இம்முதலீடு இவ்வுலக வாழ்வுக்குப் பயன்தராத முதலீடாக அமைந்தது. ஆதாயம் எதுவும் தராத இயங்கா முதலீடாக (dead capital) இம்முதலீடுகள் அமைந்து சமூக வளர்ச்சிக்குத் துணை புரியாது போய்விட்டன. வருவாய் ஈட்டும் துறைகளில் உபரியை முதலீடு செய்திருந்தால் பொருளியல் வளர்ச்சி மிகுந்திருக்கும் அல்லது நலத்திட்டங்களில் முதலீடு செய்திருந்தால் மக்கள் பயன் பெற்றிருப்பர். பிராமணரை மையமாகக் கொண்ட பிராமண போஜனம் மறுமையைக் கருதியே வழங்கப்பட்டதால் இம்மைக்கு உதவாமல் போய்விட்டன. இதனால் சமூக வளர்ச்சி தடை பட்டுப் போனது' என்கிறார், பேராசிரியர்.

திருவனந்தபுரத்திலுள்ள ஸ்ரீபத்மநாபன் கோவிலினுள்ளே பரிசோதனை நடத்திய போது பல கோடி ரூபாய் மதிப்புள்ள தங்க, வைர, வெள்ளி நகைகளும், சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. இந்தியாவில் பல கோவில்களிலும், இந்து மடங் களிலும் வைத்திருக்கும் தங்கச் சிலைகளும், வைரச் சிலைகளும், அவற்றின் பெயர்களில் கோவில் களுக்குள்ளே பெட்டியில் பூட்டி வைத்திருக்கும் தங்க, வைர நகைகளும் கூட இன்னும் ஏன், உள்ளேயே வைக்கப்பட்டிருக்கின்றன? அவைகளை யெல்லாம் ஏன் பணமாக்கி நலத்திட்டங்களில் முதலீடு செய்து, மக்கள் பயன்பெறும்படி செய்யாமல் இருக்கிறோம்? இம்மாதிரிப்பட்ட கோவில் சொத்துக் களும், மடங்களின் சொத்துக்களும் ஏன், சமூக நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படக்கூடாது? நாம் தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் ஏமாற்றப் படுகிறோம் போலிருக்கிறது - என்ற சிந்தனைகளை யெல்லாம் பேராசிரியர் தட்டி எழுப்பிச் செல்கிறார்.

'சட்டிச் சோறு' என்பது ஊதியமாகவும், கொடைப் பொருளாகவும் வழங்கப்பட்ட சோறு ஆகும். இது, கோயில் பணியாளர்கள், தேசாந்திரிகள், பரதேசிகள், சிவனடியார் ஆகியோருக்கு வழங்கப் பட்டதாகும்.

இந்தச் சட்டிச் சோறுக்குப் பின்னாலும் இரு வேறு நோக்கங்கள் உள்ளதாக பேராசிரியர் கூறு கிறார். முதலாவது மறுமைக்குப் புண்ணியம் தேடும் முயற்சி. இந்நோக்கத்தின் அடிப்படை யிலேயே தேசாந்திரிகளுக்கும் சிவனடியார்களுக்கும் சட்டிச் சோறு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக உலோக வடிவிலான பண ஊதியத்தைவிட, சோறு வடிவிலான ஊதியம் மலிவானது என்பது. அத்துடன் உணவால் ஒருவனை நிறைவடையச் செய்யும் போது வேலை வாங்கு வோனுக்கும் வேலை செய்வோனுக்கும் இடையில் பிணைப்பு ஏற்பட்டு வேலை செய்வோனிடம் எதிர்க்குரல் தோன்றுவது மட்டுப்படும்... சோறு போட்டு வேலை வாங்குவதென்பது நிலவுடைமைச் சமூகத்தின் சுரண்டல் முறைகளில் ஒன்று. காலனி ஆட்சியிலும்கூட இது தொடர்ந்துள்ளது என் கிறார், பேராசிரியர்.

இவை மட்டுமல்ல! கோயில்களில் எரிக்கப் படும் நந்தா விளக்கிற்குப் பின்னால் உள்ள நோக்கங் களையும் பேராசிரியர் பல இடங்களில் எடுத்துக் காட்டுகிறார்.

"பல்லவர் காலத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய வடபுல வைதீக நெறி சோழர் காலத்தில் வளர்ச்சி பெற்று உச்சக் கட்டத்தை எட்டியது. பல்லவர் காலத்தில் வைதீக சமயத்திற்கு எதிராகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டிருந்த அவைதீக சமயங்களான சமணம், பௌத்தம் ஆகியன வலு குன்றிப் போயின. பிராமணர்களுக் கென்று பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் என்ற பெயர்களில் தனிக் குடியிருப்புகளை சோழ மன்னர்கள் உருவாக்கினர். அக்கிராம நிர்வாக அமைப்புகள் கூட, சபை என்ற பெயரில் பிராமணர் களின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஊர்ப்பொது நிலங்களின் மீதும் கோவில் சொத்துக்களின் மீதும் பிராமணர்களும் வெள்ளாளர்களும் ஒன்றிணைந்து ஆதிக்கம் செலுத்தினர். சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதில் இணைந்து செயல்பட்டனர்" (பக்-20) என்கிறார்.

ராஜராஜனைப் பற்றி குறிப்பிடும் போது ஒரு சில உதாரணங்களை எடுத்துக்காட்டி, பேராசிரியர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

'குடிமக்களின் சொத்துக்களைக் கட்டாயமாக விலைக்கு வாங்கும் நம் கால அரசியல்வாதிகள் சிலரின் முன்னோடி என்று ராஜராஜ சோழனைக் குறிப்பிடுவதில் தவறில்லை' என மன்னராட்சிக் காலத்தில் மேல்சாதியினருக்கு ஒரு தண்டனையும்

கீழ்ச்சாதியினருக்கு ஒரு தண்டனையும் வழங்கப் பட்டதையும் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது மட்டுமல்ல; மேல்சாதியினருக்கு அத்தண்டனை முறையில் இருந்து விலக்களிப்பதும் மன்னர் ஆட்சியில் நடைமுறையில் இருந்துள்ளது தொடர் பான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ள தாகவும் இந்நூல் குறிப்பிடுகிறது.

பல கல்வெட்டுச் சான்றுகள் மூலம் கோவில் திருட்டுகளும் இந்நூலின் வாயிலாக எடுத்துக் காட்டப்படுகின்றன. குறிப்பாக, முதலாம் இராச ராசன் காலக் கல்வெட்டொன்றில் இக்குற்றச் செயல் இடம் பெற்றுள்ளதாம்!

பல்லவர் ஆட்சியில் நிலவுடைமைச் சமூகம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அத்துடன் பிராமணிய சமயத்தின் செல்வாக்கும் இணைந்து கொண்டது. பிராமணர்கள் ஏராளமான விளை நிலங்களைக் கொடையாகப் பெறலாயினர். எனவே இதைப் பாதுகாக்கும் முயற்சியாக இரண்டு கல்வெட்டுகள் இந்நூலில் எடுத்துக் காட்டப்படுகின்றன.

ஒன்று, 'பூதானத்திலும் மிகுந்த தானம் இருந்த தில்லை; இருக்கப் போவதுமில்லை. அதை அபகரிப் பதிலும் (மிகுந்த) பாவம் இருந்ததுமில்லை; இருக்கப் போவதுமில்லை (முதலாம் பரமேசுவர வர்மனின் செப்பேடு, கி.பி.687)

'பிராமணன் சொத்து கொடிய விஷம்; வேறு எந்தச் சொத்தும் விஷமாகாது. விஷம் ஒருவனைக் கொல்லும். பிரம்ம சொத்தோ புத்திர பௌத்திரர் களையும் கொல்லும்' என்ற காப்புரைத் தொடர்கள் உருவாயின. அத்துடன் மறுமை இன்பம், நரகம் என்பனவற்றை மையமாகக் கொண்டு 'இது மாறுவான் ஏழாம் நரகத்தில் கீழா நரகம் புகுவான்' (தெ.இ.க.22, பகுதி:1:85) என்ற காப்புரை வரிகளும் உருவாயின' என்கிறார் பேராசிரியர்.

மேலும் நிலவுடைமைக் காலத்தில் அரசு, பிராமணர்களுக்கு உயர்ந்த இடத்தை அளிக்க ஆரம்பித்திருப்பதையும் இந்நூல் எடுத்துக்காட்டு கிறது. மட்டுமல்ல; அவர்கள் பாவம் செய்தால் கூட அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கக்கூடாது. அவர்கள் மனிதர்களில் உயர்வான வர்கள், புனிதமானவர்கள் என்று வலியுறுத்தப் பட்டதால் பிராமணர்களைக் கொல்வது மிகப் பெரிய தோஷமாக (பாவமாகக்) கருதப்பட்டது. இப்பாவமானது 'பிரம்மஹத்தி' என்றழைக்கப் பட்டது. இச்சொல்லுக்கு 'பிராமணப் பேய்' என்று பொருள். பிரம்மஹத்தி பிடித்தவன் அதில் இருந்து எளிதில் விடுபட முடியாது என்றும் தெய்வ அருளினாலேயே விடுபட இயலும் என்றும், கூறும் தலபுராணக் கதைகள் உருவாகி உள்ளனவாம்!

இவ்வாறு ஏராளமான வரலாற்றுச் சேதி களையும், சமூகத்தில் பிராமணர் குலம் எவ்வாறு ஆதிக்கத்திற்கு வந்தது என்றும், மன்னராட்சி எவ்வாறு சாதி உருவாக்கத்திற்கும், மத வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தது என்றும் இந்நூல் பல அரிய வரலாற்றுத் தகவல்களையும் நமக்குத் தருகிறது.

நாட்டில், மன்னராட்சி ஒழிந்து ஜனநாயகம் மலர்ந்துவிட்டது. அரசியல் சுதந்திரம் கிடைத்தது. எழுத்து சுதந்திரம் கிடைத்தது. தொழில்கள் வளர்ந்தன. ஆனால், நிலவுடைமைக் காலத்தில் பண்பாட்டில் ஆதிக்கம் செலுத்திவந்த பிராமணீயம் மட்டும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அது, பிராமணனிலிருந்து தலித் வரை எல்லாச் சாதிப் பிரிவினரின் பண்பாட்டிலும் இன்னும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பண்பாட்டுத் தலைமையைப் பொறுத்தவரையில் 'நான்தான் உங்கள் அண்ணன்' என்று, அது, மார் தட்டிக் கொண்டு சிரிக்கிறது. அது, நிலவுடைமைச் சமூகம் உங்களுக்குத் தந்த தானம்! இவர்கள் தூக்கி எறியப்பட வேண்டும். கோவில்களுக்குள்ளிருந்து இவர்கள் துரத்தப்பட்டுப் பூசாரிகளாக பிற சாதியினரும் நியமிக்கப்பட வேண்டும். பல கோடி மக்கள் உழைப்பை உறிஞ்சி, இந்து மடங்களின் சொத்துக்களாக மாற்றிக் கொண்டு, மடங்களின் பீடங்களில் அமர்ந்து கொண்டு சுகபோகங்களை அனுபவித்து வரும் இந்து சந்நியாசிகள் கீழிறக்கப் பட வேண்டும். அதன் சொத்துக்கள் மக்கள் நலத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வின்றி, நாட்டில் எல்லா சாதியினரின் சிறு தெய்வ வழிபாடும், பண்பாடும் போற்றி வளர்க்கப்பட வேண்டும் என்றெல்லாம் பேரா. ஆ.சிவசுப்பிரமணியன் அவர்களின் 'பிராமண போஜனமும், சட்டிச் சோறும்' நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

நாட்டில், சனாதனிகளின் அரசியல் ஆதிக்கமும், அடங்கி ஒடுங்கிக் கிடந்த சந்நியாசிகளின் அரசியல் பிரவேசமும், உலக முதலாளித்துவ சக்திகளுடன் கைகோத்துக் கொண்டு, ஜனநாயக சக்தியை ஒடுக்கும் வகுப்புவாத சக்திகள் வளர்ந்து வரும் இக்காலகட்டத்தில், ஜனநாயக உணர்வு கொண் டோரும், சமத்துவத்தை விரும்புவோரும், மார்க்சீய வாதிகளும் விரும்பிப் படிக்க வேண்டிய ஒரு அபூர்வமான நூல், இது. ●



# அறம் பிறழும் அறிவுத்துறை

அரிஸ்டார்கஸ்



ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன் "படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால், போவான் போவான் ஐயோ வென்று போவான்!" என்று அறச்சீற்றம் கொண்டவன் பாரதி. அவனை அறச்சீற்றமடையவைத்த அறிவுச்சமூகம் இன்றளவும் அறம் பிறழ்ந்ததாகவே திகழ்கிறது. அதற்கான சமீபத்திய உதாரணங்கள்தான் கணபதியும், நிர்மலாதேவியும். அறிவுப்புல அடையாளங்களான துணைவேந்தர், பேராசிரியை முதலியன இன்று சூதிலும், பாவத்திலும் சிக்குண்டு கிடக்கின்றன.

2016-மார்ச்சில் கணபதி பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தராகப் பதவி ஏற்கிறார். பதவியேற்ற ஒரு மாதத்திலேயே, பல்கலையில் காலியாக உள்ள இணைப்பேராசிரியர், உதவிப்பேராசிரியர் உள்ளிட்ட 76 பணியிடங்களை நிரப்ப விளம்பரம் செய்கிறார். அப்போதிருந்தே உயர்கல்வித்துறைக்கும் துணை வேந்தருக்கும் சுமுகமான உறவு இல்லை. இடையில் பனிப்போர் உருவாகியது, அதனைத் தொடர்ந்து பல்வேறு குளறுபடிகள், சர்ச்சைகள், குற்றச்சாட்டுகள் வந்துகொண்டிருந்தன. இறுதியாக உதவிப்பேராசிரியர் பணிக்கு லஞ்சம் பெற்றதாகக் கைது செய்யப்பட்டிருக் கிறார். அவரது கைதிலிருந்து இன்றுவரையான நடவடிக் கைகள் தமிழக கல்வித்துறையில் ஆரோக்கியமான மாற்றத்தை உருவாக்கியிருக்கின்றனவா? உண்மையில் கணபதியின் கைது ஊழலுக்கும், முறைகேட்டிற்கும் எதிரானதுதானா?

தமிழகக் கல்வித்துறையில் (உயர்கல்வி, பள்ளிக் கல்வி) கடந்த பல ஆண்டுகளாக மிகக் கொடூரமான முறைகளில் லஞ்சம் வினையாற்றியிருக்கிறது. தொடக்கப் பள்ளி ஆசிரியரிலிருந்து துணைவேந்தர் பதவி வரை அனைத்தும் விலைபோயிருக்கின்றன. ஒவ்வொரு பணியையும் அதன் ஊதியத்திற்கு ஏற்ப விலை நிர்ணயித்து விற்றனர். ஆறாவது, ஏழாவது ஊதியக் குழுக்கள் நிர்ணயிக்கப்போகும் ஊதிய உயர்வை யெல்லாம் முன்கூட்டியே கணக்கிட்டு விலை நிர்ண யித்ததால், இன்று உதவிப்பேராசிரியர் பணிக்கு 30 லட்சம், இணைப்பேராசிரியர் பணிக்கு 40 லட்சம், பேராசிரியர் பணிக்கு 50-60 லட்சம் என விலை உச்சத்தைத் தொட்டு நிற்கிறது!

தமிழகக் கல்வித்துறையில் நிகழ்ந்துகொண்டிருக்கும் இச்சீரழிவுகளை நாம் எளிதில் புறந்தள்ள முடியாது. இவை தமிழ்ச்சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் நம்மால் கற்பனை செய்யக்கூட முடியாத அளவிற்குக் கொடூரமானவை.

பணம் கொடுத்தால்தான் பணி அல்லது பதவி என்ற சூதாட்டம், பணம் வைத்திருப்பவர்களையும், பணக்காரர்களையும் மென்மேலும் பணக்காரர்களாக மாற்றுகிறது; பணம் இல்லாதவர்களை கடன் வாங்க வைக்கிறது; அதற்கும் தகுதி இல்லாதவர்களை மனப்பிறழ்வுக்குத் தள்ளுகிறது. இது கல்வித்துறைக்கு மட்டுமல்ல, எல்லாத்துறைகளுக்கும் பொருந்தும். பணக்கார வர்க்கம் - நடுத்தர வர்க்கம் - அடித்தட்டு வர்க்கம் என பொருளாதார அடிப்படையிலான பகுப்பில் பணக்கார வர்க்கம் எந்தச் சூழலிலும் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. நடுத்தர வர்க்கம் எப் போதும் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்கிறது. இவ்விரு வர்க்கங் களுக்கு ஈடுகொடுக்க முடியாத அடித்தட்டு வர்க்கம் அல்லல்படுகிறது. நம் சமூகத்தில் எப்போதும் அடித் தட்டு மக்களின் பிரச்சினையே பிரதானமாக இருக்கிறது, ஆனால் அதுதான் பிரதான மாகக் கண்டுகொள்ளப்படாததாகவும் இருக்கிறது. அந்த அலட்சியப்போக்கே தமிழகக் கல்வித்துறையை இந்த அளவிற்குச் சீரழித்திருக்கிறது.

20-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளி லிருந்துதான் அடித்தட்டு மக்கள் உயர்கல்வியை நோக்கிப் பெருந்திரளாக வர ஆரம்பித்தார்கள். இட ஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை முதலிய சமூகநீதித் திட்டங்கள் அவர்களை கல்விப்புலங்களை நோக்கி இழுத்து வந்தபோது, அவர்கள் எதிர்கொண்ட சமூகச் சீண்டல்கள், புறக்கணிப்புகள் ஏராளம். "இப்பல்லாம் குப்பனும் சுப்பனுமெல்லாம் படிக்க ஆரம்பிச்சிட்டான்" போன்ற வன்மச்சீண்டல்கள் இந்திய/தமிழகக் கல்விப்புலங்களில் சர்வசாதாரணமாக எதிரொலித்தன.

கல்வி எல்லோருக்கும் பொதுவானதாக மாறிக் கொண்டிருந்த காலத்தில் பாடத்தைத் தேர்ந்தெடுப் பதில் வந்தது வர்க்கபேதம். மருத்துவமும், பொறி யியலும் ஏழைகளுக்கு எட்டாக்கனிகளாயின. மொழி, வணிகவியல் போன்ற குறைந்த செலவிலான படிப்பு களே அவர்களுக்குக் கிடைத்தன. அதற்கு மிகச்சிறந்த உதாரணம் தமிழ்ப்பாடம். இன்று தமிழை யார் படிக்கிறார்கள் என்று ஒரு புள்ளி விபரம் எடுத்தால், அதில் பொருளாதாரத்தில் பின்தங்கிய அடித்தட்டு வர்க்கம்தான் அதிகமாக இருக்கும். பணி வாய்ப்பு இல்லாத அல்லது குறைந்த ஊதியம் தரும் படிப்புகளை அவர்கள் தலையில் கட்டிவிட்டு எல்லோருக்கும் கல்வி கொடுக்கிறோம் என்று அரசாங்கம் வறட்டுச் சமத்துவம் பேசுகின்றது.

இவற்றிற்கெல்லாம் முகங்கொடுத்து கல்வியில் அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்த காலகட்டத்தில், குறிப்பாக 21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பதவிக்குப் பணம் என்ற கலாச்சாரத்தை உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தில் கைவைத்தனர். விரும்பிய பாடத்தைப் படிக்க வசதியில்லாமல், செலவு குறைந்த பாடத்தை எடுத்துப்படித்தவர்கள் படித்து முடித்து வேலைக்குப்போக முயலும் போது, லஞ்சம், சிபாரிசு போன்ற சமூக முறைகேடுகளால் தடுத்து நிறுத்தப் பட்டார்கள். இந்த நிலை மாறும் என்று ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் காத்திருந்தார்கள். பதிவு மூப்பு அடிப்படையில், தேர்வு/நேர்காணல் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு என தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் எதிரும் புதிருமாக அறிவித்துக்கொண்டிருந்த போது, என்றாவது அரசுப்பணி கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும், அதுவரை தனியார் அல்லது சுயநிதிக்கல்லூரிகளில் அன்றாடக் கூலிக்கு மாரடிப்போம் என்ற எண்ணத் தோடும், தனியார் கல்வி நிறுவனங்களுக்குள் நுழைந்த வர்கள், இன்று 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் பணி அனுபவத்தோடு, வெறும் 10 ஆயிரத்திற்கும் 15 ஆயிரத் திற்கும் ஆசிரிய அடிமைகளாக ஆக்கப்பட்டிருக் கிறார்கள். தான் பெற்ற பட்டம் தன்னை மேம்படுத்தும் என்று நம்பிக்கொண்டிருந்தவர்களை, வயிற்றுப்பிழைப் பிற்கே வழியில்லாதவர்களாக மாற்றியது நம் அரசாங்கம்.

ஆசிரியப்பற்றாக்குறை, ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் ஊழல் போன்ற பிரச்சினைகளில் அரசுக் கல்விநிறுவனங்கள் சிக்கி சிதைந்துகொண்டிருந்த கடந்த பதினைந்து ஆண்டுகளில்தான் தமிழ்நாட்டில் சுயநிதிக் கல்லூரிகள் பெருகின. சுயநிதிப்பிரிவில் கொட்டும் பணமழையைக் கண்டு, பாரம்பரியமான கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களும், அரசு உதவிபெறும் தனியார் கல்வி நிறுவனங்களும் சுயநிதிப்பிரிவை உருவாக்கி கோடிகளில் திளைக்கின்றன.

இந்த இடத்தில்தான் திமுக, அதிமுக முதலிய திராவிடக்கட்சிகள் கொள்கை ரீதியாகப் பெற்ற வெற்றியை மதிப்பிடவேண்டும். பிராமணரல்லாதாரை முதன்மைப்படுத்தித் தொடங்கிய பாரம்பரியத்தில் வளர்ந்த திராவிட கட்சிகள், இன்று பிராமணரல்லாத இடைநிலை சாதியினரான முதலியார், நாயுடு, ரெட்டியார், செட்டியார், கொங்கு வேளாளர், நாடார் உள்ளிட்டவர்களிடம் தனியார் கல்வியை ஒப்படைத் திருக்கிறன்றன. இந்தத் தனியார் கல்வி வணிகர்களே கல்வியின் தரத்தை சீரழித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சரியாகச் சொல்வதென்றால் தனியார் கல்லூரி கூட்டமைப்பும், குறிப்பிட்ட பெருந்தனியார் கல்வி நிறுவனங்களுமே யாரைத் துணைவேந்தராக்குவது என்பதைத் தீர்மானிக்கின்றன. இதன் நீட்சியாகத்தான் அரசு நிறுவனங்களில் நிகழும் முறைகேடுகளை அணுக வேண்டும். தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி கொடுப்பது போன்ற பல்வேறு அதிகாரங்கள் பல்கலைக் கழகத்தின் கையில் இருக்கின்றன. துணைவேந்தர் என்னும் பல்கலைக்கழக அதிகாரமையத்தை தனியார் கல்வி நிறுவனங்கள் கைப்பற்றி பல வருடங்கள் ஆகி விட்டன. பல்கலைக்கழக மானியக்குழுவின் கண்களில் மண்ணைத் தூவும் அளவிற்குக் கல்வித்துறையின் அதிகார மையங்கள் ஊழலில் புரையோடிக்கிடக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு திருச்செங்கோட்டில் உள்ள ஒரு தனியார் கல்விக்குழுமம் ஆய்வுக்கு வந்த பல்கலைக்கழக மானியக்குழுவிடம் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியப் பதிவேட்டில், ஆசிரியர்களுக்கு வழங்கும் உண்மை யான ஊதியத்தைக் குறிப்பிடாமல் மூன்று மடங்கு உயர்த்தி முறைகேடாக சமர்ப்பித்தது. பல்கலைக்கழக மானியக்குழுவும் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது, அங்கு பணியாற்றிய ஆசிரியர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியது.

கணபதி, நிர்மலாதேவி ஆகிய இருவரின் செயல் களுக்கு அவர்கள் மட்டுமே பொறுப்பல்ல. அவர்களை இச்செயல்களுக்கு ஆளாக்கியதில் பல்கலைக்கழகங்களின் வேந்தர் வரை பலருக்கும் பங்கிருப்பதுதான் அறிவுப் புலத்தின் அசிங்கம்.

அறிவுச்சமூகத்தின் கூட்டுச்சூதாட்டத்திலிருந்து தான் பாவம் தோன்றுகிறது. முதற்கட்ட விசாரணையில் நிர்மலாதேவி தெரிவித்த கருத்துக்களே இதற்கு சாட்சி. நிர்மலாதேவி செய்த பாவம், சகித்துக்கொள்ள முடியாதது, ஆசிரியப்பணியின் மாண்பைக் கெடுக்கிறது என்று பொதுச் சமூகம் தன் அறச்சீற்றத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது, பாரதியைப் போன்று. ஆனால் கற்றறிந்த அறிவுச்சமூகமோ தன் உண்மையான பண்புகளை இன்னும் தேடிக்கொண்டு தான் இருக்கிறது. ●


# மணிமேகலை மன்றம், இராஜபாளையம்
# படைப்பு இலக்கியப் போட்டி அறிவிப்பு

60ஆம் ஆண்டு மணி விழா முன்னிட்டு
புதிய தமிழ் நூல்களுக்கு பரிசளிப்பு வழங்கப்பட உள்ளது.
கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை சிறுவர் இலக்கியம் மொழிபெயர்ப்பு ஆகிய
ஒவ்வொரு துறைக்கும் ரூபாய் 5,000 பரிசளிக்கப்படும்
என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

2016-2017 ஆண்டுகளில் வெளியான முதல் பதிப்பு நூல்களின்
மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.
எழுத்தாளரின் முகவரி கைப்பேசி எண் சுயமுகவரியிட்ட
இரண்டு அஞ்சல் அட்டைகள் அனுப்பப்பட வேண்டும்.

போட்டிக்கான இறுதி தேதி 30-06-2018

**படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி**

**கொ.மா.கோதண்டம்**

தலைவர், மணிமேகலை மன்றம்,
146/1, குறிஞ்சித் தெரு,
பி.எஸ்.கே.நகர் அஞ்சல்,
இராஜபாளையம்.
கைப்பேசி எண்: 9944415322




# குழந்தை இலக்கியத்தில் 'காமிக்ஸ்'

சுகுமாரன்

**'கா**மிக்ஸ்' என்றால் தமிழில் சித்திரக்கதை அல்லது படக்கதை என்று சொல்லப்படுகிறது. 'காமிக்ஸ்' என்றால் வேடிக்கை என்பதுதான் பொருள். வேடிக்கை உருவங்கள், நகைச்சுவைத் துணுக்குகளுக்கு முக்கியத்துவம் இருந்ததால் 'காமிக்ஸ்' என்று பெயர் வந்திருக்கலாம்.

சித்திரம் வழியாகக் கதையை வாசிப்பதால் சித்திரக் கதையாகிறது.

தமிழில் சித்திரக் கதை தோன்றிய போது அது சிறுவர்களுக்கானது, பொழுது போக்கிற்காக வாசிக்கப்படும் ஒன்று என்றே கருதப்பட்டது. அதற்குக் காரணம் சித்திரக் கதையால் சிறுவர்கள் அதிகம் ஈர்க்கப்பட்டார்கள் என்பதுதான்.

சித்திரக் கதை என்பது காட்சி மூலமாக ஒன்றை வாசித்தலாக இருந்தது. இது ஒரு புதுவகையான வாசிப்பு முறை. இந்தப் புதுமை சிறுவர்களைக் கவர்ந்தது. அதுமட்டுமல்லாமல், படிப்போரைக் கதை நிகழும் களத்திற்கே அழைத்துச் சென்று பரவசப்படுத்தியது.

சித்திரக் கதைகள் சிறுவர்களுக்குப் பிடித்த மானவையாக இருப்பதற்கு காட்சிகள் மட்டும் காரண மல்ல, குறைந்த அளவிலான சொற்கள் கொண்ட கதாபாத்திரங்களின் உரையாடலும் காரணமே. ஒரு நாடகத் தன்மையான உரையாடல், காட்சி களோடு உரையாடல்களும் இணைந்த ஓர் இயக்கத் தன்மையே சித்திரக் கதைகளின் அடிப் படை. சித்திரக் கதையில் மொழி பாதி, ஓவியம் பாதி. அதனால் விறுவிறுப்பான படிக்கும் தன்மையை ஏற்படுத்தியது.

சித்திரக் கதை என்றால் எல்லோருக்கும் நினைவுக்கு வருவது 'தினந்தந்தி'யின் கன்னித் தீவு. கன்னித் தீவைத் தாண்டி பலருக்கு சித்திரக் கதையைப் பற்றித் தெரியாது.

1948-ல் தமிழில் முதல் சித்திரக் கதை சிறுவர் இதழான டமாரத்தில் வந்தது. அதைத் தொடர்ந்து ஓவியர் சந்தனு நடத்திய 'சித்திரக் குள்ளன்' என்ற சிறுவர் இதழில் 'வேதாள உலகம்', 'காட்டுச் சிறுவன் கண்ணன்' போன்ற சித்திரக் கதைகள் வந்து குழந்தைகளைக் கவர்ந்தன. அக்காலத்தில் வந்த எல்லா சிறுவர் இதழ்களிலும் (கண்ணன், அணில் மாமா, கோகுலம், ரத்ன பாலா, பூந்தளிர், பாலமித்ரா, பாப்பா மலர், பார்வதி) சித்திரக் கதைகள் இடம்பெற்றன. அதிலும் பார்வதி இதழில் வெளிவந்த சித்திரக் கதைகள் சிறுவர்களிடம் அமோக வரவேற்பைப் பெற்றன. ஓநாய்க் கோட்டை, கனவா? நிஜமா? டயல் 100, அவள் எங்கே? கண்ணாடி மாளிகை, வீர விஜயன் போன்ற சித்திரக் கதை களை உருவாக்கிய வாண்டு மாமாவே அதற்குக் காரணம். அவருக்கு 'கௌசிகன்' என்ற பெயரும் உண்டு. ஓவியரும் கூட.

சித்திரக் கதைகளை சிறப்பாக எழுதியவர் களில் குறிப்பிடத்தக்கவர் முல்லை தங்கராசன். கண்மணி காமிக்ஸ், முத்து காமிக்ஸ் ஆகியவற்றை




ஆரம்பித்து மேலைநாட்டு காமிக்ஸின் தமிழ் பதிப்பு போல் நடத்தினார்.

'கன்னித் தீவு' படக் கதைத் தொடர் தலை முறை தலைமுறையாகத் தொடர்கிறது. நாலு கட்டங்களில் நாலு படங்கள், இரண்டு வார்த் தைகள் என்று போடப்படுகிறது. உதாரணமாக, 'உள்ளே குதித்தான்... அங்கே... நீயா?!...' தொடரும் போட்டு விடுவார்கள். சித்திரக் கதைகளில் உள்ள எளிமை சிறுவர்களைப் படிக்க வைத்தது. மேலும் சித்திரக்கதை ஒரு கதாநாயகப் பாத்திரத்தின் மீது வடிவமைக்கப்பட்டதால் மனதைக் கவர்ந்தது. சிந்துபாத், வீரப் பிரதாபன், இரும்புக் கை மாயாவி, ஜேம்ஸ்பாண்ட், ஸ்பைடர்மேன், மாண்ரேக், பலே பாலு, சுப்பாண்டி என்ற பாத்திர உருவாக்கம் சித்திரக் கதைகளின் சிறப்பாகும்.

'காமிக்ஸ்' என்ற சித்திரக் கதை வெளிநாட்டி லிருந்து தமிழுக்கு வந்ததாகும். தமிழில் சித்திரக் கதைக்கு 70 வயதுக்கும் மேல் ஆகிவிட்டது. குழந்தை இலக்கியத்தில் 'காமிக்ஸ்'சின் பங்கு புறக்கணிக்கப்பட முடியாத ஒன்றாகும்.

தமிழில் சித்திரக் கதைகள் (Comics) 1950-80 காலகட்டத்தில் வெற்றிக் கொடி நாட்டியிருந்தன. சிறுவர் இதழ்கள், வெகுஜன வார, மாத, தனி இதழ்கள், புத்தகங்கள் என்று சித்திரக் கதை வியாபகம் பெற்றிருந்தது; வியாபாரமும் பெற்றிருந்தது.

1960-களில் வெளிவந்த டமாரம், மிட்டாய், கண்ணன் போன்ற குழந்தைகள் பத்திரிகைகளை விட அணில் அதிக வரவேற்பைக் குழந்தைகளிடம் பெற்றதற்குக் காரணம் அதில் இடம்பெற்ற சித்திரக் கதைகளே. அணிலின் ஆசிரியர் புவிவேந்தன் இதை சாதித்தார். பிரபல ஓவியர் உபால்டு சித்திரங்களை வரைந்தார். வீர, தீர, மாய ஜாலக் கதைகளுக்குப் புகழ் பெற்ற அம்புலி மாமாவுடன் அணில் போட்டி யிட்டது.

அணிலில் வந்த சித்திரக் கதைகளின் சாகச கதாநாயகர்கள் தமிழ், இந்திய மரபைப் பிரதிபலித்

தார்கள். ஆங்கிலத்தில் ஜேம்ஸ் பாண்ட்டைப் போல் தமிழில் சாகச மன்னன் வீரப் பிரதாபனை அணில் அண்ணா புவிவேந்தன் உருவாக்கினார். வீரப் பிரதாபனை கதாநாயகனாகக் கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட கதைகள் அணிலில் வந்தன. அந்தக் காலத்தில் சிறுவர் இதழான அணில் 50,000 பிரதிகள் விற்றன.

சித்திரக் கதையின் வெற்றி கல்கி, குமுதம், விகடன், ராணி போன்ற வெகுஜன வார, மாத இதழ்களையும் தாவிப் பிடித்தது. ஆனால் இவ் விதழ்களில் வெளிவந்தவை சிறுவர்களுக்கான சித்திரக் கதைகளல்ல. 'அப்புசாமியும் சீதாப் பாட்டியும்' போல் சிரிப்புக் கதைகளும் காதல் கதைகளும் குடும்பக் கதைகளும் சித்திரக் கதைகளாக வந்தன.

கல்கி சிறுவர்களுக்கென 'கோகுலம்' இதழை நடத்தியது. அதில் 16 பக்க அளவிற்கு புராண, இதிகாசக் கதைகளை சித்திரக் கதைகளாக வெளி யிட்டது.

ராணி 'காமிக்ஸ்'க்கென்று இதழை வெளி யிட்டது. ஆங்கில துப்பறியும் கதைகளின் சாயலில் சித்திரக் கதைகளை வெளியிட்டது.

தினப் பத்திரிகைகளும் தங்களது இணைப்பான சிறுவர் மலர், தங்க மலர், சிறுவர் மணி, தின பூமி இதழ்களில் சித்திரக் கதைகளை வெளியிட்டு வருகின்றன.

விகடன் பத்திரிகை சிறுவர் இதழாக சுட்டி விகடனை நடத்துகிறது. அதில் குறிப்பிடத்தக்க சித்திரக் கதைகளை வெளியிட்டுள்ளது. ஓவியர் முத்துவின் கை வண்ணத்தில் 'எலி ப்ரெண்ட்ஸ்' சித்திரக் கதை சிறுவர்களைக் கவர்ந்தது. உண்மை + உழைப்பு = உயர்வு என்ற சுதா சேஷய்யன் எழுதிய கதைக்கு மணியம் செல்வன் ஓவியம் வரைந்துள்ளார். 'கனவு நாயகன்' என்று அப்துல் கலாம் வாழ்க்கை வரலாறு சித்திரக் கதையாக வந்தது. 'ஐடியா அகிலன்' என்ற அறிவியல் படக் கதை வித்தியாசமானது.

இவ்வாறு சித்திரக் கதை சிறுவர்களுக்கான நீதிக் கதைகளாகவும் வீர தீரப் பண்புகளை வளர்க்கும் கதைகளாகவும் இருந்த நிலை மாறியது. பெரும் பதிப்பகங்கள் கையில் அதன் உள்ளடக்கம் கொலை, வன்முறை, மர்மம், பழிக்குப் பழி என மாறியது. காமிக்ஸ்க்குக் கட்டுப்பாடு இல்லாமல் போனது. அதனால் அவற்றை சிறுவர்கள் படிப்பது தீமை தரும் என்ற கருத்து ஏற்பட்டது. 'காமிக்ஸ்'-இல் பயன்படுத்தப்பட்ட ஒலிக் குறிப்பு சொற்கள் ('டமார், டுமீல், டுமீல், சதக்... சதக்... தொபுக்!...) வன்முறையாக மாறிப் போன கதைக்கு அடையாள மாக இருந்தன. மர்மக் கல்லறை, மரணக் குகை, காட்டேரிக் கானகம், தேடி வந்த தூக்குக் கயிறு, ரத்தப் பலி, சித்ரவதை, கொலை மாடி கோமாளி என்று 'காமிக்ஸ்'-இன் தலைப்புகளும் சிறுவர்கள் படிக்க தடை போட்டன. ஆனால் தடையையும் மீறி சிறுவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களுக்குத் தெரியாமல் ஒளித்துவைத்து படித்தனர். 'காமிக்ஸ்'-இன் கவர்ச்சி அப்படி!

லயன் காமிக்ஸ், முத்து காமிக்ஸ், பைகோ காமிக்ஸ், இந்திர ஜால் காமிக்ஸ் போன்றவை அந்நிய பண்பாட்டுத் திணிப்பு; திகில், மர்ம, சாகசக் கதைகள் வெளியிட்டன. துப்பாக்கிக் கலாச்சாரத்தை வளர்த்தன. இப்போக்கை ஆதரிப்பது போல் 'கல்கண்டு' இதழில் எழுத்தாளர் தமிழ்வாணன் 'மர்ம மனிதன்' எனும் தன் தொடர் கதைக்கு முன் அறிவிப்பாக 'இப்பொழுது நமக்கு வேண்டியது நீதிகள் அல்ல. துப்பாக்கியைக் கண்டு தூர ஓடக் கூடாது. அதைத் தொட்டுப் பார்க்கும் வீர உணர்ச்சி வேண்டும்' என்று கூறி துப்பாக்கிக் கதைகளின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதைக் கண்டு பெற்றோர் கலங்கினர். பெரியோர் திகைத்தனர். குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா தமிழ்வாணனின் கருத்தை எதிர்த்து கட்டுரை எழுதினார். 'குழந்தைகளுக்கு முக்கியமானவை நீதிக் கதைகளே: துப்பாக்கிக் கதைகள் அல்ல' என்றார்.

இதற்கு மறுதலையாக ராமகிருஷ்ண மடம் 'கதைமலர்' வரிசை புராண, இதிகாச, ஆன்மீக கதைகளை வெளியிட்டன.

மிகப் பெரிய நிறுவனமான 'அமர் சித்ர கதா' 400 தலைப்புகளுக்கும் மேலாக இந்திய புராண, இதிகாசக் கதைகளை சித்திரக் கதை களாக வண்ணத்தில் வெளியிட்டுள்ளன. ஜாதகக் கதைகள், தெனாலி ராமன், பீர்பால் கதைகள் மற்றும் தேசத் தலைவர்களின் வாழ்க்கைக் கதை களையும் சித்திரக் கதைகளாக ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்து வெளியிட்டு உள்ளன.

"இந்து மதத்திலுள்ள பெருந்தெய்வ வழி பாட்டை முன்னிறுத்தும் வகையில் அச்சிடப்படும் கதைகளை வெளியிடும் இந்நிறுவனங்கள், தமிழில் உள்ள நாட்டுப்புறக் கதைகளைக் கண்டு கொள் வதில்லை" என்று புதுவைப் பல்கலைக்கழக உதவிப்

பேராசிரியர் பா.இரவிக்குமார் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

30 வருடங்களுக்கு முன் தமிழ் காமிக்ஸ் நூல்களுக்கு இருந்த முக்கியத்துவம் இப்போது இல்லை. இன்று தமிழ் 'காமிக்ஸ்' காற்றோடு கலந்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஏனென்றால் நூலகங்களில் தேடினாலும் தமிழ் 'காமிக்ஸ்' நூல்கள் இல்லை, பதிப்பகங்களும் மறந்து விட்டன.

ஏன், தமிழ்க் குழந்தைகளுக்கு 'காமிக்ஸ்' நூல்கள் வாசிக்கப் பிடிக்கவில்லையா?

சமூகத்தில் 'காமிக்ஸ்'க்கு எதிரான மன நிலை இன்னமும் இருக்கிறது என்பது உண்மை. 'காமிக்ஸ்'-ஐ தொடர்ந்து படிக்கிறவர்கள் வளராதவர்கள் என்ற கருத்து இருக்கிறது. ஆனால் இது ஏற்புடைய கருத்தல்ல. 'காமிக்ஸ்'-ஐ வளர்த் தெடுத்திருந்தால் அதைப் படிப்பவர்கள் எப்படி வளராமல் போவார்கள்?

ஆங்கிலத்தில் 'காமிக்ஸ்' கல்வி, ஆய்வு, விளையாட்டு, விண்வெளி என்று பல்துறைகளில் வளர்கிறது. 'கிராபிக்' நாவல் (Graphic Noval) வளர்ச்சி கண்டுள்ளது. தமிழில் 'கிராபிக்' நாவல் ஒன்றிரண்டு மட்டுமே வந்துள்ளன. அவற்றில் ஒன்று மர்ஜென் சட்ராமியின் 'ஈரான் - குழந்தைப் பருவம்' ஈரானுக்குத் திரும்புதல் ஆகியவை. இவையும் போதிய கவனிப்புப் பெறவில்லை. சமீபத்தில் கல்கியின் பொன்னியின் செல்வன் 'கிராபிக் நாவல்' வடிவில் வந்துள்ளது.

தமிழில் 'காமிக்ஸ்' நூல்கள் குறையக் காரண மென்ன என்பதை ஆராய வேண்டும், காமிக்ஸ், கிராபிக்ஸ் நாவல் பெரும்பாலும் ஓவியரின் தளம். இத்துறையில் ஓவியராகவும் எழுத்தாளராகவும் இருப்பவர்களே கொண்டாடப்படுகிறார்கள்' என்கிறார் ஓவியர் 'ட்ராட்ஸ்கி' மருது. ஓவியராக இல்லாத எழுத்தாளர்களுக்கு 'காமிக்ஸ்' மீது அக்கறை இல்லை. ஆனால் குழந்தைகள் கொண் டாடும் கலை, இலக்கிய வடிவமாக காமிக்ஸ் இருக்கிறது.

மிகவும் உழைப்பை வேண்டுகிற வடிவம் 'காமிக்ஸ்'. அதற்குத் தமிழ்ப் பதிப்பகங்கள் தயாராக இல்லை. தரமில்லாத வெளியீட்டை குழந்தைகள் விரும்ப மாட்டார்கள். லாபமில்லாத வெளி யீட்டைப் பதிப்பகங்கள் விரும்ப மாட்டார்கள்.

குழந்தைகளை வசீகரிக்கும் 'காமிக்ஸ்'-ஐத் தமிழில் வளர்த்தெடுக்க என்ன செய்ய வேண்டும்?

'காமிக்ஸ்' ஓவியர் தளம் என்பதால் ஓவியர் களை மேன்மைப்படுத்துவோம்.

'காமிக்ஸ்'-ஐஅந்நிய பண்பாட்டுத் திணிப்பு, வன்முறை, மதச் சார்பு ஆகியவற்றிலிருந்து விடு வித்து நமது மண்ணின் அடையாளங்களுடன் வளர்த்தெடுப்போம்! ●


## திருத்தப்பட்ட சந்தா விவரம்






நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்



நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்
மாத இதழுக்கு
ஆண்டுச் சந்தாவை
புதுப்பித்துக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஆண்டு சந்தா**

**₹ 360/-**

**மாணவர்களுக்கு ₹ 300/-**

*சந்தா தொகையை மணியார்டர் மற்றும் DD அனுப்புவோர்*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்ப வேண்டும்.*

**நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்**
41 - பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098
***தொலைபேசி எண்: 044 - 26359906***